300

urati.”   Reg. No. M. 2911.

ஸ்ரீமுக-ஐப்பசி
1933ஹு செப்டம்பர்-நவம்பர்மீ

பாரதி

மாலை 5.   மணி 7.

ஓர் செந்தமிழ்
மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,

பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

9-JAN 1934
MADRAS

N33. 5. 7.
197895

Cardamom Sale Company, Limited.

(ஏலக்காய் விற்பனைக்-கம்பெனி, லிமிடெட்,)

தேவாரம்.

1913-ம் வருத்திய 7-வது இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

முதலை ரூ. 2,10,000.

ஏல விவசாயிகளையே அங்கத்தினராகக் கொண்டது. அங்கத்தினர்கள் ஏலத் தோட்டத்தில் விளையும் சரக்குகளை வட இந்தியாவிலிருக்கும் பல முக்கிய பட்டணங்களுக்கு அனுப்பியும், ஐரோப்பா அமெரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு அனுப்பியும் விற்றுக் கொடுக்கிறோம்.

தங்கள் ஏல மகசூலை நல்ல விலைக்கு விற்க வேண்டுமானால்; ஏல விவசாயிகள் தங்கள் சரக்குகளை எங்கள் மூலமாய் விற்க வேண்டுகிறோம்.

O. R. கோண்டுலு செட்டியார்,

மானேஜிங் டைரக்டர்,

ஏலக்காய் விற்பனைக் கம்பெனி, லிமிடெட்

தேவாரம்,

மதுரை ஜில்லா.

இந்திய மூலதனம்! சுத்த சுதேசிக் கம்பெனி!

தமிழ் நாடு
அஷ்யூரன்ஸ் & பாங்கிங் கம்பெனி Ltd.,

போடிநாயக்கனூர்.

அக்கிராசனாதிபதி:

பெரியகுளம் தாலூகா போர்
பிரஸிடெண்டும் போடிநாயக்கனூர் பிரபல லாண் லார்டுமான
1. மகா-ா-ாஸ்ரீ S. A. ரெங்கசாமி செட்டியா ரவர்கள்.

டைரக்டர்கள்:

2. ,, S. P. சுல்தான் அஹமெட் பதரதீன் ருவுத்தர் அவர்கள், லாண் லார்டு, போடி.
3. ,, V. புன்னைவனம் பிள்ளை, லாண் லார்டு & முனிசிபல் கவுன்சிலர், போடி.
4. ,, B. K. ஒன்னுராம் செட்டியார், லாண் லார்டு, போடி.
5. ,, S. S. M. பழனியப்பன் செட்டியார், வர்த்தகம், போடி.
6. ,, T. S. சாமிநாதன் அவர்கள், K. D. H. P. Co. Ltd., மூணார்.
7. ,, Dr. ஜான் ஜோசப், தந்த வைத்தியர், பெரியகுளம்.
8. ,, P. O. நயினன், கொட்டகுடி ரோட் ஓவர்சியர், போடி.

மானேஜிங் டைரக்டர்:

9. ,, T. S. கிருஷ்ணசாமி அய்யர், கொட்டகுடி ரோப்வே, போடி.
10. ,, செக்ரட்டரி: பாஸ்கரன்.

மேற்கண்ட கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்த டைரக்டர்களால் இக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டு நன்கு நடந்து வருகிறது. அன்னிய நாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் மூலமாக நமது திரவியம் அகலுவதை நிறுத்தி, இக் கம்பெனியில் சேர்ந்து பாலிசி எடுத்துக்கொண்டு பொருள் சேகரிக்க முயலுங்கள். எல்லா விபரங்களுக்கும் இக் கம்பெனி காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளுங்கள்.

சென்னை 600 008

ஈழ கேசரி.

இலங்கையிலிருந்து
ஞாயிற்றுக்கிழமை தோறும்
12 பக்கங்களுடன் வெளிவருவதோர்
சிறந்த வாரப் பத்திரிகை.

(நான்காவதாண்டு)

இலங்கை, இந்தியா, பர்மா, மலாய்நாடு
முதலிய விடங்களில் ஏராளமான
சந்தாதாரர்களையுடையது.

சிறந்த பேரறிஞர்களால் எழுதப்பெறும் இலக்கண இலக்கிய சம்பந்தமான அரிய கட்டுரைகளும், வரலாற்று ஆராய்ச்சி, அரசியல், பொருளாதார நிலை, சமயம், கல்வி, மாதர் பகுதி, சிறுவர் பகுதி, சமூக முன்னேற்றம் முதலிய பொது விஷயங்களும், வர்த்தமானங்களும் சிறப்பாக வெளிவருகின்றன.

தமிழன்பர்கள் யாவரையும் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஆண்டுச் சந்தா:

இலங்கை, இந்தியா, பர்மா ரூபா **4**.
மலாய் நாட்டுக்கு வெள்ளி **4**.

மாதிரிப் பிரதி இனம்! உடனே எழுதுங்கள்!!

விலாசம்:

"ஈழ கேசரி" அதிபர்
சுன்னாகம், இலங்கை.

தமிழரசு.

ஓர் சிறந்த மாதப் பத்திரிகை.

ஆசிரியர்: டாக்டர். மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்.

அறிவை விரிவடையச் செய்யும் வியாசங்கள், நல்ல நல்ல கதைகள், நகைச் சுவை ததும்பும் கட்டுரைகள், சரித்திரங்கள் முதலியவைகள் அடங்கியிருக்கின்றன. சித்திரப் படங்களால் இது அலங்கரிக்கப்பட்டு வெளிவருகிறது.

சந்தா விபரம்:

வருடம் 1-க்கு ரூ. 1—0—0. தனிப் பிரதி 1 அணா.
அயல் நாடுகளுக்கு ரூ. 2—0—0. ,, 2 ,,

விலாசம்:

மானேஜர், "தமிழரசு ஆபீஸ்,"
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

சன்மார்க்கன்.

ஓர் ஒப்பற்ற மாதப் பத்திரிகை.

நாவலூற்று சாமி சிவநேசம் அவர்களை ஆசிரியராகப் பெற்றுச் "சன்மார்க்கன்" பகுத்தறிவுக் கேற்றவாறு மக்கட் பிறப்பில் உயர்வு தாழ்வாகிய சாதி, சமய வேற்றுமைப் பிணக்குகளைக் களைந்து, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரத்துவமான உரிமைகளைப் பெறும் வழிகளும், உயரிய கட்டுரைகளும் நிரம்பப் பெற்று வெளிவருவது.

சந்தா விபரம்:

வருடம் 1-க்கு ரூ. 1—0—0. தனிப் பிரதி 2 அணா.
அயல் நாடு ,, 1—8—0.

விலாசம்:

மானேஜர், "சன்மார்க்கன்."
திண்டுக்கல்.



சிறந்த செந்தமிழ் மாலிகை.

பொருள் அடக்கம்.

மாலை 5. ஸ்ரீமுகஸு ஐப்பசிமீ மணி 7.

தொடர் எண்.		பக்கம்.
1.	காந்தி பஞ்சகம்— திரு. பாலி. சு. நெல்லையப்பர் அவர்கள் ...	489
2.	ஆசிரிய விருத்தம்— திரு. தேசிகவிநாயகன் அவர்கள் ...	490
3.	தீண்டாமைப் பேய்— பண்டித ஜனுப் K. அப்துல் சுகூர் அவர்கள் ...	491
4.	கண்ணும் கண்ணீரும்— திரு. S. V. வெங்கட்டநாராயண சர்மா அவர்கள், B.A., B.L.	492
5.	மகான் அரவிந்தரது நிருபங்கள்— ...	509
6.	மலர்ந்த மலர்கள்—"தமிழ் மகன்" கொய்து தொடுத்தது	517
7.	பூலோகத்தின் வயதுதான் என்ன?— திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)	524
8.	ஓர் கீழ் நாட்டுச் சர்வகலாசாலை— திரு. E. பரமசிவம் அவர்கள், B. A. ...	533
9.	அனுசூயா—"ஆனந்தா" ...	541
10.	ஆரம்பக் கல்வி—திரு. என். வேங்கடரமணன் அவர்கள்	550
11.	ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்— திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ...	559
12.	ஆராய்ச்சி மேடை—	565
13.	ஆசிரியக் குறிப்புகள்—	567

பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர். ரா. சுப்ரமணியம், பொறுப்பாசிரியர்.

மாலை 5	ஸ்ரீமுக-ஐப்பசி 1933 ஹு அக்டோபர்-நவம்பர்மீ	மணி 7

காந்தி பஞ்சகம்.

திரு. பாலி. சு. நெல்லையப்பர் அவர்கள்.

நாட்டினர்க் குயி ரளித்தாய், ஞாலத்திற் குயி ரளித்தாய்
பாட்டினில் அடங்கா உந்தன் பண்பினைப் போற்றுகின்றேன்
கேட்டினை ஒழிக்க வந்தாய், கேடில் சீர் அளிக்க வந்தாய்
காட்டின வழியிற் சென்றால் கதிபெறும் உலக மெல்லாம் 1.

அன்பு நன்னெறி மறந்த அவனிக்கன் புணர்த்த வந்தாய்
துன்பங்கள் ஒழிக்க வந்தாய், துயரங்கள் போக்க வந்தாய்;
இன்பங்கள் ஆக்கி யென்றும் இந்தமா நிலர்த்தோர்க் கெல்லாம்
நன்பதம் அளிக்க வந்தாய், ஞாலத்தில் உயர்ந்தாய் நீயே. 2.

சத்தியம் மறந்தோர்க் கெல்லாம் சத்தியம் உணர்த்த வந்தாய்
வித்தைகள் காட்டி இங்கு மெய்யறி வுணர்த்த வந்தாய்
புத்துயி ரளிக்க வந்தாய், பொங்குபே ரருளால் மீண்டும்
புத்தனார் வந்தா ரென்னப் போற்றி! ஓம் காந்தி போற்றி! 3.

அடிமைவாழ் வுழன்ற நாட்டார்க் காண்மையை உணர்த்தவந்தாய்
மிடிமைகள் சிறுமையாதி மென்மைகள் குலைக்க வந்தாய்
கடவுளர் அருளால் வந்தாய், கலங்கிய உலகத் தோர்க்கு
விடுதலை யளிக்க வந்தாய், வீரனே நீடு வாழி! 4.

கலியினை அழிக்க வந்தாய், கவலைகள் ஒழிக்க வந்தாய்
நலிவுகள் அழிக்க வந்தாய், நாடெலாம் வாழ வந்தாய்
வலியினை அளிக்க வந்தாய், வாழ்வுகள் அளிக்க வந்தாய்
நிலவிய காந்தி! நின்சீர் நீடூழி வாழி மாதோ! 5.

ஆசிரிய விருத்தம்.

திரு. தேசிகவிநாயகன் அவர்கள்.

(1)

என்றுமெனை யழிவிலாப் பொருளா யியற்றினை
ஈதுனது திருவுள்ளமே
ஈடற்ற கலமிது கவிழ்த்திக் கவிழ்த்தியுயிர்
வனைபுதுக்கி வைப்பாய்
குன்றினொடு குழியெலா மிச்சிறிய வேயின்வரு
குழல்கொண்டு சென்றுநீயுன்
குமுதவாய் வைத்து நவநவமான இசைகள்செவி
குளிரும்வண்ணம் உயிர்ப்பாய்
பொன்றுதலிலாத நிலைதரவல்ல வுன்கரப்
புனிதமுடல் தீண்டலாலே
பூரித்தவுள்ள மகிழ் வெல்லையற மாய்ந்தது
புகலரியமொழி குளறினேன்
நன்றுதவு கொடை கோடி யிச்சிறிய கைகளில்
நாளும்நீ யள்ளியிடினும்
நான்குறைக ளொழியாநள் வேண்டா திருந்திடேன்
ஞானவொளி வீசுமதியே.

குறள்வெண் செந்துறை.

(2)

உறுப்பனைத்து முயிர்தளிர்த் திவ்வுருவமையும் வண்ணம்
உனதுகரம் தீண்டுகுறிப் புணர்வதினா லெளியேன்
வெறுப்பரிய வுடலைநிதம் தூய்மைபெறக் காப்பேன்
மேலாகி யுயிர்க்குயிராய் விளங்கு பரம்பொருளே.

என்னுளத்து ஞானவொளி யேற்றிய மெய்தீபம்
இறையாகும் நீயதனாலிறை யேனும் பொய்கள்
மன்னுபல நினைப்புகளில் வந்து கலவாமல்
வன்மையொடு காத்திடுவன் வழுத்தரிய சிவமே.

ஏழையுளந் திருக்கோயிலெனக் கொண்டு நீயும்
எழுந்தருளி யிருக்கு முறையறிந் தடிமையங்கு
சூழவரு வஞ்சனையைத் துறந்து நிறையன்பாம்
சுந்தர நாண்மலர்மாலை சூட்டி நிதம்தொழுவேன்.

ஆயபலதொழி லெடுப்ப வாற்றல் தருவதுநீ
அதனாலென் செய்கரும மனைத்தூடு முன்றன்
தூயநிலை விளக்கிடவே துணிந்திடுவே னெவர்க்கும்
சொல்லரிய பரம்பொருளே சுயஞ்சோதிப் பொருளே.

தீண்டாமைப் பேய்.

பண்டித ஜனாப் K. அப்துல் சுகூர் அவர்கள்.

தீண்டக்கூடாதோ சாமி தொடக்கூடாதோ என்ற மெட்டு.

தீண்டாமைப் பேயே—நீ
சென்றோடுவாயே—கொடிய

1. முன்னாளி லுன்னை யெங்கள் மூதறிஞர் கொள்ளவில்லை
இந்நாளி லெப்படியோ யிடைபுகுந்து வாட்டுங் கொடுந் (தீ)

2. மக்கண் மனை யுறவு சுற்றம் மாடாடு கன்று செல்வந்
தக்கபடி பெற்றிருந்தும் தவிக்கவிட்டாய் நீ புகுந்து (தீ)

3. ஆலயந் தொழுவதற்கும் ஆற்றருகு செல்வதற்கும்
சாலைவழி நடப்பதற்கும் சவுக்கடியே கிடைக்கச் செய்த (தீ)

4. ஏரி குளங் குளிப்பதற்கும் இருந்து தண்ணீர் குடிப்பதற்கும்
சேரி வழி நடப்பதற்கும் செருப்படியே கிடைக்கச் செய்த (தீ)

5. வாகனங்களேறுதற்கும் வண்டிகளி லேறுதற்கும்
வேகரயி லிருப்பதற்கும் வெருட்டியுதை கிடைக்கச்செய்த (தீ)

6. வம்பர்களைச் சாமியென்றும் வண்டர்களை நேமியென்றும்
கும்பிடு போடாததினால் குறுக்கெலும்பை முறிக்கச்செய்த (தீ)

7. காலை முதல் மாலைவரை கஷ்டப்பட்டு வேலைசெய்த
கூலிதனைக் கேட்கப்போகக் கொடியவசை கேட்கச்செய்த (தீ)

8. பள்ளிகளில் படிக்கவென்றால் பாழுந் தீண்டாமை வந்து
உள் நுழைந்ததென வெருட்டி உபாத்தியாய ரோட்டச்செய்த (தீ)

9. பண்ணைகளில் நாள்முழுதும் பாடுபட்டு வரமழையால்
திண்ணைதனிலே யொதுங்கத் தீட்டெனவே யோட்டச் செய்த (தீ)

10. "பாரதி" மாஸிகையாம் பத்திரிகை படிப்போர் நின்னை
பாரத நாட்டைவிட்டுப் பரலோகம் சேர்க்கு முன்னே (தீ)

கண்ணும் கண்ணீரும். *

திரு. S. V. வெங்கட்டநாராயண சர்மா அவர்கள் B.A., B.L.

ஆநந்தசங்கரரது செல்வத்தைக் கண்டு கான்பூர் முழுதும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தது; அவ்விடத்திய வியாபார உலகமும் மூக்கின் மேல் விரல் வைத்துக்கொண் டிருந்தது. ஆனந்தசங்கரரின் பிதா ராமசங்கரர் இறக்கும் தருவாயிலும், ஏதோ கொஞ்சம் சம்பத்து இருந்தது உண்மை. ஆனால் 1000 அல்லது 1500 ரூபாய்க்கு மேலிராது. ராமசங்கரர் நல்ல வம்சத்தில் பிறந்தவர். அவருடைய குலத்தின் பெயர் அநேக நூற்றாண்டுகளாக "பரம்பரைப் பணக்காரர்" என்ற கணக்கிலேயே எண்ணப்பட்டு

* உக்ர என்பவர் ஹிந்தியில் எழுதிய கதையின் மொழிபெயர்ப்பு.

வந்தது. அவருடைய தகப்பனார் 'லக்ஷப்பிரபு' என்று அழைக்கப்பட்டார். ஆனால் ராமசங்கரரோ பணம் சம்பாதிப்பதில் சுத்த சூன்யம். பணம் சேர்ப்பதைக் காட்டிலும் அதைச் செலவு செய்வதிலேயே அவருக்கு மிகுந்த ஆனந்தம். இக் காரணத்தாலேயே தன் மரண காலத்தில் தன் மகன் ஆனந்தசங்கரருக்கு அதிகமான தன சம்பத்தை வைக்க முடியவில்லை.

ஆனந்தசங்கரரோ வெளில் வேலையில் கருத்துள்ளவர். மிகுந்த உழைப்பாளி. பஞ்சேந்திரியங்களையும் தன் வசத்தில் வைத்திருந்தார். பணம் சேர்ப்பதிலும மிகுந்த ஊக்கமுள்ளவர். தான் எடுத்த காரியத்தை எத்தடைகள் ஏற்பட்டாலும் அவைகளைப் பொருட்படுத்தாமல் நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஊக்கம் அவரிடம் நிரம்பியிருந்தது. களைப்பென்பது இன்னதென்பதே அவர் அறியார். இத்தகைய நற்குணங்களினாலேயே தகப்பன் இறந்த பத்து வருஷங்களுக்குள்ளாகவே தன் குடும்பத்தின் கீர்த்தியை முன்னைக் காட்டிலும் அதிகமாக கிலைநாட்டினார். பத்து வருஷத்திய விடா முயற்சியும் ஊக்கமுமே அவருக்குப் பூமகளின் கடாக்ஷத்தைத் தந்தருளியது. "இலக்குமி தன் கால்களை முறித்துக்கொண்டு இவர் வீட்டிலேயே இருக்கத் தொடங்கினாள்" என்று அவருடைய நண்பர்கள் அடிக்கடி சொல்லுவது வழக்கம்.

அவசியமானதைக் காட்டிலும், அதிகமும் எதிர் பார்த்ததைக் காட்டிலும் எவ்வளவோ மடங்குள்ள ஐஸ்வரியத்தை அடைந்த பிறகு, ஆனந்தசங்கரரது இருதயத்தினூடே மற்றொரு தந்தி தொனிக்க ஆரம்பித்தது.

"அப்பா! கொஞ்சம் பொறு! கேவலம் ஐஸ்வரியத்தை அடைந்ததினாலேயே இவ் வுலகத்தின் எல்லாச் சுகங்களையும் அடைந்து விட்டதாகக் கருதாதே; கொஞ்சம் யோசித்துப் பார். மோட்டார் வண்டிகள் என்ன! சாரட்டு வண்டிகள் என்ன! தோட்டந் துறவுகள் கணக்கற்ற வேலைக்காரர்கள் என்ன! மானம் மரியாதை, கீர்த்தி, வளர்ச்சி யடையும் வியாபாரம், அழகாகத் தோன்றும் எதிர் காலம் என்ன! இவை யெல்லாமிருந்தும் மதியில்லா வானம் போலும், தாமரையில்லாத் தடாகம் போன்றும் பிரகாசமற் றிருக்கின்றனவே! உனது வாழ்க்கைப் பிரயாணம் பாதிக்கு மேல் கழிந்துவிட்டது. இன்னும் சின்னாட்கள் கழித்து வேற்றுலகம் செல்ல வேண்டி வரும். எல்லோரும் இறக்க வேண்டியவர்கள்தான். இவ் வுலகமே அநித்தியம். பிறகு உன் செல்வமெல்லாம் என்ன ஆகும்!" என்று சப்தித்தது. அந்தராத்மாவின் இத் தூண்டுதலால் ஆநந்தசங்கரர் திடுக்கென்று விழித்துக்கொண்டார். "அடாடா! என்ன காரியம் செய்து விட்டேன்! எனது இரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த இந்

நிறைந்த செல்வம், இந் நாட்கள்வரை நான் செய்த காயக்கிலேசத்தின் அமிருத பலம் ஆகிய இவை எல்லாவற்றையும் இந் நன்றியற்ற உலகத்தில் வீணே விட்டு விட்டுச் செல்ல வேண்டி வருமே! இவ் வுலகத்தில் நம்முடையவர் என்று சொல்லிக்கொள்ள ஒருவருமில்லையே! கடவுளே, கடவுளே" என்று மனமுருகினார். மனிதனுடைய கஷ்ட திசையே பகவானை நினைவூட்டும் சிறந்த கருவி.

2

இதுவரை பணம் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த அவரது மனம் புத்திர பாக்யத்தை அடைய வேண்டுமென்ற பேரவாக் கொண்டது. இதுவரை கடவுளையே உபேக்ஷித்து வந்த ஆனந்தசங்கரர் கருணைக் கடலாகிய கடவுளின் கிருபைக்காக அபேக்ஷை செய்யத் தொடங்கினார். கணக்குப் புத்தகப் பூச்சியாக இருந்த ஆநந்தசங்கரர் வியாபாரி, துர்க்கா சப்தசதி, விஷ்ணுஸஹஸ்ர நாமம், மஹிம்னை ஸ்தோத்திரம் முதலியவைகளைப் பாராயணம் செய்யத் தொடங்கி மிகுந்த பக்திமானாய் விளங்கினார்.

ஆநந்தசங்கரரின் மனைவி நிர்மலமும் பிரசன்னமுமான முகத்தையுடைய சோனாராணி தன் கணவனைக் காட்டிலும் ஆயிர மடங்கு ஊக்கத்துடன் கடவுளின் பாதாரவிந்தங்களில் தன் மகப்பேற்றின் ஆசையை வெளியிடத் தொடங்கினாள். அந்த ஊரிலேயே சோனாராணியின் கால்கள் படாத வாசப்படியுள்ள கோயில் ஒன்றாவது பாக்கி கிடையாது. எல்லாத் தேவதைகளிடத்தும் தன் குறையை முறையிட்டுக் கொண்டாள். சூரிய புராணம், சேது மாகாத்மியம், ராமாயணம் முதலியவைகளைப் படிப்பதிலும் உபவாசம் இருப்பதிலுமே பகலில் சரிபாதிக் கழிந்தது. வாரத்தில் பாதி நாட்கள் விரதங்களில் கழிந்தன.

பதிபத்தினிகளின் தவப்பயன் சீக்கிரமே கிட்டிற்று. ஒரு மகவு பிறந்து ஆநந்தசங்கரரின் இல்லத்துக் காரிருளைப் போக்கினான். அம் மகவை கடவுளின் வரப்பிரசாதம் என்று கருதி அவனுக்கு ஜகதீசப் பிரசாதன் என்று நாமகரணம் செய்தார்.

3

பதின்மூன்று வருஷங்களுக்குப் பிறகு.

"இப்பொழுதே அதற்கவசரமென்ன?"

"என் தலையின் கேசமெல்லாம் வெள்ளியைப் போல் நரைத்து விட்டது பாருங்கள். என் முகத்திலுள்ள சுருக்கங்களைப் பாருங்கள். நாம் இனி அதிக நாள் ஜீவித்திருக்க மாட்டோம். நாம் இருப்பது என்ன நிச்சயம்?"

"இல்லை, இல்லை; அவ்வளவு சீக்கிரமாகப் போய்விடமாட்டோம். எனக்கு இன்னும் 50-க்கு மேலாகவில்லை போல் காணப்படுகிறது. குழந்தை இன்னும் கொஞ்ச காலம் படிக்கட்டும். அவனும் புத்தியறிந்தவனாக ஆகட்டும். கலியாணம் செய்து வைப்பதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?"

"இல்லை—ஆனால்—"

"நான் சொல்வதைத்தான் கேளேன். இன்னும் கொஞ்சம் படித்து புத்திசாலி யாகட்டும். இவ்வளவு அறியாப் பருவத்தில் கலியாணம் செய்வது உசிதமல்ல"

"அப்படியானால் உங்களுக்குக் கலியாணமாகும் போது நீங்கள் மிகுந்த அநுபவத்தை அடைந்திருந்தீர்களோ? ஒன்றும் வேண்டாம்! அடுத்த வீட்டு கோவிந்தப்பிரசாதர் பிள்ளைக்குக்கூடக் கலியாணம் ஆய்விட்டதே! அவனுக்கு வயது இன்னும் பத்துக்கூட நிரம்பவில்லை. எல்லோரும் இந்த வயதிற்குள்ளாகவேதான் தங்கள் பையன்களுக்குக் கலியாணம் செய்து விடுகிறார்கள்."

ஆநந்தசங்கரர் வாய்திறக்கவில்லை. சோனாராணி தன் கணவர் அருகிற் சென்று அவரது வலக் கையைத் தன் கைகளால் பிடித்துக் கொண்டு சொல்லலுற்றாள். "என்னுடைய வார்த்தையைக் கேளுங்கள். எனக்கு ரொம்பவும் ஆசையா யிருக்கிறது. ஒரு தடவை நமது குழந்தையின் தலையில் சுட்டிப் பட்டம் கட்டி முத்தம் கொடுக்க வேண்டும். அவனை மணையில் உட்கார வைத்து என் கண் குளிரப் பார்க்க வேண்டும். என் கண்மணிக்கு ஆரத்தை எடுத்து நான் ஜன்மம் அடைந்த பலனைப் பெறுவேன்" என்றாள்.

ஆனந்தசங்கரரது மனம் கரைந்து விட்டது. யோசித்தார். சோனாராணி பின்னும் சொல்லலுற்றாள்.

"இதனால் கெட்டுப் போவதுதான் என்ன? நமது குழந்தையோ ஒருவரிடமும் சென்று ஊழியஞ் செய்து வயிறு வளர்க்க வேண்டியதில்லை. பணங் காசுகள் தேடவேண்டியதில்லை. கலியாணம் ஆன பிறகும் வாசித்துக்கொண்டே இருக்கட்டுமே! இன்றைக்கு இருக்கிறோம்; நாளை இருப்போம் என்று என்ன நிச்சயம்?"

"நல்லது! நீ சொல்வது சரிதான்! ஆனால்—"

"இதில் ஆனால் கீனால் ஒன்றும் சொல்லாதீர்கள். நல்லது என்று உங்கள் வாயில் வந்துவிட்டது. பேச்சும் இத்தோடு முடிந்தது. இதே வருஷம் கூடிய சீக்கிரத்தில் நானும் கலியாணக் காரியங்கள் செய்ய ஆரம்பிக்கிறேன்"

ஆனந்தசங்கரர் தம் குலப் புரோகிதரான ராமசந்திரதீக்ஷதரை அழைத்து மிகுந்த பயபக்தியோடு சொல்லுவாராயினர். ‘நீங்களே எங்களுக்குக் கடவுள் போன்றவர். தங்களுடைய ஆசீர்வாதத்தினாலேயே நாங்கள் சுகமாக இருந்து வருகிறோம். தங்களது அருளினாலேயே நாங்கள் பிரயாகையிலுள்ள ஹரப்பிரசாத் பாபுவினுடைய குமாரியை நமது பையனுக்கு மணஞ் செய்துகொள்ள ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம். வரதக்ஷிணையை நான் விரும்புவதில்லை என்பது தங்களுக்கே தெரிந்த விஷயம். கடவுளின் கிருபையினால் அந்த விஷயத்தில் எனக்கு யாதொரு குறைவுமில்லை. ஹரப்பிரசாத் பாபுவின் நிலைமை அவ்வளவு நன்றாக இல்லை என்று நான் கேள்விப்படுகிறேன். ஆனால் அவர் நல்ல குலத்தில் பிறந்தவர். அதுவே போதுமானது. குலந்தான் கௌரவத்தைக் கொடுக்கக் கூடியது. ஆனால் பணமோ நமது சரித்திரத்தின் அழுக்குக்குச் சமானமானது.’’

இதைக் கேட்டு தீக்ஷிதர் தனது அங்கவஸ்திரத்தைச் சரிப்படுத்திக் கொண்டு “நீ சொல்வது மிகவும் சரி. நீ மிகவும் உதார குணமுள்ளவன். நீயே ராஜா. கடவுள் உனக்குத் தீர்க்காயுளைக் கொடுத்தருள்வாராக’’ என்று சொன்னார்.

“எல்லாம் தங்களது கிருபை. ஆனால் தாங்கள் எனக்காகக் கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும். அக் காரியம் தங்களால்தான் ஆகக்கூடியது. தயவு செய்து ஒரு முறை தாங்கள் பிரயாகைக்குச் செல்ல வேண்டும். பெண்ணைப் பார்த்துவர வேண்டும். இக் காரியம் தீர விசாரியாமல் செய்யக்கூடிய காரியமல்ல’’ என்று ஆனந்தசங்கரர் மிகவும் வணக்கமாய்ச் சொன்னார்.

தீக்ஷதர் இதற்குச் சம்மதிப்பதில் சிறிதும் நேரமாகவில்லை. அவர் எஜமானனிடமிருந்து வழிச் செலவிற்காக ரூபாய்கள் பெற்றுக்கொண்டு, எஜமானனுக்கு நூற்றுக் கணக்கான ஆசீர்வாதங்களைக் கொடுத்துவிட்டு மறுநாளே பிரயாகை வந்தடைந்தார்.

4

ஹரப்பிரசாத் பாபுவுக்கு சுரூபா, ஹீரா என்று இரண்டு குமாரத்திகள். சுரூபாவின் வயது 15. ‘கலியாணஞ் செய்ய வேண்டிய வயதையும் கடந்துவிட்டாள்’ என்று ஜன சமூகம் சொல்லிக்கொண்டிருந்தது. ஹீராவின் வயது 12. மற்றும் அவருடைய இரண்டு பிள்ளைகள் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களும் கலியாணப் பருவத்தை அடைந்தவர்கள். ஆனால் அவருடைய பண நெருக்கடியான நிலைமையைப் பார்த்து, பெண் கொடுக்க வருபவர்கள் மிகவும் குறைந்தவர்களே இருந்தார்கள். அதுவுமல்லாமல் இரண்டு பெண்கள் கலியாணத்திற்கு உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். பிள்-

-ளைகளுக்கென்ன அவசரம்? இக் காரணங்களினால் பிள்ளைகளுக்கு இன்னும் விவாகமாகவில்லை. பெண்களின் கலியாணச் சிந்தையே ஹரப்பிரசாத் பாபுவின் தூக்கத்தை அபகரித்துக்கொண்டது. அவருக்குச் சாப்பாடும் பிடிப்பதில்லை. உலகமே காரிருள் சூழ்ந்ததாகக் காணப்பட்டது. ஆனந்தசங்கரரின் புதல்வனை ஜகதீசனை ஒருமுறை பார்த்திருந்தார். பையன் அழகாகவும் வசீகரமாயும், வாட்டசாட்டமாயும், நல்ல நிறமுடையவனாயும் இருந்தான். தகப்பனோ குபேர சம்பத்துடையவன்; மேலும் தகப்பனாருக்கு ஒரே மகன். இவ்விஷயங்களை யெல்லாம் யோசித்து ஹரப்பிரசாத் நாக்கில் ஜலம் ஊறியது. பெண்ணின் வயது அதிகந்தான். ஜோடி சரியானதல்ல என்பது உண்மையே, ஆனால் இப்படிப்பட்ட சமயத்தைக் கைவிட அவருக்கு மனம் வரவில்லை. தலைமேலிருக்கும் பாரமும் குறையும்.

ஹரப்பிரசாத் முன்போல் உன்னத நிலைமையிலிருந்தால், ‘பெண்ணைப் பார்க்கவேண்டும்’ என்ற வார்த்தைகளைக் கேட்ட உடனே அவருக்கு மிகுந்த கோபம் வந்திருக்கும். அதை மிகுந்த அவமானம் என்று கருதுவார். ஆனால் தற்கால நிலைமையை உத்தேசித்து அவர் புரோகிதரைப் பார்த்துச் சொன்னார்: “தாங்கள் இன்ன காரியத்திற்காக இங்கே வந்திருக்கிறீர்கள் என்று வீட்டில் தெரிந்தால், பெண் எதிரில் வர வெட்கப்படுவாள். ஆகையால் அவளை இப்பொழுதே வரவழைக்கிறேன். முதலில் நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள். பிறகு மற்ற விஷயங்களை யோசிப்போம்’’ என்று சொல்லிவிட்டுக் “குழந்தாய்! குழந்தாய் சுரூபா! எனக்குக் கொஞ்சம் குடிக்கத் தீர்த்தம் கொண்டுவாம்மா!’’ என்று கூப்பிட்டார். உள்ளேயிருந்து “இதோ வந்துவிட்டேனப்பா!’’ என்று பதில் வந்தது.

பளபளவென்று தங்கம்போல் மின்னிக்கொண்டிருந்த ஒரு பித்தளைப் பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டு சுரூபா வந்தாள். தன் தகப்பனாருக்கருகில் ஒரு அன்னியர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துக் கொஞ்சம் தயங்கினாள். “பரவாயில்லை, கொண்டுவா’’ என்று தகப்பனார் கொஞ்சம் தைரியம் கொடுத்தார்.

அறுபது வயதுள்ள கிழத் தீக்ஷதர் கண்களைத் தேய்த்துக்கொண்டு இச் சௌந்தரியக் குவியலைப் பருக ஆரம்பித்தார். எவ்வளவு சௌந்தரியம்! எவ்வளவு வசீகரம்! சுருபாவின் அழகு ஊமையையும் பேச வைத்திருக்கும். தீக்ஷதர் மெய்மறந்துவிட்டார். சுருபா எதிரில் நின்றுகொண்டிருக்கும்வரை தீக்ஷதரின் சுய அறிவு பரதேசஞ் சென்றுவிட்டது. அவள் உள்ளே சென்று மறைந்தபிறகு தான் தீக்ஷதருக்குத் தன் நினைவு வந்தது. யோசிக்க ஆரம்பித்தார்.

ஆஹா! சுரூபாவின் அழகை என்னென்று வர்ணிப்பது! கிருஹலக்ஷ்மீ என்றே சொல்லவேண்டும். ஜகதீசனுக்கு...........

ஜகதீசன் பெயர் நினைவுக்கு வந்தவுடனே அவனுடைய உருவம் அவர் கண்முன் நின்றது. ஜகதீசன்—சுரூபா— சுரூபா—ஜக—தீச. சுரூபா யௌவன மதத்தில் இருக்கிறாள். ஜகதீசனோ இப்பொழுது தான் குழந்தை. ஈடு சரியாக இல்லை என்று இவ்வாறு யோசித்துக் கொண்டிருக்கையில் ஹரப்பிரசாதர் தீக்ஷதரது முகத்தையே நோக்கிக் கொண்டிருந்தார். தீக்ஷதரது மனோபாவங்களையும் நன்றாகப் படித்துக்கொண்டார். உலகத்தில் மிகவும் அநுபவம் பெற்றிருந்த ஹரப்பிரசாதர் தீக்ஷதரது மனத்திலுதித்த கடைசி எண்ணத்தைக் கண்டு கலவரமடைந்தார். தீக்ஷதருக்கு இச்சமயம் யோசிப்பதற்குப் போதிய அவகாசம் கொடுத்தால் ஆபத்து விளையும் என்று நினைத்துக்கொண்டு, "தீக்ஷதரே! பார்த்தீர்களா? சுரூபா சாக்ஷாத் லக்ஷ்மியே! நன்றாகப் படித்துமிருக்கிறாள்; பாடவும் தெரியும்" என்று சொன்னார். தீக்ஷதர் மௌனஞ் சாதித்தார்.

"இவள் பள்ளிக்கூடத்தில் நான்காவது பாரம்வரை படித்திருக்கிறாள். தையல் வேலையும் நன்றாகத் தெரியும். வீட்டுக் காரியங்களில் கைதேர்ந்தவள்."

தீக்ஷதரின் திருவாய் மௌனமாயிருந்தது. ஆனால் அவரது மனப்பான்மைகளைக் கண்கள் வெளியிட்டன. "நீங்கள் சொல்லுவதெல்லாம் சரிதான், ஆனால் பெண் கொஞ்சம் பெரியவள்" என்று தீக்ஷதர் பதிலளித்தார்.

இதற்குப் பிறகு பெண்ணின் தகப்பனாருக்கும் புரோகிதருக்கும் என்னென்ன சம்பாஷணைகள் நடந்தனவோ அவைகளைச் சொல்லுவது அசாத்தியம். ஆனால் புரோகிதர் ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சொல்லும்போது மிகுந்த முக மலர்ச்சியோடிருந்தார். திருடன் திருட்டில் காரியசித்தியை அடைந்தான் போலும் தீக்ஷதர் வண்டியில் ஏறி உட்கார்ந்தார். வண்டி புறப்படும் சமயத்தில் ஹரப்பிரசாத் பாபு தீக்ஷதர் கையில் "வழிச் செலவுக்காக" 501 ரூபாய் கொடுத்தார்.

பிரயாகையிலிருந்து கான்பூர் அடைவதற்குள் புரோகிதர் அந்த ரூபாய்களை ஐம்பது முறை எண்ணினார். சில சமயம் அவரது கை நடுக்குற்றது. சில சமயம் இருதயம் படபடவென்று அடித்தது. சில சமயம் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஆசனத்தமர்ந்தார். புரோகிதரது மனதில் கோரமான யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

5

தனக்குக் கலியாணம் என்ற சமாசாரத்தைக் கேட்கும் ஜகதீசனுக்கு அதில் ஒருவிதமான புதுமையும் காணப்படவில்லை. எத்தனையோ பேருக்குக் கலியாணமாகிறது என்று அவன் கேட்டிருக்கிறான்; பார்த்துமிருக்கிறான். உண்பது, உடுப்பது, உறங்குவது, விழிப்பது முதலியவை மனிதனுக்கு எவ்வளவு இன்றியமையாதனவோ அதுபோல் கலியாணமும் ஒன்று என்று நினைத்துக்கொண்டிருந்தான். கலியாண ஏற்பாடுகளைப் பார்த்துச் சந்தோஷமடைந்தான். ஆனால் அவனுடைய முக மலர்ச்சி, தன் மனதிலிருந்தே உண்டானதல்ல. மற்றவர்கள் சிரிப்பதைப் பார்த்துச் சிரிக்கும் குழந்தை போல் அவனுடைய நிலைமையும் இருந்தது. கொட்டு முழக்கம், ஆடையாபரணங்கள், மங்கள வாத்தியங்கள், மந்திர உச்சாரணம், பூஜை புனஸ்காரங்கள், வரவேற்புக்கள் முதலியவைகளோடு மிகுந்த குதூகலமாகக் காணப்பட்டது. சுட்டிப் பட்டம் கட்டிக்கொள்வது முதலில் மனதிற்கு மிகவும் இன்பகரமாயிருந்தது; ஆனால் சிறிது நேரம் கழித்து மிகவும் பாரமாகத் தோன்றிற்று. விவாக மண்டபத்தில் மணப்பெண் தன் அருகில் உட்காருவதைப் பார்த்துப் 'பெரிய தமாஷ்' என்று நினைத்துக்கொண்டான் பெண் எப்படியிருப்பாள்? சிவப்போ! கருப்போ! ஆம்! ஆம்! சிவப்புத்தான். அம்மாளே சொல்லியிருக்கிறாள். அழகாகவுமிருக்கிறாளாம். இதுவும் அம்மாளே சொல்லியிருக்கிறாள். பெண் எப்படியிருக்கிறாள்! கொஞ்சம் பார்க்கலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தான்.

கலியாணம் முடிந்த பிறகு ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் மறைந்தன. மணப்பெண் ஒரு வருட காலம் தன் தகப்பன் வீட்டிலேயே இருக்கச் சென்றுவிட்டாள். ஆநந்த சங்கரரின் மனப்பான்மையை அநுசரித்து ஹரப்பிரசாதரும் பெண்ணை மாமனார் வீட்டுக்கு அனுப்புவதற்காக வற்புறுத்தவில்லை. ஜகதீசன் தன் படிப்பில் ஆழ்ந்திருந்தான். ஒரு பிராணியைத் தன் கழுத்தில் கட்டிவிட்டார்கள் என்பதைக்கூட மறந்தான்.

கடைசியில் ஒருநாள் பெண்ணும் புக்ககம் வந்து சேர்ந்தாள். பதினாறு வயது நிரம்பிய சுரூபா தன் கணவனது வீட்டில் கால் வைக்கும்போது அவளுக்கு யௌவனத்தின் வஸந்த காலம். ஜகதீசனோ பதினான்கு வயதுள்ள அறியாச் சிறுவன். ஒன்பதாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான்.

ஆவணி மாதம். இயற்கை தனது உலகமாகிய மைதானத்தில் உன்மத்தம் நிரம்பிய குடத்தை உருட்டிவிட்டாள். நிசர் என்னும் சுந்தரி, இருண்ட மேகங்களின் கூட்டத்தைப் பார்த்தும், மயிலினங்

களின் சத்தத்தைக் கேட்டும், குயில், சாதக பக்ஷி இவைகளின் குரலோசையைக் கேட்டும் புளகாங்கிதமாயிருந்தாள். வீட்டின் மூன்றாம் மாடியில் ஓர் அறையில் ஒரு சாய்வு நாற்காலியின்மேல் உட்கார்ந்துகொண்டு, சுரூபா ஆவணி மாதத்தின் இயற்கையமைப்பைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் யௌவனத்தின் பாரத்தைத் தாங்கமுடியாமலிருந்தாள். உன்மத்தம் நிரம்பியவளாயிருந்தாள். இயற்கை என்னும் மாதும் யௌவனத்தின் பாரத்தால் தத்தளித்துக்கொண்டிருந்தாள். உன்மத்தம் நிறைந்திருந்தாள். ஆனால்—இருவருடைய நிலைமையிலும் எவ்வளவு வித்தியாசம்! ஒன்று ஆகாயம் என்றால் மற்றொன்று பாதாளம்.

"இதுவோ சுகம்?" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு யோசிக்கலானாள். "இதுவோ சுகம்! இவ்வளவு யௌவனம்! இவ்வளவு உன்மாதம்! இவ்வளவு அழகு! இவ்வளவு ஆசை! எல்லாவற்றையும் கையில் ஏந்திக்கொண்டு வருஷக்கணக்காய்க் காத்துக்கொண்டிருக்கிறேன்; என் 'கடவுள்' விழித்துக்கொண்டால் இவைகளால் பூஜை செய்யலாம் என்று உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்; எனது அழகையும் யௌவனத்தையும் சபலமாக்கலாமென்று, ஆனால்......"

காற்று வேகமாக வீசிக்கொண்டிருந்தது. வெளியே மழை கனமாகப் பெய்துகொண்டிருந்தது. வாயு பகவான் மழை என்னும் கஜானாவிலிருந்து நீர்த்துளி என்னும் நன் முத்தங்களை ஒரு கை நிறைய எடுத்துச் சுரூபாவின் மேல் வீசி எறிந்தான். சிலவை கன்னங்களின் பேரிலும், சிலவை அதரத்தின் பேரிலும் விழுந்தன. இரண்டு மூன்று துளிகள் மார்பின் பேரிலும் விழுந்தன. ஆஹா! சுரூபா நடுநடுங்கினாள். அவளுடைய தேகத்தில் நெருப்புப்போல் எரிச்சல் உண்டாயிற்று. அவளை இவ்வாறு தகிக்கும்படி அம் முத்துக்களில் என்ன சக்தி நிரம்பியிருந்தன?

"எனது ஆராதிக்கும் கடவுள் மிகவும் சிறுவர். குழந்தை. ஒன்று மறியாதவர். மழை காலம்—இந்த மேகங்கள்—இந்த சுகம்—ஐயோ!"

அதே சமயத்தில் வகுப்பின் நாலைந்துப் புத்தகங்களைக் கையில் எடுத்துக்கொண்டு ஜகதீசன் வந்தான். சுரூபா அவனைப் பார்த்தாள். ஆனால் தன் இருக் கையிலிருந்து சிறிதளவேனும் அசைந்தாளில்லை. இன்று எனது ஆராதிக்கும் கடவுள் என் பேரில் பிரசன்னமடையும் என்று அவளது மனம் சொல்லிக்கொண்டிருந்தது. அவர் என்னோடு பேசுவார், சிரிப்பார்—நான் இணங்காதவள் போல் பேசாமலிருப்பேன். ஆஹா! அவர் தம் மலர்ந்த முகத்தோடு "கோபித்துக் கொள்ளுவதற்குச் சமயம் இதுவல்ல" என்று என்னிடத்தில் சொல்லும் அத்தகைய தினம் என்று வருமோ!

சுரூபாவின் ஆராத்ய தேவதைக்கு மூன்றாம் மாதத்திய பரீக்ஷை பக்கத்தில் வந்துவிட்டது. ஆவணி மாதத்து இயற்கைத் தோற்றம் அவனைச் சிறிதளவேனும் வசீகரிக்கவில்லை. அதற்கு மாறாக அவனுக்குத் தொந்திரவையே கொடுத்தது. அவன் சுரூபாவை நோக்கி ஒரு முறை பார்த்தான். சிறிது புன்சிரிப்பும் கொண்டான். "இப்படி வா, இந்த அட்லாசின் படங்களைப் பார்" என்றான். சுரூபா தன் கண்களை மூடிக்கொண்டாள். இவனுடைய வார்த்தைகள் அவள் காதிலேயே விழவில்லை. "தூக்கம் வருகிறது போலிருக்கிறது, தூங்கட்டும்" என்று நினைத்துக்கொண்டான் ஜகதீசன். அவ்வளவுதான் நானா பர்னவிஸ் பாடத்தை உருப்போட ஆரம்பித்தான். பத்து நிமிஷம்; இருபது நிமிஷம்; ஒரு மணி; இரண்டு மணி; சுரூபா மிகுந்த வெறுப்பையடைந்தாள். ஒரே பாய்ச்சலாக மேஜைக்குப் பக்கத்தில் வந்து அவன் கையிலிருந்த சரித்திர புத்தகத்தைப் பிடுங்கி தூரத்தில் வேகமாக வீசி எறிந்தாள். "போதும்; நிறுத்தும் உம் படிப்பை" என்றாள்.

ஜகதீசன் "அடடா—டா—டா" என்றான்.

"இங்கே வாரும்" என்று அவனுடைய கையைப் பிடித்து சுரூபா ஜகதீசனை நாற்காலியினின்றும் எழுப்பி பலாத்காரமாகத் தன் இரு கைகளாலும் அவனை அணைத்துக்கொண்டாள். அந்த உன்மாதம் நிறைந்த யௌவன மாது அந்த அறியாச் சிறுவன் பேரில் முத்தங்களை வர்ஷிக்க ஆரம்பித்தாள்.

ஆனால் அவனுக்கோ, தலையணையை அணைந்து கொண்டிருப்பது போலத் தோன்றிற்று. பளிங்குக் கல் தன் முகத்தோடு உரைந்து கொண்டிருப்பது போலிருந்தது. மிகவும் குளிர்ச்சியாயிருந்தது. முத்தங் கொடுப்பதனாலும் ஆலிங்கனத்தாலும் ஏற்படும் மின்னலின் பிரவாகம் அவனது தேகத்தில் ஏற்படவில்லை. எந்த மின்னலின் சஞ்சாரத்தினால் ஓர் இருதயம் மற்ற இருதயத்தோடு சேர்ந்து விடுகிறதோ அந்த ஓட்டம் அவனுக்குண்டாகவில்லை. சுரூபாவின் மனம் கூக்குரலிட்டுக்கொண்டிருந்தது. ஆனால் பதில் கிடைக்கவில்லை.

ஆனால் ஜகதீசனோ அறியாச் சிறுவன். பயித்தியக்காரி போல் உன்மத்தையாயிருந்த தன் பத்தினியின் கைகளுக்கிடையே தாமரையிலைத் தண்ணீர் போல் பிரசன்ன முகமுடையவனாகவும் ஒட்டாதவனாகவும் நின்றுகொண்டிருந்தான். ஜகதீசன் குழந்தைப் பருவமாகிய சுவர்க்கத்தினின்றும் வெளியேற்றப்பட்டான் என்றாலும், இன்னும் அதன் வாயிற்படிக்குள்ளேயே இருந்தான். ஆனால் அவனுடைய மனைவியோ அதை முற்றிலும் கடந்து வருஷங்கள் ஆயின. அவள் வேறு தேசத்தில் இருந்தாள். அவளுடைய பாஷையும் வேறு.

ஒன்றுமறியா ஜகதீசனுக்கு அந்தப் பாஷையின் அறிவு லத்தீனைக் காட்டிலும் குறைந்ததாகவே யிருந்தது.

(6)

நான் பம்பாயிலிருந்து கோரக்பூர் போய்க்கொண் டிருந்தேன். என் கையில் விலங்குகள் பூட்டப்பட்டிருந்தன. எனது வலது கையில் கட்டப்பட்டிருந்த ஒரு நீண்ட தோல் பட்டையை ஒரு சிபாய் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பிடித்துக்கொண்டிருந்தான். என்னோடு பம்பாய்ப் போலீசு இலாகாவைச் சேர்ந்த இரண்டு சிபாய்களும் ஒரு ஹவல்தாரும் இருந்தார்கள். அவர்களிடம் நீண்ட கார்தூசியன் துப்பாக்கிகளும் இருந்தன. இவ்வளவு ஆடம்பரங்களைப் பார்த்து நான் ஒரு பயங்கரமான மிருகமோ என்று எனக்கே சந்தேகமுண்டாயிற்று. ஜான்ஸியில் எனக்குத் தாகம் எடுத்தது. நான் ஹவல்தாரைப் பார்த்து "ஐயா! எனக்குத் தாகமா யிருக்கிறது" என்றேன்.

"பாட்னாவில் ஜலம் கிடைக்கும் அங்கே குடிக்கலாம். ஒத்துழை யாமைக்காரர்கள் மதத்தையும் ஜாதி வித்தியாசத்தையும் பாராட்டுகிற தில்லை யல்லவா?" என்று பதிலளித்தான்.

"ஐயா, நான் காசிப் பிராமணன் நீங்கள் கொஞ்சம் தயவு செய்து கீழே யிறங்கி, என் விலங்குகளையும் தோல்பட்டையையும் அவிழ்த்து விடுங்கள். பிறகு ஏதாவது ஒரு ஹிந்துவிடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரச் செய்தால் என் தாகம் தணியும்" என்று சொன்னேன். ஹவல்தாரும் சிபாய்களும் மிகவும் நல்லவர்கள். பம்பாயிலுள்ள போலீசு இவ்விடத்தியவர்களைக் காட்டிலும் நாகரீகமும் நன்னடத்தையும் உடையவர்கள். நாங்கள் வண்டியிலிருந்து கீழே இறங்கினோம். தண்ணீரும் வந்தது; சிப்பாய்கள் என்னைச் சூழ்ந்து நின்று கொண்டார்கள். பிறகு சிறிது நேரத்தில் வேடிக்கைப் பார்ப்பவர்களின் கூட்டமும் கூடிவிட்டது. நான் கொஞ்சம் ஆகாரஞ் செய்து கொள்ள ஆரம்பித்தேன். சாப்பிட்டு முடிப்பதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. ஆயினும் அதற்குள்ளாகவே வண்டி புறப்பட்டுப் போய்விட்டது. "இரண்டு மூன்று நாளாக யாத்திரையினால் களைத்துப் போயிருக்கிறோம். அடுத்த வண்டியில்—போனால் போகிறது. இன்னும் 12 மணி நேரம் கழிந்த பின் அடுத்த வண்டி புறப்படும். அதற்குள்ளாக ஸ்நாநம் முதலியவைகளை முடித்துக்கொண்டு கொஞ்சம் களைதீருவோம்" என்று யோசித்து மூட்டைகளோடு மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் தங்குமிடத்திற்கு வந்து சேர்ந்தோம்.

ஹவல்தார் நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தான். திடீரென்று அவன் "ஆஹா! என்ன அழகு! என்ன அழகு" என்று சொன்னான்.

அவன் நோக்கிய திசையை நோக்கி நாங்களும் பார்த்தோம். அங்கே ஓர் அழகிய நங்கை தன் சாமான்களோடு தனியே உட்கார்ந்திருந்தாள். ரயில் ஸ்டேஷனில் உள்ளே போலீசுக்காரர்களும் off duty குமஸ்தாக்களும் அவளைச் சுற்றி மண்டலமிட்டுக் கொண்டிருந்தனர். ஹவல்தார் "நாமும் அங்கேயே சென்று உட்காருவோம்" என்று சொன்னான்.

அப் பெண் மிகுந்த ரூபவதி. யௌவனம் ததும்பிக்கொண்டிருந்தது. சவுந்தரியமே ஓர் உருவெடுத்து வந்தாற் போல் காணப்பட்டாள். ஆனால் ஏன் தன்னந்தனியா யிருக்கிறாள்? அதற்குள் என் மனம் "அடே முட்டாளே! அவள் யாரா யிருந்தால் உனக்கென்ன கவலை. நீயோ கைதி; கையிலோ விலங்குகள்; நீ ஏன் கேட்கிறாய்? உலகம் பலவிதம். அவளும் யாரோ ஒருவள்" என்று பதில் சொல்லிற்று

ஆனால் அவளது ரூபலாவண்ணியத்தைப் பார்த்துச் சும்மா இருத்தல் அசாத்தியமாய்ப் போயிற்று. அவளது முகத்தில் நற்குலத்தின் ஒளி வீசிக்கொண்டிருந்தது. ஆனால் தனியாய் ஏன் இருக்கிறாள்? இந்த யௌவனத்தில்?—இந்த அழகோடு?—அதிலும் தனியாக?—

"அவள் யாரென்று கேளுங்கள்" என்று நான் ஹவல்தாரிடம் சொன்னேன்.

"தலைவர் அவர்களே! உங்களுக்கேன் இந்த வீண் ஆசை. நீங்களோ ஜெயிலுக்குப் போகிறீர்கள்—"

"தயவு செய்து விளையாட்டை விட்டுவிடுங்கள், கொஞ்சம் கேளுங்கள்; எனக்கு ஏதோ சந்தேகமா யிருக்கிறது."

"ஆனால் நீங்களே கேட்கலாமே! என்னைக் காட்டிலும் தங்களுக்குச் சீக்கிரம் பதில் கிடைக்கும். எங்கே ஆரம்பியுங்கள் உங்கள் லெச்சரை!"

நானும் மனதைத் திடப்படுத்திக்கொண்டு அந்தப் பெண்ணோடு பேச ஆரம்பித்தேன்.

"அம்மா! தாங்கள் எங்கே போகிறீர்கள்?"

"பம்பாய்" என்று கொஞ்சம் சந்தோஷத்தோடு பதில் அளித்தாள்.

"பம்பாயா?" நான் ஆச்சரியத்தோடு "பம்பாயிக்குத் தனியாகவா?" என்று கேட்டேன்.

"இல்லை! நான் தனியாக வரவில்லை. 'அவர்' முந்தின ஸ்டேஷனில் தண்ணீர் கொண்டு வருவதற்காக இறங்கினார். திரும்பி வருவதற்குள் வண்டி புறப்பட்டுவிட்டது. அவருடைய பெயர் அப்துல் ஹமீத்" என்றாள்.

"அப்துல் ஹமீத்! நான் உங்களை ஹிந்து என்றல்லவா நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் நீங்கள் மகமதிய மதத்தைச் சேர்ந்தவர்களா?"

பெருமூச்செறிந்தவளாய் அம் மாது "ஆம்! இப்போது நான் மகமதியப் பெண்தான்" என்றாள்.

இப்போது?—ஏதோ ஒழித்துப் பேசுகிறீர்கள். என்று கேட்கலாமா என்று யோசித்தேன். பின்னும் "நீங்கள் மகமதியப் பெண்ணா? தங்களை மகமதியப் பெண் என்று ஒப்புக்கொள்வதற்கு என் மனம் சம்மதிக்கவில்லை. என்னை மன்னிப்பீராக!"

"ஆனால் மகமதியர்கள் கெட்டவர்களா?"

"இல்லை" வார்த்தைகள் வளருவதைப் பார்த்து நான் சந்தோஷமடைந்து "கடவுளின் சிருஷ்டியில் கெட்டது என்று ஒன்றும் கிடையாது. இருந்தாலும் 'அவர்' ஹிந்துவல்ல. ஆகையால் அவரை அன்னியர் என்று கருதுகிறேன். நான் ஹிந்து. ஆகையால் சிறிது பக்ஷபாதம் இருப்பது சகஜந்தானே!"

என் பேச்சின் கடைசி வார்த்தைகள் மனதிற்கு வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய உண்மையா யிருந்தன. ஆனாலும் அவள் சிறிதும் கோபித்துக்கொள்ளவில்லை. எனது சந்தேகங்கள் உண்மை என்றே முடியும் என்று எனக்குத் தோன்றிற்று. தைரியமும் அதிகரித்தது.

"உண்மையைச் சொல்லுங்கள். தாங்கள் ஹிந்து அல்லவா?"

"இல்லை யென்று வைத்துக்கொள்வோம். பிறகு—"

"முதலில் 'நான் ஹிந்துதான்' என்று தெளிவாகச் சொல்லுங்கள்."

"தெளிவாகவே சொல்லுகிறேன். நான் ஹிந்துவா யிருந்தேன். இப்போது மகமதியளா யிருக்கிறேன்" நான் நிசப்தமாய் நின்றுவிட்டேன். பிறகு அப் பெண் என்னைப் பார்த்து "இப்பொழுது உங்களுக்குத் திருப்தி ஆயிற்றா? ஏன் மௌனஞ் சாதிக்கிறீர்கள்?" என்றாள்.

"எனக்கு ஒன்றும் பேசுவதற்கே நாவெழவில்லை."

"சொல்லுங்கள்! கேளுங்கள்! கூசாமற் கேளுங்கள். நான் எல்லாவற்றிற்கும் உள்ளது உள்ளபடி பதில் அளிக்கிறேன். ஹிந்துக்கள் வேண்டுமாயின் கேள்வி கேட்பதற்குச் சந்தோஷப்படட்டும். ஆனால் ஒரு மகமதியப் பெண்ணுக்குப் பதில் செவ்வனே அளிக்கத் தெரியும்" நான் பேசாமல் தலைவணங்கி, மகமதியர்களின் இப் பெருமையை ஒப்புக்கொண்டேன்.

7

ரம்ஜான் ஜகதீசனின் கலியாணத்திற்கு ஒரு வருஷம் முன்பே பரலோகஞ் சென்றுவிட்டான். அவன் மூன்று தலைமுறைகளாக ஜகதீசன் வீட்டில் வேலைக்காரன். வண்டி ஓட்டுவதே அவன் வேலை. அவன் ஜகதீசனது பாட்டனாருக்கு வண்டி தயார்செய்து வைப்பான். தகப்பனாருக்கும் அப்படியே. இப்பொழுது ஜகதீசனுக்கும் வண்டி பூட்டியிருக்கிறான் அவனும் ஜகதீச பரிவாரத்தின் ஒரு முக்கிய அம்சமாய்விட்டான். ஜகதீசன் அவனை ரம்மூ சாசா (சிற்றப்பன்) என்று கூப்பிடுவது வழக்கம். அவனும் ஜகதீசனை 'சின்ன எஜமான்' என்று கூப்பிட்டுக்கொண்டிருந்தான்.

இறக்கும் தறுவாயில் ரம்ஜான் ஆநந்தசங்கரிடம் சொன்னதாவது:—

எஜமானனது வேலையிலேயே என் வாழ்நாள் முழுவதும் கழிந்தது. எனக்குப் பிறகு என் மகன் அப்துல் ஹமீதைக் காப்பாற்றுவது உங்கள் கடமை. அவன் எஜமானனது உப்பைத் தின்றே வளர்ந்திருக்கிறான். தங்கள் கருணையினாலேயே பிழைத்திருக்கிறான்.

இந்தச் சிபார்சு அனாவசியமானது என்று ரம்ஜானுக்கும் தெரியும். அப்துல் ஹமீதுக்கும் அப்படியே. சுபாவமாகவே ஆநந்தசங்கர் அப்துல் ஹமீதை அன்பார்ந்த திருஷ்டியால் பார்த்துவந்தார். அவன் ஜகதீசனைக்காட்டிலும் ஐந்து வயது பெரியவன்.

ஜகதீசன் பிறப்பதற்கு முன் இந்த அப்துல் ஹமீதே சோனா ராணியிடத்தில் புத்திர ஸ்தானத்தை வகித்துவந்தான். ஒருநாள் அப்துல் ஹமீதின் தாய் அவனை மடியில் வைத்துக்கொண்டு, சோனா ராணியிடம் இனிமையாகச் சம்பாஷித்துக்கொண் டிருந்தாள். அதே சமயத்தில் அவ்விடத்திற்கு ஆநந்தசங்கரர் வந்தார்.

பிறகு சோனா ராணி, தனிமையில் தன் கணவனைப் பார்த்து, "குழந்தை எவ்வளவு அழகாயிருக்கிறது பாருங்கள்! இக் குழந்தையை அவள் மடியில் வைத்துக்கொண்டு உட்காரும்போது, 'உங்க

ளுக்கு அளவு கடந்த பொருட்செல்வம் இருந்து என்ன பயன்? இந்தச் செல்வம் உங்களிடம் இல்லை. இச் சுகத்திற்கெதிரில் உங்கள் தனம் என்ன பொருள்?' என்று சொல்லுவதுபோ லிருக்கிறது'' என்றாள்.

ஆநந்தசங்கரர் பெருமூச் செறிந்து வாளா விருந்தார். "குழந்தை இல்லா இச்சம்பத்தால் யாது பயன்? தாமரையில்லாத் தடாகம் போலும் சந்திரனில்லா இரவு போலும் பொலிவற்றது'' என்று சோனா ராணி பெருமூச் செறிந்துகொண்டு கண்களில் நீர் ததும்பச் சொன்னாள்.

அப்துல் ஹமீதின் சுகமான தினங்கள் இச் சம்பவத்திலிருந்தே ஆரம்பித்தன. சோனா ராணியின் கையிலிருந்து சுமார் 8 அணா வரவது அப்துல் ஹமீதின் கைக்குப் போகாத நாள் கிடையாது. அவனுக்கு வீட்டில் எந்தப் பாகத்திற்கு வருவதிலும் தடையே கிடையாது. அப்படியிருக்க, ரம்ஜான் இறந்த பிறகு ஆநந்தசங்கரருக்கு வண்டிக்காரன் அப்துல் ஹமீதைத் தவிர யாராய் இருக்கக் கூடும்?

* * * * *

வாயிலுக்கு நேராக வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தி அப்துல் ஹமீத், வாயிற்படியிலிருந்த கருப்பனிடத்தில் "அடே! கருப்பா! வண்டி தயாராயிருக்கிறது என்று எஜமானனிடம் சொல்'' என்று உரத்த குரலில் சொன்னான். இச் சத்தம் கருப்பனைத் தவிர மற்றும் இன்னொருவர் காதிலும் விழுந்தது. அவள்தான் சுரூபா! ஏதோ ஒரு புஸ்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்தாள். ஜன்னலின் வழியாக வெளியே எட்டிப் பார்ப்போம் என்று மனதில் உதித்தது. ஆனால் வண்டியையாவது, ரஸ்தாவையாவது, வண்டி ஓட்டுபவனையாவது அல்லது வேறெந்த வஸ்துவையாவது பார்க்கவேண்டுமென்ற எண்ணத்தோடல்ல. ஒரு உத்தேசமுமில்லாமல் 'எட்டிப் பார்ப்போம்' என்று தோன்றிற்று.

ஜன்னல் இனிய குரலோடு திறந்தது. கீழேயிருந்த அப்துல் ஹமீத் அவ் வினிய குரல் வருந் திசையை நோக்கினான்—ஜன்னலையல்ல—மேலிருந்தபடியே சுரூபா, வெறும் பார்வையோடு தலையை நீட்டினாள். திடீரென்று இருவர் கண்களும் சந்தித்தன. அச் சந்திப்பில் பொருள் நிரம்பியிருந்தது.

மேலேயிருக்கும் குலவதியான சுரூபாவின் இருதயம் சங்கோசம், வெட்கம், ஆச்சரியத்தோடு 'அடடா!' என்றது. கீழேயிருந்த படிப்பற்ற மகமதியன் இருதயத்திலும் அது பிரதித்வனித்தது (எதிரொலித்தது).

இத் தடவையும் ஜன்னலின் சத்தம் இனிமையாகவேயிருந்தது. ஆனால் கொஞ்சம் தீக்ஷணமாக இருந்தது. சுரூபா ஜன்னல் கதவுகளை வேகமாக மூடிவிட்டாள்.

* * * * *

ஜான்ஸி ரயில்வே ஸ்டேஷன் பிரயாணிகள் தங்குமிடத்திலிருந்த அழகிய யுவதி சுரூபாவே. மயிர்க்கூச்சல் உண்டாகக்கூடிய அவளது கதையை அவளுடைய வார்த்தைகளாலேயே கேளுங்கள்.

"அப்துல ஹமீத்—அன்னிய மதஸ்தன்—கேவலமான ஜாதியைச் சேர்ந்த அப்துல் ஹமீதின் உருவம் என் இருதயத்தில் பதிய ஆரம்பித்ததைக் கண்டு, முதலில் எனக்கே என்மேல் வெறுப்புண்டாயிற்று. எனது மதமென்ன? எனது குலமென்ன? என் ரத்தமென்ன? தாய் தகப்பன்மார் மானம் மரியாதை ஓர் பக்கம், மறுபுறம் ஸ்திரீயின் காமப் பித்து. அப்துல் ஹமீத்—சீ—சீ. எவ்வளவு இழிவான எண்ணம்!—

"ஆனால் நான் தப்ப முடியவில்லை. தனிமையிலும் சாரமற்ற வாழ்வு. பிதாவின் வீட்டில் 16 வயதுவரை பெண் பெண் என்றேயிருந்து, பிறகு மாமனார் வீட்டில் நாட்டுப் பெண் என்று சொல்லிக்கொண்டு வசிப்பது தீராச் சிறைவாசம் போல் காணப்பட்டது. சிறைச்சாலைகூட இவ்வளவு கொடியதல்ல என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்விடத்திய வாழ்விற்கோ ஓர் முடிவிருக்கிறது—ஒரு வருஷம்—இரண்டு வருஷம்—அல்லது 10 வருஷம். ஆனால் நாட்டுப் பெண்ணின் இச் சிறையோ! ஓ—இக் கொடிய தண்டனைக்கோர் எல்லையே கிடையாது. அதனால்தான் நான் விழுந்துவிட்டேன்.''

"புருஷர்கள், உண்பது, உடுப்பது என்ற துக்கங்களோடு, 'நமக்குத் துணைவி ஒருவரும் இல்லையே' என்பதையும் ஒரு துக்கமாகக் கருதுகிறார்கள். பெண்களின் நிலைமையும் அவ்வாறேதான். ஆனால் அதைக்காட்டிலும் இன்னும் கோரமானது. மனிதனோ இயற்கையிலேயே வீரனாகவும், தைரியமுள்ளவனாகவும் பிறக்கிறான். ஸ்வய நம்பிக்கையுடையவன். ஆனால் பெண்கள் இயற்கையாகவே பயங்காளிகள்; அபலைகள். கானபூரில் எல்லாச் சுகங்களும் நிரம்பியிருந்தன. ஆனால் இருதயத்தின் வேதனையைக் கேட்பார் ஒருவருமில்லை. இருதயத்திற்குச் சாந்தியை உண்டாக்கக் கூடியவர் ஒருவருமில்லை. முனிக் கணக்காக உட்கார்ந்து அர்த்தமில்லாத பேச்சுக்களைப் பேசுவார் ஒருவருமில்லை. அப்படிப்பட்ட பயங்கரமான நரகத்திலிருந்து—அப் பயங்கரமான நரகத் தீயிலிருந்து தப்புவதற்கு என்னுடைய "எல்லாவற்றையும்" இழக்கும்படி நேரிட்டது.

"நான் பதிதையாய்விட்டேன். இப்படிச் சொல்வது போதாது. நான் வேண்டுமென்றே, என் மனதார, என்னிரு கைகளால், என் காதுகளையும் கண்களையும் மூடிக்கொண்டு, தேவலோகத்தை அடையும் ஆசைகளையும் சுருட்டிக்கொண்டு, நரகத்தில்—இப் படுகுழியில் என்னை வீழ்த்திக்கொண்டேன். ஆனால் என் தலையில் சுவர்க்கம் என்பது எழுதவேயில்லை. என்னைக் கண்டு நரகமும் தன் முகத்தைச் சுளித்துக்கொண்டது."

அதே சமயத்தில் அப்துல் ஹமீத்—வாட்ட சாட்டமான அழகிய அப்துல் ஹமீத் வந்தான். வண்டியும் புறப்படுவதற்குத் தயாராகப் பிளாட்பாரத்தில் வந்து நின்றது. அதற்குள்ளாகப் பன்னிரண்டு மணிகளும் கழிந்துவிட்டனவா! அடே! இவ்வளவு சீக்கிரமாகவா!

ஹவல்தார் சிபாய்களை நோக்கி "எழுந்திருங்கள். கைதியை அழைத்துக்கொண்டு வண்டிக்குச் செல்லுங்கள்" என்றார்.

சிப்பாய்களின் பூட்சுகளின் சத்தம் உண்டாயிற்று. துப்பாக்கிகள் ஜல் என்று ஒலித்தன. என் கைகளில் விலங்குகள் ஏறின. தோல்பட்டையும் கட்டப்பட்டது. நான் தள்ளாடிக்கொண்டே எழுந்து நின்றேன்.

புறப்படுவதற்கு முன்னால் ஒருமுறை சுரூபாவைப் பார்த்தேன்—என் கண்களில் நீர் ததும்பியது. சுரூபா என்னைப் பார்த்தாள்—அவள் கண்களிலும் நீர் நிரம்பியிருந்தது.

நிர்ப்பாக்யவதி சுரூபா!
கொலைகார இந்து சமூகமே!!

"பாரதி"ப் பத்திரிகையும்,
நமது வெளியீடுகளான புஸ்தகங்களும் மலேயா நாடுகளில்
கீழ் குறிப்பிட்டுள்ளவர்களிடம் கிடைக்கும்.

Messrs. T. Subramanyam & Co.,
7, Batu Road,
KUALA LUMPUR, F. M. S.

The Manager, "India Novel Depot,"
71, Serangoon Road,
SINGAPORE, S. S.

மகான் அரவிந்தரது நிருபங்கள். *

(மனைவியாருக்கு எழுதிய கடிதம்)

அன்பிற் கினிய மிருணாலினி!

ஆகஸ்டுமீ 2உ நீ எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. உனது தாய் தந்தைகளுக்கு முன் போலவே மறுபடியும் துக்கம் நேர்ந்திருப்பதைப் பற்றி நான் வருத்தமடைகிறேன். எந்தப் பையன் பரலோகமடைந்தான் என்பது உனது கடிதத்தில் விளங்கவில்லை. துன்பம் வந்தாலென்ன? அதைப் பொருட்படுத்தலாகாது. உலக இன்பத்தைத் தேடப் போனால் அவ் வின்பத்தினிடையே துன்பம் எப்போதும் தோன்றும். இன்பத்தைத் துன்பம் எப்போதும் ஒட்டி நிற்கின்றது. இந்த விதி புத்திர இச்சை விஷயத்தில் மட்டுமன்று. எல்லா உலக இச்சைகளின் விஷயத்திலும் பொருந்தியதாகும். சுக துக்கங்கள் எல்லாவற்றையும் அமைதியுடன் ஈசனது திருவடிகளிலே சமர்ப்பணம் செய்து விடுவதாகிய ஒரு வழிதான் மனிதனுக்குண்டு.

உன் கடிதத்தில் 20 ரூபாய் என்று எழுதியதை 10 ரூபாய் என்று வாசித்தேன். அதனால்தான் நான் பத்து ரூபாய் அனுப்புவதாகச் சொன்னேன். நீ இப்பொழுது 15 ரூபாய் வேண்டுமென்று சொல்லுகிறாய். அப்படியே அனுப்பி வைக்கிறேன். இந்த மாதம் ஸரோஜினி (அரவிந்தரின் சகோதரி) உனக்காக டார்ஜிலிங்கில் சில ஆடைகள் வாங்கி யிருக்கிறாள். அவளுக்குப் பணம் அனுப்பி யிருக்கிறேன். கடன் வாங்கியிருப்பதாக நீ சொல்லாமல் நானாகத் தெரிந்து கொள்வ தெப்படி? அதை அனுப்பிவிட்டேன். இன்னும் நாலை ரூபாய் வேண்டி யிருக்கலாம். அதை அடுத்த மாதம் அனுப்புவேன். இந்தத் தடவை உன் செலவுக்கு 20 ரூபாய் அனுப்பி வைக்கிறேன்.

இப்போது உன்னிடத்தில் ஒரு முக்கியமான சங்கதி தெரிவிக்கப் போகிறேன். அதாவது, எந்த மனிதனுடைய விதியோடு உன் விதி பிணைக்கப்பட் டிருக்கிறதோ அவன் (அரவிந்தர் தம்மையே குறிப்பிடுகிறார்) ஒரு விநோதமான மனிதன் என்பது இதற்கு முன்பாகவே உன் மனதிற்குத் தெரிந்திருக்கும். தற்காலத்தில் இந்த

---

* ஸ்ரீமான் அரவிந்த கோஷ் வங்காளி பாஷையில் தமது பத்தினிக்கு எழுதிய பின் வரும் மூன்று கடிதங்களும், அலிப்பூர் வெடிக்குண்டு வழக்கில் அரசாங்கப் பக்கத்து வக்கீலால் 'எக்ஸிபிட்' ஆகத் தாக்கல் செய்யப்பட்டன. இவை சுமார் இருபதாண்டுகளுக்கு முன் எழுதப்பட்டன வாயினும் தமிழ் மக்கள் படித்துப் பயனடையத் தக்கவை.

தேசத்தார் கொண்டிருக்கும் மனநிலை, காமியார்த்தங்கள், தொழில் வகைகள் என்பவற்றினின்றும் நான் கொண்டிருக்கும் மன நிலை முதலியவை முற்றிலும் மாறுபட்டவை யாகும். எல்லா விதத்திலும் மாறுபட்டவை; அசாதாரணமானவை.

எனது பைத்தியம்.

அசாதாரணமான அபிப்பிராயங்களையும், அசாதாரணமான ஆசைகளையும் பற்றிச் சாமானிய மனிதர்கள் என்ன சொல்வார்களென்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். அவ்விதமான மன இயக்கங்களைப் "பைத்தியம்" என்கிறார்கள். அப்படிப்பட்ட பித்தன் எடுத்த காரியம் நிறைவேறி விட்ட பிறகு அவனை மகானென்றும், வரபுருஷனென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் இது போன்ற முயற்சிகளிலே எத்தனை பேர் சித்தி பெற்றார்கள்? ஆயிரத்திலே பத்துப் பேர்தான் அசாதாரணமா யிருக்கிறார்கள். இந்தப் பத்திலே கூட ஒருவன்தான் சித்தி பெறுகிறான். நானோ எனது முயற்சியிலே சித்தி பெறாமலிருப்பது மட்டுமே யன்றி இன்னும் அதிலே முழுதும் பிரவேசங்கூடச் செய்ய முடியாத நிலைமையி லிருக்கிறேன். எனவே என்னைப் பித்தனென்றுதான் சொல்லுவார்கள். பித்தனை மணம் செய்திருப்பது ஒரு ஸ்திரீக்குக் கஷ்டம் தரக்கூடியதே யாகும். ஸ்திரீகளுடைய ஆசைகளெல்லாம் உலக சுக துக்கங்களைப் பொறுத்தவையா யிருக்கின்றன. பித்தனால் தனது மனைவிக்குச் சுகங்கள் ஏற்பட மாட்டா. துன்பங்கள் ஏற்படும்.

ஹிந்து மத ஸ்தாபகர்களான ரிஷிகள் இதை நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள். ஆகவே அந்த ரிஷிகள் அசாதாரணமான மனிதர்களை (அவர்களைப் பித்தர்களென்று வைத்துக் கொண்டாலும் சரியே, அல்லது மகான்களென்று வைத்துக் கொண்டாலும் சரியே) மிகவும் கௌரவப்படுத்தினார்கள்.

மாதர் கடமை.

ஆனால் இம் மனிதர்களால் அவர்களுடைய பத்தினிகளுக்கு ஏற்படும் பெரிய துயரங்களுக்கு என்ன நிவர்த்தி என்றால் அதற்கும் நமது புராதன ரிஷிகள் வழி சொல்லி யிருக்கிறார்கள். "ஸ்திரீகளுக்குப் புருஷனே குரு" என்ற விதியே அவர்களுக்குப் பரம விதி என்பதை நீ இப்பொழுதுதான் நன்றாக அறிய வேண்டும். பத்தினியே கணவனுக்குத் தர்மத் துணை யாவாள். அவன் எதை தர்மம் (மதம்) ஆகக் கொள்ளுகிறானோ அதில் ஸ்திரீ உதவி செய்யவும், யுக்தி சொல்லவும், உற்சாகப்படுத்தவும் வேண்டும்.

அவள் அவனையே தெய்வமாகக் கொண்டு அவன் மகிழ்ச்சியிலே தானும் மகிழ்ந்து, அவனது துயரத்திலே தானும் துயரப் படுதல் வேண்டும்.

தனது தர்மம் இது என்பதைத் தெரிந்தெடுத்துக் கொள்வது புருஷனுடைய கடமை. அதில் அவனுக்குத் துணை புரிந்து உற்சாகப்படுத்துவது ஸ்திரீயின் கடமை என்று ரிஷிகள் நமது நாட்டு ஸ்திரீகளுக்குப் போதனை செய்திருக்கிறார்கள்.

இப்பொழுது நன்றாகக் கவனி. ஹிந்து மார்க்கத்தினுடைய முறையை நீ அநுசரிக்க விரும்புகிறாயா? அல்லது நவீன நாகரீக முறையை அனுஷ்டிக்கப் போகிறாயா? நீ ஒரு பித்தனை விவாஹம் செய்துகொண்டு விட்டாய். அது உன்னுடைய பூர்வ ஜன்ம கர்மங்களின் பலன். விதி வழியை அறிந்து கொள்வது நன்று: நீ எங்ஙனம் அறிந்தொழுகப் போகிறாய்? மற்றவர்களைப் போல நீயும் அவனைப் பித்துக்கொண்டவனென்று தள்ளி விடுவாயா? பித்தன் தனது பைத்திய வழியில் 'ஓடவே செய்வான். அவனை உன்னால் தடுக்க முடியாது. அவனது இயற்கை உன்னுடைய இயற்கைக்கு மெலிந்ததாகுமா? (அபலையாகிய நீ அவனை எங்ஙனம் தடுக்க முடியும்) எனவே நீ மூலையில் உட்கார்ந்து வருத்தப்படப் போகிறாயா? அல்லது பித்தனுக்குத் தகுந்த பித்தியாக நீயும் அவனுடன் ஓடி வருவாயா? குருடனாகிய திருதராஷ்ட்ர ராஜன் மனைவி அவனுக்குள்ளது தனக்குமென்று தன் விழிகளையும் துணியாற் கட்டிக்கொண்டு வாழவில்லையா? ஆயிரம் பிரம சமாஜப் பாடசாலைகளிற் படித்த போதிலும் நீ ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த பெண். உனது சரீரத்தில் இந்து மூதாதைகளின் ரத்தமே ஓடுகின்றது. ஆதலால் இவ் விஷயத்தில் நமது ஹிந்து மார்க்க முறையையே அநுசரிப்பா யென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

முதல் பைத்தியம்

எனக்கு மூன்று பைத்திய எண்ணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலாவது:— ஒருவனுக்கு அறிவு, பயிற்சி, கல்வி, செல்வம் முதலிய எவ்வித நன்மைகளையும் தனது குடும்ப ரக்ஷணைக்கு அத்தியாவசியமாக எம்மட்டு செலவிட வேண்டுமோ, அம் மட்டுத்தான் செலவிட அவனுக்கு அதிகாரம் உண்டென்பது எனது உறுதியான நம்பிக்கை. ஈசன் கொடுத்த நன்மைகள் முழுவதையும் தன் பொருட்டே செலவிட்டு விடலாகாது. மிஞ்சி யிருப்பதைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். ஈசனுடைய கைங்கரியத்திலே செலவிட வேண்டும். எனக்கு உள்ளவற்றை யெல்லாம் நான் என் பொருட்டாகவே எனது சுகங்களிலும் போகங்களிலும் நான் செலவிட்டு விடுவேனானால் நான்

திருடனாவன். ஈசனிடமிருந்து செல்வம் கிடைக்கப் பெற்றுக் கொண்டு அவர் கைங்கரியத்திலே விநியோகம் செய்யாதவன் திருடனென்று ஹிந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதுவரை நான் சம்சார சுகத்திலே மூழ்கிக் கிடந்து விட்டேன். ஒரு ரூபாயில் இரண்டணா ஈசனுக்கும் பதினான்கணா எனக்குமாகச் செலவிட்டுக் கொண்டு கணக்கை மறைத்துக் கொண்டு வந்தேன். எனது ஆயுளில் பாதி செலவாகிவிட்டது. அது விருதாவாகவே போயிற்று.

மிருகம்கூடத் தனது சொந்த வயிற்றையும் தனது குடும்பத்தாரின் வயிற்றையும் நிரப்பிவிட்டுத் தான் சாபல்ய மடைந்துவிட்டதாக நினைத்துக்கொள்ளுகிறது. இதுவரை நான் திருடனுடைய நடையையும் மிருகங்களின் நடையையும் பின்பற்றி ஒழுகி வந்தேன் இப்பொழுது இதனை அறிந்துகொண்டேன். இதனால் எனக்கு வருத்தமும், என்னிடத்துக் கோபமும் உண்டாயிருக்கின்றன. இனி அதனை வேண்டேன். அப் பாவ வாழ்க்கையை ஒரே அடியாகத் தொலைத்து விட்டேன்.

நாம் கடவுளுக்குக் கொடுப்பதென்றால் எப்படி? தர்மச் செயல்களிலே நமது பொருளைச் செலவிடுவதே அதற்கு வழியாகும். எனது சகோதரி ஸரோஜினிக்கேனும் அல்லது உனக்கேனும் நான் பணம் கொடுப்பதைப் பற்றி நமக்கு வருத்தமுண்டாகவில்லை யல்லவா? மற்றவர்களுக்கு நன்மை செய்வது தர்மம். தன்னைச் சார்ந்தோர்களை ஆதரிப்பது தெய்வ பக்தியில் ஓர் பகுதியாகும். ஆனால் ஒருவன் தனது கூடப் பிறந்த சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் கொடுப்பதினாலே மட்டும் அவனுடைய தர்மம் நிறைவேறி விடவில்லை இந்தப் பஞ்ச காலத்தில் நாடு முழுதுமே என் வீட்டு வாசலில் ஆதரவுக்கு வந்து காத்து நிற்பது போலிருக்கிறது. இந்த நாட்டிலே எனது உடன் பிறந்தோர் முப்பது கோடிப் பேர் இருக்கிறார்கள். அவர்களிலே பலர் பட்டினியால் சாகின்றார்கள், நோயினாலும் துயரத்தினாலும் மிகுந்த க்ஷீண திசைக்கு வந்து, அவர்கள் எப்படியோ உயிர் வாழ்கின்றனர். அவர்களுக்குத் துணை புரிவது என் கடமை. நீ என்ன சொல்லுகிறாய்?

இவ் விஷயத்திலே உன் சம்மதி அளிப்பாயா? வெகு சாதாரண மனிதனைப் போல் ஜீவித்துக்கொண்டு, கேவலம் உடலிலே உயிர் தரிப்பதற்கு அவசியமான விஷயங்களில் மட்டும் செலவிட்டுக் கொண்டு, மிஞ்சியதை எல்லாம் நான் தெய்வ கைங்கரியத்திற்கு விநியோகம் செய்யப் போகிறேன். இது என் விருப்பம். நீயும் இதற்குச் சம்மதித்து ஆத்ம யக்ஞம் செய்ய இணங்குவாயானால் எனது விருப்பம் நிறைவேறுதல் எளிதாகும். உனக்கு வாழ்க்கையிலே

க்ஷேமமுண்டாகவில்லை என்று அடிக்கடி முறையிட்டிருக்கிறாய். உன் க்ஷேமத்திற்குரிய வழி ஒன்றை இப்பொழுது உனக்குக் காட்டியிருக்கிறேன். நீ அந்த வழியை கடைப்பிடித்து ஒழுகுவாயா?

இரண்டாவது பைத்தியம்.

எனது இரண்டாவது பைத்திய எண்ணம் இப்பொழுதுதான் சிறிது காலமாக ஏற்பட்டிருக்கிறது. நேருக்கு நேராகப் பரமாத்மாவைக் காண வேண்டுமென்பதே அவ் வெண்ணமாகும். தற்காலத்தில் ஜனங்கள் எடுத்ததற் கெல்லாம் ஈசன் பெயரைச் சொல்வதும், எல்லோர் கண் முன்பும் நின்று தொழுவது நமது பக்தியை உலகத்தாருக்கே காட்டுவதும் தர்ம (மத) மாகப் பாராட்டுகிறார்கள். பரமாத்மா ஒன்று இருப்பது மெய்யானால் அதன் உண்மையை நாமே உணர்ந்து அதை நேருக்கு நேராகக் காண்பதற்கு ஏதேனும் ஒரு வழி இருந்தே தீர வேண்டும். அந்த வழி எத்தனை அபாரமாயிருந்த போதிலும் அதில் நடந்தே தீரவேண்டுமென்று என் மனதில் அசைக்க முடியாத நிச்சயம் செய்துகொண் டிருக்கிறேன். அவ் வழி நமக்குள்ளேயே யிருக்கிறதென்று இந்து சாஸ்திரத்திலே அவ் வழியிற் செல்லும் பொருட்டு சில விதிகள் கற்பிக்கப்பட் டிருக்கின்றன. நான் இவ் விதிகளை ஆரம்பிக்கத் தொடங்கி யிருக்கிறேன். ஒரு மாத காலத்திற்குள்ளாகவே இந்த சாஸ்திரத்தின் போதனைகள் பொய் யில்லை யென்பது எனக்குத் தெளிவாகி விட்டது. அந்த சாஸ்திரத்திலே சொல்லியுள்ள சில அடையாளங்கள் எனக்கு சித்தியாய்க் கொண்டு வருகின்றன. இந்த வழியிலே உன்னையும் அழைத்துச் செல்ல வேண்டுமென்பது என் கருத்து. என்னுடன் சம வேகமாக வருதல் உனக்கு முடியாமலிருக்கலாம். ஏனெனில் அதற்கு வேண்டிய அளவு ஞானம் போதாது. ஆனால் நீ என்னைப் பின் தொடர்ந்து வருதல் கஷ்டமன்று. இம் மார்க்கத்தை அனுசரிப்பவர்க் கெல்லாம் சித்தி ஏற்படக் கூடும். ஆனால் நடக்குள்ள தாகத்தைப் பொறுத்து நிற்கிறது. உன்னை இவ் வழியிலே பலவந்தமாய் அழைத்துச் செல்லுதல் யாருக்கும் சாத்தியமன்று. நீ இதற்கு இணங்குவாயானால் இதைப் பற்றிப் பின்னிட்டு உனக்கு விஸ்தாரமாய் எழுதுகிறேன்.

மூன்றாவது பைத்தியம்.

என்னைப் பிடித்திருக்கும் மூன்றாவது பைத்தியம் பின் வருமாறு:—

சாமான்யமாகப் பலர் இந் நாட்டை வெறுமே மைதானங்களும், வயல்களும், காடுகளும், குன்றுகளும், நதிகளு முடையதோர் உயி

ரற்ற பொருளாகக் கருதுகிறார்கள். நான் இதனைத் தாயாக அறிந்திருக்கிறேன். தாயாகவே அவளை மதித்துத் தொழுகிறேன். தாயின் மார்பிலே ஓர் அரக்கன் வந்து உட்கார்ந்து கொண்டு அவளது இரத்தத்தை உறிஞ்சுவானானால் அப்பொழுது மகன் என்ன செய்வான்? கவலையேதுமின்றித் தான் சோற்றின் முன் இருந்துகொண்டு தனது மனைவி மக்களுடன் மகிழ்ச்சியிலே நேரத்தைக் கழிப்பானா? தனது தாயை ரக்ஷிக்க வழி தேடுவானல்லவா? வீழ்ச்சி யடைந்து போயிருக்கும் இந் நாட்டைக் காப்பாற்றும் வல்லமை எனக்கு உண்டென்பதை நான் அறிந்திருக்கின்றேன். எனக்குச் சரீர பலமில்லாதிருக்கலாம். ஆனால் நான் வாளேனும் துப்பாக்கியேனும் கொண்டு போர் செய்யப் போவதில்லை. புத்திப் பலத்தால் யுத்தம் நடத்தப் போகிறேன். ராணுவ பலம், சரீர பலம் இவற்றைத் தவிர வேறு சக்தியில்லையென்று நினையாதே. ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு நிற்கும் ஆத்ம பலம் என்பதோர் சக்தி இருக்கின்றது. இந்த எண்ணம் எனக்குப் புதிதில்லை. இன்று நேற்று விளைந்ததன்று. நான் பிறக்கும் பொழுதே இதுவும் உடன் பிறந்திருக்கிறது. இது என் இயற்கையிலே ஊறிப் போய் என் உள்ளத்தில் ஆழமாக வேர் ஊன்றியிருக்கிறது. இந்த உண்மையான கர்மத்தை நிறைவேற்றும் பொருட்டாகவே என்னை ஈசன் உலகத்திலே அனுப்பியிருக்கிறார். பதினாலாம் வயதிலே இந்த விதை முளை விடலாயிற்று. பதினெட்டாம் வயதில் என் மனதில் கலங்காததும் அசைக்க முடியாததுமான உறுதி பிறந்து விட்டது. சின்னம்மாள் உன்னிடத்தில் இவ் விஷயத்தைப் பற்றிப் பேசிய பொழுது நீ சூதுவாதறியாத சாதுவான என் கணவனை யாரோ சில துஷ்டர்கள் தீய வழிகளிலே இழுத்து விட்டுவிட்டார்கள் என்று சொல்லி வருத்தமடைந்தனையாம். அது மெய்யன்று. உனது சாதுவான கணவனே அந்த மனிதர்களையும் நூற்றுக் கணக்கான வேறு பலரையும் அவ் வழியிலே கொண்டு சேர்த்தான். அவனே அது நல் வழியாயிருப்பினும் அல்லது தீய வழியாயிருப்பினும் அதில் இன்னும் எத்தனையோ ஆயிரம் பேர்களைக் கொண்டு சேர்க்கத் துணிந்திருக்கிறான். எனது வாழ்நாளுக்குள்ளே இம் முயற்சி நிறைவேறி முடிந்து விடுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் அது நிறைவேறியே தீருமென்பது மெய். அதை எவராலும் நிறுத்த முடியாது.

இவ் விஷயத்திலே நீ என்ன செய்யப் போகின்றாய் என்பதை எனக்கு அறிவிக்க வேண்டும். மனைவியே கணவனுக்குப் பெரியதோர் தைரிய ஏதுவாயிருக்கிறாள். உமையைக் குருவாகக் கொண்ட நீ துரைகளைத் தெய்வங்களாகக் கருதி வணங்கும் தர்மத்தையா அனுஷ்டிக்கப் போகிறாய்? உனது கணவனுடைய முயற்சியிலே அசிரத்தையாயிருந்து நீ அவருடைய பலத்தைக் குறைக்க விரும்புவாயா? அல்லது உன்னுடைய அனுதாபத்தாலும் தைரியத்தாலும் அந்த

பலத்தை இரு மடங்காக்கப் போகிறாயா? என்னைப் போன்ற சாதாரண ஸ்திரீ இத்தனை பெருங் காரியங்களில் என்ன செய்ய முடியும்? எனக்கோ போதுமான மனோ தைரியமேனும் அறிவேனும் இல்லை. இவ் விஷயங்களை நினைக்கக் கூட எனக்குப் பயமாயிருக்கிறது என்று நீ ஒரு வேளை சொல்லக்கூடும். இதற்கு சுலபமான வழியொன்று சொல்லுகிறேன். ஈசனைச் சரணாக அடைந்துகொள். ஈசனை வெல்வதாகிய மார்க்கத்திலே பிரவேசிக்க முயற்சி செய். அவன் உன்னிடத்திலுள்ள குறைகளையெல்லாம் நீக்கி விடுவான். ஈசனை ஒருவன் சரணென்று அடைந்தவுடனே அவனை விட்டு அச்சமென்ற பொருள் அஞ்சி ஓடத் தலைப்படுகிறது. யார் என்ன சொல்லிய போதிலும் நீ அதனைப் பொருட்படுத்தாமல் நான் சொல்வதிலே நம்பிக்கை கொள்வாயானால் எனது சக்தியை உனக்குத் தருவேன். அதனால் என் வல்லமை குறையாது. மனைவியே கணவனுக்குத் தைரிய ஹேதுவாவாள் என்பதை நான் உனக்கு மீண்டும் வற்புறுத்திச் சொல்லுகிறேன். தனது சொந்தச் சாயையை அவன் தன் மனைவியிடத்தே காண்பதனாலும், தனது உள்ள விருப்பத்தின் எதிரொலியை அவளிடமிருந்து கேட்பதனாலும் அவனது வல்லமை இரு மடங்காகி விடுகிறது.

நீ எப்பொழுதும் இப்படியே நல்ல உடைகள் தரிப்பதிலும், உணவுகள் உண்பதிலும், சிரிப்பதிலும், ஆடுவதிலும், பாடுவதிலும் பலவித சுகங்களை அனுபவிப்பதிலும் நீங்காத விருப்பமுடையவளாய் உனது காலத்தைக் கழித்து மரிப்பதுதான் பெரிதென்று நினைக்கிறாயோ? அவ்விதமான மன நிலை பக்குவ வழியை உணர்த்துவதென்று தற்காலத்தில் நமது நாட்டு ஸ்திரீகளெல்லாம் இந்த மகா பரிதாபகரமான ஈனத் தன்மை கொண்ட மன நிலை பொருந்தியவர்களாயிருக்கிறார்கள். நீ இவற்றையெல்லாம் மறந்து விடு. என்னுடனே வா. தெய்வ காரியத்தை நிலை நிறுத்தும் பொருட்டு நாம் இவ் வுலகத்திற்கு வந்திருக்கின்றோம். அதனை இப்பொழுதே தொடங்குவோம்.

உன்னுடைய இயற்கையிலே ஓர் பிழை உள்ளது. நீ கொஞ்சமேனும் சூதுவாது தெரியாதவளாயிருக்கிறாய். ஆனால் உன் மனம் எப்போதும் அமைதியற்றதாகிறது. அறிவு வளர இடமில்லை. எந்தக் காரியத்திலும் சிரத்தை உண்டாகிறதில்லை. இதை நீ விருத்தி செய்து கொள். ஒருவர் பேச்சை மட்டிலும் கேட்டு நீ அறிவு சம்பாதித்துக்கொள்ள வேண்டும். ஒரே நோக்கத்துடனும் திட சித்தத்துடனும் எடுத்த காரியத்தை நிறைவேற்றப் பழகுதல் வேண்டும். மற்றவர்களுடைய பழிச் சொற்களையும் இகழ்ச்சிகளையும் கவனிக்கலாகாது.

இன்னும் ஓர் பிழை உன்னிடம் உளது. ஆனால் அதை உன் பிழையாய் மட்டிலும் கருதக் கூடாது. இந்தக் காலத்தையே சார்ந்ததோர் பிழையாகக் கொள்ள வேண்டும். (மற்ற இடங்களில் எவ்வாறாயினும்) வங்காளத்தில் காலம் அப்படித்தான் இருக்கிறது. சிரத்தைக்குரிய விஷயங்களை ஜனங்கள் சிரத்தையுடன் கவனிக்க மாட்டோமென்கிறார்கள்.

தர்மம், அருள், மனோரதம், உயர்ந்த முயற்சிகள், தேச விடுதலைக்குரிய வழிகள் இவை போன்ற சிரத்தைக்கிடமான பெரிய விஷயங்களை இக் காலத்து ஜனங்கள் எளிதாகப் பேசி நகைத்து விடுகின்றார்கள். பிரம சமாஜப் பாடசாலைகளில் படித்தது நிமித்தமாக உன்னிடத்திலும் இந்தப் பிழை ஏற்பட்டிருக்கின்றது. வாஸியினிடத்திலும் இக் குற்றம் இருந்தது. நம்மவர்கள் எல்லோரிடத்திலும் இது கொஞ்சம் கொஞ்சம் இருக்கத்தான் செய்கிறது. தேவகிரி ஜனங்களுக்குள்ளே இது ஆச்சரியமாக வளர்ச்சி பெற்றிருக்கின்றது. இவ்விதமான நிலையை நீ திட சித்தத்துடன் ஒழிக்க வேண்டும். நீ இதை எளிதாகச் செய்தல் என்ற வழக்கத்தை ஒரு முறை எடுத்துக் கொள்வாயானால் உனது உண்மையான சுபாவம் பிரகாசமடையும். மற்றவர்களுக்கு நன்மை செய்வதிலும் ஆத்மத் தியாகம் செய்வதிலும் உனக்கு இயற்கையிலே பிரியமுண்டு. உனக்கு வேண்டியதெல்லாம் மனோ பலமேயாகும். அந்த பலத்தை நீ ஈசனை தியானம் செய்வதால் பெற்றுக்கொள்வாய்.

இதுதான் என்னுடைய மகா ரகஸியம். இவற்றை யாருக்கும் வெளியிடாமல் தனியே யிருந்து யோசனை செய். இவற்றில் அஞ்சுவதற்கு யாதோரிடமும் இல்லை. ஆனால் தியானம் செய்து பார்ப்பதற்குரிய விஷயம் அதிகமிருக்கிறது. ஆரம்பத்திலே தினம் அரை மணிநேரம் உனது விருப்பங்களைப் பிரார்த்தனைகள் மூலமாக வெளியிட்டு ஈசுவரத் தியானம்செய்து வருவாயானால், போதும். இதைவிட அதிகமாக ஒன்றும் செய்ய வேண்டாம். நாளடைவில் பக்குவ நிலையடைந்து விட்டோமென்பது உனக்கே தோன்றும்.

ஈசா! எனது கணவனுக்கு நான் ஒரு தடையாக இராமல் அவனுடைய ஜீவ லட்சியத்திலேயும் அவன் முக்திக்குச் செய்யும் முயற்சியிலேயும் அவனுக்கு உதவி செய்து துணை நிற்கும்படி அருள் செய்வீராக என்ற பிரார்த்தனையை ஈசனிடத்தில் எப்போதும் கேட்டுக் கொள்.

உன் கணவன்.

மலர்ந்த மலர்கள்.

"தமிழ் மகன்" கொய்து தொடுத்தது.

1. பிறவித் துன்பம் பெரிதும் புகுந்து சிதைக்காத வயதுடைய இளைஞர் பின்னாள், தம்மையும் பிறரையும் அத் துன்பத்தினின்று ஓரளவு காக்கும் வண்ணம், அவர்களுடைய மனத்தைக் கலைகளால் நிரப்பி வைக்கோமாயின், தேறினர்ப் பிழைத்தவர் பழி நம்மைச் சாராது தீராது. —"கலாநிலயம்."

2. நமது புராதன நாகரீகங்களைப் போற்றிப் போற்றி, எத்தனையோ பேர் எழுதி எழுதி, எத்தனையோ காலன் மசியையும், எத்தனையோ பேல் காகிதத்தையும் செலவழித்திருக்கிறார்கள். நாமும் பழைய பல்லவியை அநுபல்லவியுடன் பழையபடி பாடுவதில் பயனென்ன உண்டாகப்போகிறது? —"பாரதி."

3 பத்திரிகைகளின் பயனைச் சுருங்கக் கூறுமிடத்து, இம்மை மறுமைக்குரிய விஷயங்களை எடுத்துப் புகட்டுவதில் சிறந்த 'ஆசிரியனா'கவும், செவிக்கும் சிந்தைக்கும் இனிய உணவுகளைப் பல இடங்களிலிருந்தும் ஈட்டி, இன்மொழியுடன் ஊட்டுவதில் 'அன்னை'யாகவும், நல்லொழுக்க நெறிகளையும் அறிவின் நலங்களையும் நற்காரியங்களையும் எடுத்து உபதேசித்துப் பயிற்றுவதில் 'தந்தை'யாகவும், ஆழ்ந்த உறக்கத்திலிருப்போரைத் தட்டி எழுப்பி, இடித்துரையாலும் இன்சொல்லாலும் சீர்கேடுகளை எடுத்து விளக்கிக் குற்றங்களை நீக்கும்படி வற்புறுத்துவதில் 'நண்பனா'கவும், வெவ்வேறு இடங்களில் வாழும் மக்களையெல்லாம் ஒரு வயிற்றில் பிறந்த உத்தம சகோதரர்களாகக் கருதும்படி உணர்ச்சியை யெழுப்பிப் பிணக்குகளைப் போக்கி ஒற்றுமையை உண்டாக்குவதில் 'அரசனா'கவும் விளங்குமென்று உறுதியாக கூறலாம். —"யாதவ மித்திரன்."

4. ஹாட்டையும், சூட்டையும், பூட்சையும் தரித்து நிற்கும் உயர்ந்த அதிகாரிகளைக் கண்டு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டால், சிலருக்குத் தங்களது சுயப்பார்வை அடியோடு போய் விடுகிறது! —"ஸ்வராஜ்யா," தமிழ்.

5. ஒருவர் கொள்கை ஒருவருக்குப் பிடிக்காவிட்டால், அவரை ஏளனமோ, அல்லது அவர் கொள்கையைக் கண்டனமோ செய்யக் கூடாது. —"வேளாள மித்திரன்."

6. ஒருவனுக்கு அடங்கி வேலை செய்கிறவர்களின் புத்தி தனது புதிய யுக்தி யோசனைகளை இழந்துவிடுகிறது; தானே சுயேச்சையில் செய்யும்பொழுதுதான் கூர்மை அதிகப்படுகிறது.

—"அமிர்தகுணபோதினி."

7. தொழிலாளர்களின் ஓயாத உழைப்பால் திரண்ட செல்வத்தை, லாபத்தில் ஒரு பாகத்தைக் கஞ்சியின்றி வாடித் திரியும் அக்கூட்டத்தார்களுக்குத் தரவேண்டியது சரியான நியாயமென்றே நாம் கூறப் பிரியப்படுகிறோம்.

—"தேசோபகாரி."

8. பொய்யான பிறப்பு, ஜாதி, வகுப்புகளுக்கு யார் ஜவாப்தாரியாயிருந்தாலும் இப்பொழுதுள்ள பிறப்பிற்கு பிராமணர்கள் ஜவாப்தாரிகள் அல்லர். உயர்வு தாழ்வுக் கொள்கை 'அவர்களிடமட்டுமே இருக்கின்றது' என்று யாரும் கூறமுடியாது. 'அக் கொள்கை காணப்படாத ஜாதியே கிடையாது' என்று துணிந்து கூறுவோம். ஆகையால் "நாம் ஒழிக்கவேண்டியது 'உயர்வு தாழ்வுக் கொள்கை'யேயன்றி ஒன்றிரண்டு குறிப்பிட்ட ஜாதிகளையன்று." உண்மைக்கு மாறாய்ப் பிறப்பினால் அமைந்துள்ளதாய் உரைக்கும் உயர்வு தாழ்வுக் கொள்கையை ஒழிக்க முயலுதல் ஒவ்வொரு தேச மைந்தருடைய கடமையாகும் என்பதைப் பன்முறை வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

—"ஆனந்தபோதினி" வாரப் பதிப்பு.

9. இந்தியாவின் வீழ்ச்சிக்கு 'வர்ணாச்சிரம'மே காரணமென்பதை உலகம் ஒப்புக்கொண்ட விஷயமாகும்.

—"தமிழ் நாடு", தினப் பதிப்பு.

10. ஒவ்வொரு உடலுக்கும் சுயமரியாதையே உயிர். அதுவே அன்பும், அருளும், பொறையும், சத்தியமும், உண்மையுமாகும். அது பாரபட்சமில்லாதது; நீரால் நனைக்க முடியாதது; வெயிலால் உலர்த்த முடியாதது; நெருப்பால் எரிக்க முடியாதது; கட்கத்தால் சேதிக்கப்படாதது; யாராலும் சோதிக்க முடியாதது.

—"நாட்டார் குல மித்திரன்."

11. ஜனங்களின் நலன்களுக்கு முரண்பட்ட அரசொன்றைத் திருத்தவோ அல்லது முடிக்கவோ வேண்டுமானால், சக்தியிலும், செயலாற்றலிலும், செல்வாக்கிலும் அதற்கிணையானதொரு அமைப்பு நாட்டுக்கு வேண்டும்.

—"ஊழியன்."

12. வேதத்தில் சொல்லப்பட்ட பிராமணருக்குரிய கடமைகளைக் காற்றுவாக்கில் விட்டுவிட்டு, 'பால்ய விவாகத்தில்மட்டும் வேதத்தைப் பின்பற்றுங்கள்' என்று சொல்லுவது கேலியைத் தவிர வேறில்லை.

—"தமிழ் நாடு" வாரப் பதிப்பு.

13. ஒவ்வொருவருக்கும் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் சரீரத்தைச் சுத்தப்படுத்திக்கொள்வதற்கும் அவசியமான ஜலம் சுத்தமாக இருக்கவேண்டுமென்பது தெரிந்திருந்தாலுங்கூட, அந்த ஜலங் கிடைக்கக்கூடிய இடமாகிய குளம், ஏரி, ஆறு முதலியவற்றின் துறைகளையும், கரைகளையும் சுத்தப்படுத்துவதில் நம் நாட்டார் சிறிதும் பின்வாங்காதவர்களாகவே இருந்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமை மாறும்படியாகச் செய்யவேண்டுவது ஒவ்வொரு தேசாபிமானியின் கடமையாயிருப்பதோடு மதாபிமானியின் கடமையாகவும் இருந்துவருகிறது.

—"யதார்த்தவசனி."

14. நமது தேசமானது உலகத்திலுள்ள மேன்மை பெற்ற பிரதேசங்களினிடையே நன்மதிப்பும், சமத்வமும் பெறக்கூடிய நிலைமைக்கு வரவேண்டுமென்ற எண்ணம் உண்மையிலேயே முன்னேற்றமடைந்துள்ள சமூகத்தாருக்கு இருந்திருக்குமேயானால், நம் சமூகம் இப்பொழுதுள்ள கேவலமான நிலைமையில் இருந்திருக்க முடியாது; அநேக வருஷங்களுக்கு முன்னரே முன்னுக்கு வந்திருப்போம். அப்படியில்லாமைக்குக் காரணம் மக்கள் வாழ்வுக்கு அவசியம் வேண்டும் ஆரோக்கிய கல்வி, கடவுள் வழிபாடு முதலியவற்றில் ஒருவர்க்குரிய சுதந்திரம் மற்றொருவருக்கு இல்லையெனச் சுயநல வாதிகளால் கடவுளோடும், சமயத்தோடும் சேர்த்து அமைக்கப்பட்டுள்ள ஜாதி வித்தியாசமேயாம்.

—"விஸ்வ நேசன்."

15. தென்னாட்டில் தோன்றிய பிராமணர்—பிராமணரல்லாதார் சச்சரவு நாளுக்கு நாள் முற்றி வயிரமேறுகிறதே தவிர குறையும் லட்சணத்தைக் காணோம். இந்தச் சச்சரவு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு போவது இருதரத்தாருக்கும் க்ஷேமமாமோ? சச்சரவுக்குக் காரணமான காரணங்களை ஆராய்ந்து அவைகளைச் சரிப்படுத்த முயலுவதன்றோ சிறந்த முறை.

—"வார வர்த்தமானி."

16. சுதந்திரத்துக்குத் தடைக்கல்லாய் நிற்கும் எதையும் தகர்த்தெறியவேண்டும். சமூக மூட வழக்கங்களைத் தொலைக்கவேண்டும். இது இளைஞர் கடன்.

—"தென் நாடு."

17. சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கையெல்லாம், கட்டுப்பட்டு அடைபட்டிருக்கும் "அறிவுக்கு விடுதலை" அளித்து உண்டாக்குவதேயாகும். ஆதலால், "சுயமரியாதை இயக்கம்" என்பதை "அறிவு விடுதலை இயக்கம்" என்றே சொல்லலாம். இதன் உண்மை விளங்க வேண்டுமானால், ஒரு நேர்மையான மனிதன் தனது அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் உள்ள கட்டுப்பாட்டையும், நிர்ப்பந்தத்தையும் நினைத்துப் பார்ப்பானேயானால், இவ் வியக்கத்தின் பெருமை தானாக விளங்கும்.

—"குடி அரசு."

17. காலத்துக் கேற்றவாறு சீர்திருத்தம் செய்யப்படாத 'மதங்கள் யாவும் மக்கள் அறிவு முதிர்ச்சிபெற்று, ஆராய்ச்சித் துறையில் ஈடுபடும்போது மக்களது நம்பிக்கையை இழந்துவிடுவது சகஜம்.
—"முன்னேற்றம்."

18. புகழை ஒருவன் நாடி அலைகின்ற வரையில், அவன் அதைப் பெறுவதில்லை.
—"தேசபக்தன்."

19 மிக மிகப் பழங்காலத்தில் மக்கள் இறந்த ஆவிகளையும், இயற்கையில் போராற்றலுடைய மலை, நதி, வானம், கடல் முதலியவற்றின் காம்பீர்யத்தையும், அச்சமும் ஆர்வமும் விளைக்கும் விலங்குகளையும், லிங்கத்தையும், நாகரீகமறியாத பல கோரமான உருவங்களையும், ஊனுணவும், உயிர்ப் பலியும், கள்ளுங்கொண்டு பூசித்துவந்தனர்.
—"ஆனந்த போதினி" மாதப் பதிப்பு.

20. ஒவ்வொரு சமயத்தில் ஏற்படும் ஒரு பரபரப்பைக்கொண்டு ஆரம்ப சூரத்தனமாகக் கிளர்ச்சியைச் செய்வது சாத்தியப்படும்; ஆனால், அதைத் தொடர்ந்தாற்போல் செய்ய அந்தப் பரபரப்பு மாத்திரம் போதாது.
—"சுதேசமித்திரன்."

21. மூடப் பழக்க வழக்கங்களால் நம் நாடு, நம் சமூகம் சீர்குலைந்தது என்பது கேட்பதற்கும் படிப்பதற்கும் ருசிகரமாயிராது; வியப்பாய் இராது; அழகுபடத் தோன்றாது; படாடோபமாய்க் காட்டாது; பெருமையாய்த் துலங்காது; என்றாலும் இது ஒரு ஒப்பற்ற ஒரே உண்மை என்பதில் ஐயமின்று.
—"திராவிடன்."

22. எப்போதும் மனோ சக்திக்குத் தேக சக்தி மீறினதாயிருக்கக் கூடாது. உலகத்தில் அரிய பெரிய காரியங்களைச் செய்தவர்கள் மனோ சக்தியை உடையவர்களே.
—"மருத்துவன்."

23. எந்தக் கடவுளைத் தியானிப்பது? என்பது கேள்வி. சைவப் பெரியார்களின் தனி உடைமையான சிவனையா? வைஷ்ணவர்களின் ஏகபோக உரிமையான மகாவிஷ்ணுவையா? கோயில் குளமில்லாது பரிதவிக்கும் பிர்ம தேவனையா? "பரமண்டலத்திலுள்ள எங்கள் பிதா"வையா? முஸ்லிம் சகோதரர்களின் அல்லாவையா? புத்தர்களின் "ஒன்றுமில்லாத கடவுளை"யா? மாரியம்மனையா? காளியாத்தாளையா? மதுரை வீரனையா? காட்டேரியையா? எந்தக் கடவுளைத் தியானிப்பது? பெயர்கள் வெவ்வேறாயினும் கடவுள் ஒருவர்தான் என்று வேதாந்தம் பேசலாம். ஆனால், அநுஷ்டானத்தில் பல கடவுள்கள் இருப்பதுதான் நாட்டின் ஒற்றுமைக்கும் விடுதலைக்கும் முக்கிய தடையாயிருக்கிறது.
—"ஆனந்த விகடன்."

24. ஐந்து வயதிற்கு மேல் 10 வயதுக்குள் 85,550. பத்திலிருந்து 15 வயதிற்குள் 2,33,533 விளையாடுஞ் சிறு குழந்தைகள் புருஷனை இழந்து விதவைகளாகப் பார்க்க யார் மனம் சகிக்கும்? பால்ய விவாகத்தால் ஏற்படும் கொடுமைகள் வெள்ளிடை மலைபோல் விளங்கும்போது வயது வந்த பிறகு கலியாணம் செய்வதால் பெண்களின் கற்புக் கெட்டுப்போகக் கூடுமென்று (சட்டசபை) அங்கத்தினர்களுள் ஒருவர் மசோதாவை எதிர்த்துப் பேசியது விந்தையிலும் விந்தையே.
—"ஒற்றுமை."

25. நாம் செய்யும் காரியங்களின் முடிவைப்பற்றி நினைந்து வருந்துவது அழகல்ல. இது எவ்வாறாமோ? முடிவு யாதாமோ? என்று திருப்பித் திருப்பி எண்ணுவோர் மனோ திடமற்றவர்கள் ஆவர்.
—"இந்தியன்."

26. உணவு அவ்வந் நாட்டு இயல்புக் கேற்றவண்ணம் கொள்ளல் வேண்டும், ஒரு நாட்டாருக்குக் கோதுமை யுரியதாயிருக்கும். மற்றொரு நாட்டவர்க்கு அரிசி பொருந்தியதா யிருக்கும். கோதுமை யுண்போர் அரிசியைக் குறை கூறுவதும் அரிசி யுண்போர் கோதுமையைக் குறை கூறுவதுந் தவறு தென்னாட்டார் பெரும்பாலும் அரிசியையே உணவுப் பொருளாகக் கொண்டுளார். பல்லாயிரம் ஆண்டுகளாக அரிசி தின்றோர் வழி வழி வந்த நமது நாட்டார் திடீரென அரிசியை நீக்கினால் நலன் விளையாது. அரிசியைத் தவிடு முற்றும் போமாறு தீட்டி யுண்பதால் கேடு விளைகிறது. அரிசியை அவ்வாறு தீட்டாது மேலுமிமட்டும் போம்படி குத்திச் சாப்பிட்டால் உடலுக்குப் பல திற நலன்களுண்டு. அரிசி மிக எளிதில் ஜீரணமாகக் கூடியது.
—"நவசக்தி."

27. நூல்களில் கூறப்படுபவைகளெல்லாம் "தேவ வார்த்தை"களென்று குரங்குப் பிடிவாதம செய்வதும், வியாக்கியானங்கள் கூறுவதும், தத்துவார்த்தங்கள் காட்டுவதும் முழு மூடத்தனமாகும்.
—"லக்ஷ்மி."

28. ஒன்றைத் தீமையென்று அறிந்தால் அதனை ஒரே அடியாக ஒழிக்க வேண்டும். குறைப்பது என்பது வெறும் பேச்சு.
—"லோகோபகாரி."

29. ஜுப்ளி கொண்டாடுவது என்பது ஆயிரக் கணக்கான ரூபாய்களை மூட்டை கட்டி, தனி மனிதன் தொப்பையை நிரப்பி, அப் பேர்வழியை இருமாந்திருக்கச் செய்வதென்பதல்ல; ஏமாளிகள் எவரேனுமிருப்பின் இனியேனும் விழிப்புறுவார்களாக.—"சுதந்தரன்."

30. காபியில் நன்மை கடுகளவும், தீமை பனையளவும் இருப்பதாக ஆங்கில வைத்திய நிபுணர்களும், தமிழ், சித்த, ஆயுர்வேத வைத்தியர்களும் கூறியுள்ளார்கள். நீர் ரோகத்தையும், உடம்பை உருக்குதலையும், பசியை மந்தப்படுத்தியும் தற்சமயத்தில் மட்டும் நாக்குக்கு ஒரு இனிப்பு சக்கரையும் பாலும் சேர்ப்பதால் ஏற்படுகிறதே யன்றி வேறென்ன? உண்மையில் தேயிலை பித்த குணமுடையது. இரவில் நித்திரையைக் கெடுக்கும் குணமுடையது. குடித்த போது சுறுசுறுப்பு அளிக்கிறது மட்டுமே அவைகளில் உள்ள குணம். கட்குடியரும் கூறுகிறதாவது, தாங்கள் உழைத்த தேக சிரமம் கட்குடி வெறியில் தெரிவதில்லை; சிரமபரிகார மாகிறது என்கிறார்கள். நோக்கு மிடத்து நம் நாட்டுப் பொருளாதார நிலை விருத்தி யடைய நம் நாட்டுப் பணம் நம் நாட்டிலேயே தங்க குடி ஒழித்தல் அத்யாவசியம்.
—"இந்து நேசன்."

31. விக்கிர வணக்கத்தைக் காட்டிலும் மகா கொடிய பாதகம் ஒன்றுமில்லை. அபிஷேகம் செய்வதும், ஆடையாதிகளால் அதை அலங்கரிப்பதும் அதற்குச் சாதம் படைப்பதும் அதனிடம் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்வதும் ஆகிய இவை யெல்லாம் பொம்மை விளையாடும் பிள்ளைகளின் சாங்கியமா யிருக்கிறது.
—"முத்தமிழ் நாட்டின் பள்ளி உதயம்."

32. எவரையும் சமோகமாய்த் திருப்தி யளிக்கச் செய்வதும், போதும் போதுமெனச் சொல்லக் கூடியதும் அன்னமிட லொன்றே யாகும்.
—"அகிலபாரு."

33. சுயநல வேட்டையில் மனச் சான்றை மறைத்துக் கொண்டு நாணமற்று வெளிவரும் வைதீகர்களுக்கு பொதுநலத்தின் பெருமையை அறிதற்குச் சிறிதும் இடமில்லாமல் போவது ஆச்சரியப் படத் தக்க தொன்றும்.
"தமிழன்."

34. உள்ளதை உள்ளபடி எடுத்துரைக்கின், முன் கூறி யிருக்கின்றனரே பெரியவாள் கலி பிறந்து விட்டது என்று சொல்லுகிறீர்கள்; இது உங்கள் ஜீவன விர்த்திக்காக உங்கள் முன்னோர் கற்பித்த கட்டுக் கதையே யன்றி வேறல்ல வென்று நாம் சொல்லவும் வேண்டுமோ? எப்படி எனில், பாரதம் கலியுகத்தில் பாடியதாயிருக்க மேலிடுங் காலமே என்று விசேடிப்ப தென்ன வென்றுதான் கேட்கிறோம்.
—"சுயமரியாதைத் தொண்டன்"

35. நம்முடைய நாட்டில் படிப்பெண்பது நூற்றுக்கு ஒன்றுகூட இல்லை. கோடிக் கணக்கான ஜனங்களுக்கு எழுத்து வாசனையே இல்லை. இத் தொகையினர்களுக் கெல்லாம் எழுத்துக் கற்றுக் கொடுத்த பிறகு சீர்திருத்தம் செய்வது அசாத்தியம்.—"விமோசனம்."

36. அடிமையுற்ற தேயத்தினர்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் அதிகம் ஏற்படுவது சகஜம். எவ்வளவிற் கெவ்வளவு அபிப்பிராய பேதங்கள் ஏற்படுகின்றனவோ, அவ்வளவிற் கதிகமாகத் தலைவர்கள் தோன்றுகிறார்கள்.
—இரங்கூன் "தேசோபகாரி."

37. கல்வி அறிவு ஒழுக்கக் குறைவினாலும், வருவாய், மரியாதை முதலியவைகளைப் பற்றிய உரிமை, இறுமாப்பு இவைகளாலுந் தான் சண்டை வருகிறது.
—"சித்தாந்தம்."

38. நாட்டில் சகோதர உணர்ச்சி உண்டாகவுஞ், சமாதானம் ஓங்கவும் எல்லோரும் பாடுபடுதல் அவசியமாகும்.
—"ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்."

39. வாண வேடிக்கையினால் பெருந் தொகையான திரவியம் நிமிஷ நேரத்தில் எரிந்து புகைந்து கரியாய்ப் போவது மாத்திரத்தோடமையாது சீவ மோசமும் விளைகின்றது.
—"இந்து சாதனம்."

40. மனம் மாறுபாடடைய வேண்டும்; எல்லோரும் ஸமத்வம் பெற வேண்டும்; ஒரு வகுப்பாரை, பிறிதொரு வகுப்பார் ஏமாற்றுவ தென்கிற எண்ணம் தொலைய வேண்டும். —"தெய்வீகன்."

41. மொழி ஒருவராலும் உண்டாக்கப்பட வில்லை. அது இயற்கையும் அன்று.
"செந்தமிழ்ச் செல்வி."

மலரும்.

கீழ் குறிப்பிட்டவர்களிடம்
நமது பத்திரிகையும் பிரசுரங்களும் கிடைக்கும்:

K. N. Sankaran Pillai,
No. 281, 2nd Division, Maradana.
COLOMBO.

S. K. M. ANGAMUTHU PILLAI Esq.,
NEWS AGENCY, SHOP & MALIGAI,
PERAMBALUR.

பூலோகத்தின் வயதுதான் என்ன?

(சாஸ்திர ஆராய்ச்சி.)

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

பூலோகம் மிகவும் முதிர்ந்த வயதையுடையதாயினும் வெகு ஆச்சரியப்படத் தக்க சரித்திரத்தை யுடைத்தா யிருக்கிறது. அதன் உண்மை உற்பத்தி தெளிவாகத் தெரிந்துகொள்ளக் கூடாமலிருந்த போதிலும் பூலோக—ரஸாயன—பிரகிருதி சாஸ்திரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் அதிகரிக்க அதிகரிக்க அநேக உண்மை இரகசியங்கள் தெற்றெனத் தெளிவாயின.

பூமியில் புதைந்த பாறைகளில் தோன்றும் சமுத்திர அலைகள் போன்ற குறிகளும், பலவித வெடிப்புகளும், மண்ணில் அமிழ்த்தப்பட்ட அடையாளங்களும், தண்ணீரால் தேய்த்து உருவாக்கப்பட்ட கூளாங் கற்களும், உருண்டையாக்கப்பட்ட மணற் துகளும், பலவிதக் களிமண்களும், சுண்ணாம்புக் கற்களும், பழம்பாறைகளில் அமிழ்ந்து கிடக்கும் பலவித உயிர்களின் அங்கக் கட்டுகளும், பூலோகத்தின் பூருவோத்திரத்தைப் புகைப்படம் போல் புகலாநிற்கின்றன.

பூலோக உற்பத்தி

சூரியன் ஓர் பிர்மாண்டமான நட்சத்திரமாக விருந்தபோது அதினின்று பூலோகம் பிறந்ததெனெ அறியக்கிடக்கிறது. முற்காலத்தில் சூரியனைவிட மிகப் பெரிதா யிருந்த மற்றொரு உருவம் சூரியனை அடுத்துப் போய்க்கொண்டிருந்த போது, ஒன்றுக்கொன்று இழுக்குஞ் சக்தியினால் உருவத்தில் கொஞ்சம் சிறிதா யிருந்த சூரியன் தனது உருவம் அகன்று கொடுக்க ஏற்பட்டு, அப் பெரிய நட்சத்திரம் கடந்துபோன பிறகு சூரியன் முன்போலத் தனது உருவத்தை யடைந்த காலையில் அதினின்றும் சிறிய பாகங்கள் அகன்று அந்தரத்திலேயே சுழன்றுகொண்டு தனியாகத் தங்கிவிட ஏற்பட்டதாம். அவ்விதமாகப் புதிதாக ஏற்பட்ட பாகங்களில் ஒன்று பூலோக

197895

மெனக் கருதப்படுகிறது. இப் பூலோகம் முதன்மையில் தகிக்கக் கூடிய வாயு பதார்த்தமா யிருந்து அதின் உஷ்ணம் பல பக்கங்களிலும் பறந்து செல்லச் செல்ல—குளிரக் குளிர—உஷ்ணமான ஜல பதார்த்தமாக மேல் பாகம் மாறிக் கடைசியில் அதிகம் குளிர்ந்து திட பதார்த்தமான தெனக் கூறப்படுகிறது. ஆகவே இன்றும் பூமியின் உட்பாகம் பெரும் உஷ்ணம் பொருந்தியதாகவே யிருக்கிறது. பூமியின் குளிர்ந்த திட பதார்த்தம் மேல் பரப்பிலிருந்து சுமார் 40 மைல் ஆழம்வரை யிருக்கும். அதற்கப்பால் உஷ்ணம் அதிகரித்துக்கொண்டே போய் மத்தியில் ஜ்வாலை கொழுந்துவிட்டெரிந்துகொண் டிருக்கிறதெனக் கூறப்படுகிறது.

பூலோகம் பூர்த்தியான விதம்.

பூலோகத்தைச் சுற்றி சுமார் 100 மைல் உயரம்வரை தான் நாமறிந்த காற்று பரவிநிற்கிறது. அதற்கப்பால் வாயுவே யில்லையெனத் தெரிகிறது. அவ்வாறு ஏதேனுமிருந்தால் நாமறிந்து அனுபவிக்கும் வாயுவைப் போலல்லாது வேறு வகையான வாயு விருக்கலாம். விண்வீழ் கொள்ளிகள் (Meteors) அந்தரத்திலிருந்து பூமியை நாடி தினம் சுமார் 2 கோடி பாய்ந்து விழுகின்றன. இந்த விண்வீழ் கொள்ளிகள் முன்பு உலக உற்பத்தியான போது ஏற்பட்ட சிறு துண்டுகளாகவாவது அல்லது மற்ற கிரகங்களின் சிறு பாகங்களாக விருக்கலாம். இவைகள் ஒவ்வொன்றும் ஓர் அங்குல நீளத்துக்குமே யில்லை. இவைகள் பூலோகத்தை யடுத்து அதாவது 100 மைல் தூரத்திற்குள் வந்தவுடன் ஒரு விநாடிக்குச் சுமார் 9-லிருந்து 47 மைல் தூரம் வீதம் பாய்ந்தோடுகின்றன. இவ்வாறு வெகு வேகமாய்க் காற்றில் பாய்ந்தோடுவதால் அவைகளில் அநேகம் நெருப்புப் பிடித்து எரிந்து பூமியில் சாம்பலாக வந்து சேர்கின்றன. இவ்விதம் சாம்பலாகப் போகாமலே அநேக விண்வீழ் கொள்ளிகள் பூமியை வந்தடைகின்றன. இவைகள் சராசரி குறைந்தது ஒன்று வீதம் பூமியில் வந்து சேருகின்றன. இப்படி வந்து சேரும் கொள்ளிகளில் பூமியில் காணப்படும் சுமார் 29 விதமான உலோக அம்சங்கள் காணப்படுகின்றன. அதனோடு பூமியில் இதுவரை காணப்படாத 6 உலோகக் கலப்புடைய வஸ்துக்கள் காணப்படுகின்றனவாம்.

பூமி, விண்வீழ் கொள்ளிகள், சூரியன், சந்திரன் மற்றும் இதர விண் மீன்கள் (நட்சத்திரங்கள்) யாவும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவைகளே. சூரியன் குறுக்காக 8,66,400 மைல் நீளமானது. பூமி 7,918 மைல், சந்திரன் 2,162 மைல் நீளமானது. பூமியும், சந்திரனும் சூரியனின் நெருங்கிய பந்துவெனக் கூறலாம்.

பூமியின் வஸ்துக்கள் பொதுவாக ஜலத்தைவிட $5\frac{1}{2}$ பங்கு அதிகமாகவும்; சந்திரன் $3\frac{1}{2}$ பங்கு அதிகமாகவும்; சூரியன் $1\frac{1}{4}$ பங்கு அதிகமாகவும் கனமா யிருக்கின்றன. சூரியனின் வஸ்துக்கள் பெரும்பாலும் உஷ்ணமாய் வாயுமயமா யிருப்பதால் குளிர்ந்து திடமான பூமியைவிட இலேசாகக் காணப்படுகிறது.

பூமி தன்னைத்தானே சுற்றுவதோடு சூரியனையும் சுற்றி வருகிறது. உண்மையில் சகல விண் மீன்களும் சூரியனை மத்தியில் வைத்துச் சுற்றி வருகின்றன. இவைகள் ஒன்றுக்கொன் றேற்பட்ட இழுக்குஞ் சக்தியால் ஒன்றை யொன்று இழுத்தவண்ணமாகத் தங்கள் தங்கள் ஸ்தானங்களிலிருந்து சுற்றிக்கொண்டு வருகின்றன. பூமி தன்னைத் தானே சுற்றும்போது விநாடிக்கு $18\frac{1}{2}$ மைல் வீதம் சுற்றுகிறது. சூரியனைச் சுற்றும் போது மணிக்கு 66,000 மைல் வீதம் சுற்றிச் செல்லுகிறது. சூரியனும் தன்னைத் தானே 25 நாட்களில் ஒரு முறை சுற்றிக் கொள்ளுகிறது. பூமி 6590×10^{18} டன் (6,590,000,000,000,000,000,000 டன்) கனமானதென்றும் சூரியன் 1983×10^{30} கிராம் (1 டன் = 454 கிராம்) கனமா யிருக்கிறதென்று கணக்கிடப்பட் டிருக்கிறது.*

பூமி அமைப்பின் மாறுபாடுகள்.

சேம்பர்லேய்ன், மூல்டன் (T. C. Chamberlain and F. A. Moulton 1905) என்ற ஆராய்ச்சிக்காரர்களின் அபிப்பிராயப்படி பூலோகம் அதின் மத்திய தகிக்கும் பாகத்தைத் தவிர (இப் பாகத்தின் குறுக்களவு மாத்திரம் 4346 மைல்) மற்ற மேல் பாகமெல்லாம் அந்தரத்தினின்று விழும் விண்வீழ் கொள்ளிகள் போன்றவைகளால் கட்டப்பட்டிருக்கிறதென அறியக் கிடக்கிறது. ஆனால் பூமியின் மீது தினம் குறைந்தது ஒரு விண்வீழ் கொள்ளி வந்து சேருகிறதென்று முன்பு கூறினோம். ஆகவே இவ்விதம் விழும் வற்றால் பூமியின் மேற் பாகம் உண்டாக்கப்பட்டதென்றால் பூலோகத்தின் வயது அளவற்றதா யிருக்க வேண்டுமல்லவா?

பூலோகம் தனது தந்தை சூரியனின்று பிரிந்து வளர்ந்து கொண்டே வரும் போது பலவிதத் தோற்றங்களுடன் திகழ்ந்திருக்க வேண்டும். ஒவ்வொரு சமயமும் வெவ்வேறு விதமான மலை உருவங்களும், சமுத்திரங்களும், ஏரிகளும், குளங்களும், தாவர வர்க்கங்களும், மிருக வர்க்கங்களும் இருந்திருக்க வேண்டும்.

* இவைகளின் கனங்களை அவைகள் தண்ணீரைவிட அதிகக் கனமாயிருப்பதின் அளவைக் கொண்டும், ஒன்றுக்கொன்று இழுக்குஞ் சக்தியின் அளவைக் கொண்டும் திட்டப்படுத்தப் படுகின்றன.

அக் காலங்களின் தாவர வர்க்கங்கள், மிருகம், பட்சி முதலிய வர்க்கங்களும் பூமியின் மாறுதல்களில் சேர்த்து மண்ணோடு ஒன்றுக்கப்பட்டு வந்திருக்க வேண்டும். மேலும் காலாகாலங்களில் பூமியின் மேற் பாகம் ஆறுகளால் கரைக்கப்பட்டு சமுத்திரங்களில் கொண்டு சேர்க்கப்பட்டும், தண்ணீரோடு கலந்து ரஸாயன மாறுதலையடைந்து மாற்றப்பட்டும் வந்திருக்கிறது. உலகத்தில் பல (சுமார் 8000) நதிகளின் நீரைப் பரிசோதித்துப் பார்த்து அவைகளால் கொண்டு செல்லப்படும் தூசு முதலியவற்றை ஆராய்ந்ததில் உலகத்தின் ஒரு அடி உயரத்தை நதிகள் சுமார் 30,000 வருடங்களில் கரைத்துவிடக் கூடுமெனக் கூறப்படுகிறது.* இவ்விதமாகக் கரைக்கப்பட்டுப் போவதில், ஒரு வகையில் மண், கல் இவைகள் சமுத்திரத்திற்குக் கொண்டு போகப்படுகின்றன. மற்றொரு வகையில் பூமியின் வஸ்துக்கள் ரஸாயன மாறுதலடைந்து காணப்படாமற் போய்விடுகிறது. இவ்வாறு ரஸாயன மாறுதல் வகையில் மாத்திரம் உலகத்தின் ஒரு அடி உயரம் சுமார் 8600 வருஷங்களில் கரைந்து மறைந்து விடுகிறதாம்.

பூலோகம் சமுத்திரப் பரப்புக்கு மேல் சராசரி சுமார் 2300 அடி உயரமாயும், சமுத்திரம் 13,000 அடி ஆழமாயு மிருக்கின்றன. நதிகளால் பூமியின் மேற் பாகம் ரஸாயன மாறுதலடைந்தால் 8600 வருஷங்களில் உலகம் ஒரு அடி உயரம் குறைக்கப்படு மென்றோம். அதே விகிதப்படி உலகம் சமுத்திரப் பரப்பு மட்டமாக்க சுமார் 19,780,000 வருஷங்களாகும். இவ்வித மாறுபாடுக ளொருபுறமிருக்க மற்றொரு மாறுபாடுமுளது. பூமியின் உட்பாகத்தின் உஷ்ணம், ஜல பதார்த்தம், வாயு பதார்த்தங்கள் முதலியவைகள் திடீர் திடீரென்று பலவித மாறுதல்களை யடைவதால் பூமி ஒரு இடத்தில் பூகம்பத்தோடும், பூகம்ப மேற்படாமலும், உயர்த்தப்பட்டும், மற்றோரிடத்தில் தாழ்த்தப்பட்டும், வளைக்கப்பட்டும் அநேக விதமான அமைப்புகள் உண்டாக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவ்விதமாகப் பூமியின் மேற் பாகம் புதிய மாறுதலையடைந்து கொண்டே யிருக்க நதிகளும் அவைகளைக் கரைத்துக் கொண்டே யிருக்கிறது. பூமியின் தோற்ற மாற்றங்களைப் பற்றி யெழுதவேண்டு மென்றால் விரியுமாதலால் இதனோடு விடுத்தனம்.

சமுத்திரத்தின் வயது.

இதுகால் பூலோகம் உண்டான விதத்தைப் பற்றி வெகு சுருக்கமாகக் கவனித்தோம். இப்பொழுது அது உண்டான காலத்தை நமக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு நிர்ணயிக்க முயலுவோம்.

* F. W. Clarke 1924.

சமுத்திரத்திலுள்ள உப்பு வகை யாவும் ஆயிரக் கணக்கான ஆறுகளால் பூமியிலுள்ள பாறைகளிலிருந்து கரைத்துக் கொண்டேகிச் சேர்க்கப்பட்டவைகள். உலகத்தின் சுமார் முக்கால் பாகம் சமுத்திரமா யிருப்பது யாவருமறிந்த விஷயம். உலகத்தைப் பரப்பி நிற்கும் சமுத்திரத்தில் சுமார் 1,180,000,000,000,000,000 டன் ஜலமுள்ளதென கணக்கெடுக்கப்பட் டிருக்கிறது.* சமுத்திரத்தின் ஜலம் 100 டன்னில் 1.08 டன் உப்பையுடையதா யிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆகவே சமுத்திரங்களில் சுமார் 12,600,000,000,000,000 டன் உப்பு வகை யிருக்க வேண்டும். மேலும் ஆறுகள் வருஷத்திற்கு பூமியிலிருந்து சுமார் 35,000,000 டன் உப்பை சமுத்திரத்திற்குக் கொண்டு செல்லுகின்றனவாம்.¶ ஆகவே சமுத்திரத்திலுள்ள மொத்த உப்பை ($12,600 \times 10^{12}$ டன்) 35,000,000 டன்னால் வகுத்தால் 360,000,000 வருஷங்கள் வருகின்றன, இவ் வருஷங்கள் சமுத்திரம் உண்டான காலத்தைக் குறிக்கிறது.

ஆனால் ஆறுகள் வருஷா வருஷம் ஒரே அளவுடன் உப்புகளைச் சமுத்திரங்களில் கொண்டு சேர்க்கின்றன வென்று வைத்துக் கொண்டே மேலே குறித்த வருஷங்கள் கணக்கெடுக்கப்பட் டிருக்கின்றன. இது தவறான கொள்கையாகும். ஏனெனில் முற் காலத்தில் பூமி சமுத்திரப் பரப்புக்கு மேல் குறைவான உயரமாயும், அதிக விரிவாயும், சமுத்திரம் அதிக விசாலமாயு மிருந்திருப்பதால் தற்காலத்து ஆறுகள் பூமியின் உப்புகளைக் கரைத்துக் கொண்டு போகும் அளவு முற்காலத்தைவிட அதிகமா யிருக்க வேண்டும். ஆகவே சில ஆராய்ச்சிக்காரர்கள் முன் குறிப்பிட்ட 360,000,000 வருஷங்களை ஐந்தால் பெருக்கினால் இவ் வித்தியாசம் ஒழுங்காக்கப் படுகிறதென்று கூறுவதால்,† சமுத்திரம் சுமார் $360,000,000 \times 5 = 1,800,000,000$ வருஷங்களுக்கு முன் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று சொல்ல வேண்டும். பூலோகத்தின் மேல் பாகம் உண்டானபோதே சமுத்திரப் பள்ளங்கள் ஏற்பட்டிருக்க வேண்டுமானதால் பூலோகத்தின் மேல்பாகம் உண்டாகி சுமார் 1,800,000,000 வருஷங்கள் சென்றிருக்க வேண்டும்.

மற்றொரு ஆராய்ச்சியும் உட்பாகம் உண்டான காலமும்

பூலோகத்தின் மேற்பாகம் உண்டாகிக் கடந்துபோன வருஷங்களை ஒருவாறு கணக்கெடுத்தோம். இனி அதனையே மற்றொரு மிகவும் நிச்சயமான ஆராய்ச்சியால் கணக்கெடுப்பதோடு உட்பாகம் அதாவது கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும் மத்திய பாகம் ஏற்பட்டு எத்தனை வருஷங்களாகின்றன வென்றும் ஆராய்வோம்.

* J. Joly of Dublin (1899). ¶ A. Holmes 1927.
† J. W. Gregory 1921.

உலகில் உள்ள பழம்பாறைகளில் காணப்படும் யுரேனியம், தோரியம், ரேடியம், ஆக்டினியம் என்ற மிகவும் கனமான உலோக வகைகள் மிகவும் ஆச்சரியப்படத் தக்கதாக நடந்துகொள்ளுகின்றன. ரேடியம் என்பது திடீர் திடீரென்று தனது பாகத்தின் வெகு சிறிய அளவை வெளியில் வெகு வேகமாய்ப் பீரங்கிக் குண்டு போல் அனுப்புகிறது. அவ்வாறு அனுப்பிய பிறகு தானே சிறிது வேறொரு வகை உலோகமாக மாறி விடுகிறது. இவ்விதமாகத் திடீர் திடீரென்று எய்தலை அது எவ்விடத்தில் எவ்விதமா யிருந்த போதிலும், மற்றும் எவ்விதக் காரணத்தாலும் தடுக்க முடியாது. இவ்வாறு எய்து, எய்து மாறிக்கொண்டே போய் கடைசியில் ஈயமாக மாறி விடுகிறது. (முன்பு இதனைத் தங்கமென அறியாது கருதினர்) இவ் வுலோகத்தினின்றும் விடுபட்டோடும் சிறிய சிறிய பாகத்திற்கு "ஹீலியம்" எனப் பெயர். இது ஒரு விநாடிக்கு 8,800 மைல் விதம் வேகமாய் விடுபட்டோடுகிறது. ஆனால் இதின் வேகம் சுமார் 2 அல்லது 3 அங்குலத்திற்குள் குறைந்து தன் சக்தியை இழந்து விடுகிறது.

இது விஷயத்தில் இவண் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இவ் வுலோகங்கள் வெடித்து வெடித்து எய்து மாறிக் கொண்டே போகுங் குணம் எவ் வகையாயிலும் தடுக்க முடியாதது ஒன்று. இவ்விதமாகப் படிப்படியாக மாறி ஈயமாவது எக் காலத்திலும் எவ்விடத்திலும் ஒரே விதம் என்பது மற்றொன்று. ஆகவே யுரேனியம் மாறுதலடையும் கால விதத்தையும், வெகு பழமையான பாறையிலுள்ள மொத்த யுரேனியம் இவ்வளவென்று கண்டால் அப் பாறையின் வயதை அதாவது பூமியின் மேல் பாகம் உண்டாகி முடிந்த காலத்தைக் கணித்து விடலாம்.

யுரேனியத்தினின்றும் வெளிப்படும் ஹீலியம் அநேகமாக யுரேனியத்தை யுடைய பாறையிலேயே சார்ந்து விடுவதால் அந்த ஹீலியம் எவ்வளவிருக்கிற தென்று கண்டு கொண்டு அப் பாறையின் வயதை நிர்ணயிக்க முடியும். இதனைக் கொண்டு லார்டு ரேலே என்பவர் பழம் பாறை யொன்றின் வயதை 570,000,000 வருஷங்களென ஆராய்ந்தார். ஆனால் யுரேனியத்திலிருந்து வெளியாகும் ஹீலியம் முழுதும் அப் பாறையில் தங்கி விடாததால் இக்

கணக்கு வெகு சொர்ப்பமானதாக வேண்டும். இதை விடுத்து யுரேனியம் கடைசியாக மாறும் ஈயத்தின் அளவைக் கண்டு கணக்கெடுத்தால் அதை உண்மையென சந்தேகமில்லாமல் கொள்ளலாம். ஏ. ஹோல்ம்ஸ் (A. Holmes) என்பவர் 1927-ல் ஒரு வருஷத்தில் 1,000,000 கிராம் யுரேனியம் $\frac{1}{7400}$ கிராம் ஈயமாக மாறி விடுகிறதெனக் கண்டுபிடித்திருக்கிறார். ஆகவே பண்டை காலத்து யுரேனியப் பாறைகளிலுள்ள ஈயத்தின் அளவைக் கண்டு அப் பாறையின் வயதைக் கணித்துவிடலாமல்லவா? 1930–ஆகஸ்ட் மாதம் ஏ. எப். கோவரிக் (Prof. A. F. Kovarik) என்பவர் அமெரிக்கா ஏல் சர்வகலாசாலையில் உலகத்திலேயே இதுவரை அறிந்த வெகு பழமையான யுரேனியப் பாறையி னொன்றின் வயதை 1,852,000,000 வருஷங்களென (மற்றொரு அதே விதப் பாறையின் வயதை 1,465,000,000 வருஷங்களாக)க் கண்டுபிடித் திருக்கிறார். இப் பழமையான பாறையின் வயதும் முன்பு நாம் சமுத்திரத்தின் உப்பைக் கொண்டு அளவிட்ட 1,800,000,000 வருஷங்களும் ஏறக்குறைய ஒத்திருப்பது நன்கு தெரிகிறது. ஆகவே பூமியின் மேல் பாகம் உண்டான காலம் இன்று நமக்குக் கிடைத்த பழம் பாறையின் வயதைத் தெரிந்தவரையில் சுமார் 1,852,000,000 வருஷங்களெனக் கூறிவிடலாம். இதைவிட வெகு பழமையான பாறையொன்றை வேறோரிடத்தில் கண்டுபிடித்து விட்டால் நாம் குறிப்பிட்ட வயது குறைவாகி விடலாம். ஆனால் இவ் வருஷம் வரை வேறு மிகவும் பழமையான பாறை கண்டுபிடியாதவரை மேல் குறித்த வயதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகத்தா னிருக்கிறது.

பூலோகம் ஆதியிலிருந்து விண்வீழ் கொள்ளிகளால் சிறிது சிறிதாக நிறைந்து கட்டப்பட்டு வந்ததாகத் துவக்கத்தில் கூறினோம். 1926-ல் ஜெர்மெனியில் பேர்லின் என்ற நகரில் எவ். பானெத் (F. Paneth) என்பவர் இதுவரையறிந்த மிகவும் பழமையான இரும்பையுடைய விண்வீழ் கொள்ளியை (Iron meteorite)ப் பரிசோதித்து அதின் வயதை 2,600,000,000 வருஷங்களெனக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே இன்றுவரை தெரிந்த வெகு பழமையான விண்வீழ் கொள்ளியைக் கொண்டு சாஸ்திர ஆராய்ச்சியால் நாமறிந்த வரை பூலோகம் பூருவத்தில் அதின் மத்திய பாகத்திலிருந்து பெரிதாகி வளர்ந்த வயதை சுமார் 2,600,000,000 வருஷங்களென்றும் பூலோகத்தில் மேல் பாகம் பூர்த்தியாகி முடிந்து சுமார் 1,852,000,000 வருஷங்களெனவும் கொள்ளக் கிடக்கிறது. இவ்விரண்டு காலங்களின் வித்தியாசம் (உலகத்தில் வெகு பழமையான விண்வீழ் கொள்ளியின் வயதிற்கும், பழமையான யுரேனியப் பாறையின் வயதிற்குமுள்ள வித்தியாசம்) அதாவது 748,000,000

வருஷங்கள் உலகம் இவ் வுருவ நிலை பூர்த்தி யடைய யேற்பட்ட இடைக் காலமாகும். உலக அமைப்பு பூர்த்தி யடைந்து சுமார் 2,000,000,000 வருஷங்களாவதால் பூமி தன்னைத்தானே சுமார் 730,500,000,000 தடவை சுற்றி இரவு பகல் உண்டாக்கி யிருக்க வேண்டும்.

மேலே குறித்த யுரேனியம், ரேடியங்களைக் கொண்ட ஆராய்ச்சிகளும், மிகவும் பழய புதைந்து கல்லாய்ப் போன அங்கக் கட்டுகளும், உயிர் வர்க்கங்கள் சுமார் 1,500,000,000 வருஷங்களுக்கு முன்னிருந்து ஆரம்பித்திருக்கக் கூடுமென்றும், கல்லாயுதங்கள், புதைந்த மானிட அங்கக் கட்டுகளில் சேமிப்பு இவைகள் மானிட வர்க்கம் சுமார் 1,500,000 வருஷங்களுக்கு முன் ஆரம்பித்திருக்க வேண்டுமென்றும் கூறுகின்றனவாம்.

ஹிந்து வேதப்படி பூலோகத்தின் வயது.

ஹிந்து வேதங்களின் கணக்குப்படி பூலோகந் தோன்றித் திகழ்ந்த வருஷங்களை கணக்கெடுத்தால் சாஸ்திர ஆராய்ச்சியை வெகுவாக அடுத்திருப்பதானது மிகவும் ஆச்சரியப்படத் தக்கதாயிருப்பதோடு மல்லாமல் சாஸ்திர ஆராய்ச்சியின் பெருமையையும் நிலை நாட்டுகிறது.

அதர்வ வேதப்படி உலகந் தோன்றி 4,320,000,000 வருடங்கள்வரை தோன்றி யிருப்பதாகக் கூறப்படுகிறது.* மனு நூற்படி உலகந் தோன்றி நிற்கும் காலத்தை 1,000 சதுர் யுகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. "சூரிய சித்தன்" என்ற பண்டைய இந்தியவான சாஸ்திர நூல் பிரகாரம் ஒவ்வொரு சதுர் யுகமும் 12,000 தெய்விய யுகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தெய்விய வருஷமும் 360 சாதாரண வருஷங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. மனு நூற்படி சத்யுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் இவைகள் முறையே 4800, 3600, 2400, 1200 தெய்விய வருஷங்களாகக் கூறுவது. ஆதலால்

சத்யுகம்	4,800 × 360	=	1,728,000	வருஷங்கள்
திரேதாயுகம்	3,600 × 350	=	1,296,000	,,
துவாபரயுகம்	2,400 × 360	=	864,000	,,
கலியுகம்	1,200 × 360	=	432,000	,,
	மொத்தம்	=	4,320,000	

* சமஸ்கிருதத்தில் உலகந் தோன்றி யிருக்கும் காலத்திற்கு 'பிரமதின்' என்றும் அக்காலம் போய் உலகம் மறைந்திருக்கும் (காணப்படாமலிருக்கும்) காலத்திற்கு 'பிரமராத்ரி' என்றும் கூறப்படுகிறது.

அதாவது ஒரு சதுர் யுகத்தின் மொத்த வருடங்கள் 4,320,000. மறுபடியும், மனு நூற்படி உலகந் தோன்றியிருக்குங் காலத்தை ('பிரமதின்' அல்லது 1000 சதுர் யுகங்கள்) 14 "மன்வந்திரங்"களாகவும், 15 "சந்தி"களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது.* ஒரு "மன்வந்திரம்" 71 சதுர் யுகங்களாம்.

வேதச் சுருதிப்படி இப்பொழுது 7-வது "மன்வந்திர"த்தில் 28-வது கலியுகம் நடக்கிறதாகக் கூறப்படுவதால் உலகந் தோன்றி கடந்த காலத்தைப் பின்வருமாறு கணக்கிடலாம்:

1. இப்பொழுது 7-வது "மன்வந்திர"ம் நடப்பதால் கடந்த 6 "மன்வந்திரம்"வரை ஒரு "மன்வந்திர"த்திற்கு 71 சதுர் யுகங்கள் வீதமும், ஒரு சதுர் யுகத்திற்கு 4,320,000 வருஷங்கள் வீதமும் கூடிய மொத்த வருஷங்கள்

   $6 \times 71 \times 4,320,000 = 1,840,320,000.$

2. இப்பொழுது 28-வது கலியுகம் நடப்பதால் சத்யுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் இவைகள் (ஒரு சதுர்யுகம்) 27 தடவை வந்து போயிருக்கிறது. எனவே ஒரு சதுர்யுகத்திற்கு 4,320,000 வருஷங்கள் வீதம் கூடிய மொத்த வருஷங்கள்

   $27 \times 4,320,000 = 116,640,000.$

3. இப்பொழுது கலியுகம் நடப்பதால் இச் சதுர் யுகத்தில் சத்யுகம், திரேதாயுகம், துவாபரயுகம் இவைகளில் நடந்து போன மொத்த வருஷங்கள் $4,320,000 - 432,000 = 3,888,000.$

   (அதாவது ஒரு சதுர் யுகத்திலிருந்து மொத்த கலியுக வருஷங்களைக் கழிக்க.)

4. கலியுகத்தில் இதுவரை கழிந்துபோன மொத்த வருஷங்கள் 5035.

ஆதலால் பூலோகம் உண்டாகிக் கடந்து போன மொத்த வருஷங்கள் 1,960,853,035.

வேத நூற்படி ஆராய்ந்த உலக உற்பத்தியான வருஷமும் (1,960,853,035) சாஸ்திர ஆராய்ச்சியினால் கணக்கிட்ட உலகத்தின் மேல் பாகம் உண்டாகி முடிந்த வருஷமும் (1,852,000 000) ஏறக்குறைய ஒத்திருப்பதால் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிகளின் உச்சமும், உண்மையும் நன்கு புலனாகிறது. ஆகவே அதே சாஸ்திர ஆராய்ச்சியால் பூலோகத்தின் மத்திய பாகம் ஏற்பட்டு பூமி யுருவாகிக் கழிந்த மொத்த வருஷங்கள் 2,600,000,000 உண்மையெனச் சந்தேகமின்றி ஒப்புக்கொள்ள ஏற்படுகிறதல்லவா?

* Vedic Magazine vol. V. No. 3. P. P. 162.

ஓர் கீழ் நாட்டு சர்வகலாசாலை.

(கவிச் சக்கிரவர்த்தி ரவீந்திரநாத் தாகூர் எழுதியது.)

மொழிபெயர்ப்பாளர்: திரு. E. பரமசிவம் அவர்கள், B.A.

(439-ம் பக்கத் தொடர்ச்சி.)

பரத கண்டத்தில் பாஷைகள் பல இருப்பதால் அறிவுத் துறையில் இந்தியா ஒற்றுமைப் படுவது அசாத்திய மெனக் கூறுகின்றனர். இஃது மனிதனுக்கு அவயவங்கள் பல இருப்பதால் சரீரம் ஒன்றென்ற உணர்ச்சியின்றி யிருக்கிறானென்றும், அவயவமில்லாத தூண்டிற் புழுவிற்குத்தான் சரீரம் ஒன்றென்ற உணர்ச்சி யுண்டென்றும் சொல்வதைப்போல் அறிவீனமாகும்.

தனித் தனி பாஷையுடைய எந்த மேனாட்டையும் இந்தியா ஒத்திருக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் இந்தியா பல்வேறு பாஷைகளையும் ஜனங்களையும் உடைய ஐரோப்பாக் கண்டத்தைப் போலிருக்கிறது. ஐரோப்பா முழுவதும் ஒரே பாஷையாக இல்லாதிருந்தும் ஒரே அறிவுலகத்தை அடிப்படையாகக் கொண்ட நாகரீகத்தில் ஒன்றுபட்டிருப்பது பிரத்தியக்ஷம். முற்காலத்தில் அகில ஐரோப்பாவும் லத்தீன் பாஷையின் மூலம் கல்வி பெற்றது உண்மையே. அஃது பாஷைகள் விருத்தியடையாமல் அறிவு அரும்பிய காலம் என்பதைக் கருத்தில் வைக்கவேண்டும். ஒரே பாஷையைப் போதனா பாஷையாகச் சகல மேனாடுகளும் கொண்டிருந்த அக் காலத்தில், தங்கள் தங்கள் அறிவு வளர்ச்சியை வெளியிட ஏதுவில்லாதிருந்தது. ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் தனிப் பாஷை யேற்பட்ட பின்புதான் மேனாட்டில் கலாஞான ஐக்கியம் ஏற்பட்டது. மொழி வித்தியாசமே ஐரோப்பாவில் கலைக்குப் புத்துயிர் அளித்துக் கலைப் பெருக்கிற்குச் சாதகமளித்தது. பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகள் தங்கள் சுயபாஷைகளின் மூலம் மேனாட்டுக் கலா பொக்கிஷத்திற்கு ஆக்கம் அளித்திராவிட்டால் மேனாட்டு நாகரீகத்திற்குப் பெரும் நஷ்டம் விளைந்திருக்குமெனச் சொல்லத் தேவையில்லை.

ஒரு காலத்தில் இந்தியாவிலும் சமஸ்கிருதம் பொது பாஷையாக இருந்தது. பாத கண்டத்தில் வதியும் மக்கள் பல குழுங்கினரும் தங்கள் தங்கள் இயற்கைத் தன்மைகளை வெளியிட்டு ஒருவரை யொருவர் உள்ளவாறு அறிவதற்குத் தாய் பாஷைகள் விருத்தியடைவது அவசியமாயிற்று. மேற் கூறியவற்றை ஒரு அந்நிய பாஷை செய்ய ஒருக்காலும் முடியாது.

ஐக்கிய மாகாணங்கள், கானடா, இதர ஆங்கிலக் குடியேற்ற நாடுகள் ஆகியவற்றின் தாய் பாஷை ஆங்கிலம். பிரிட்டிஷ் தீவுகளில் பிறந்து வளர்ந்த ஆங்கில பாஷையில் பேரிலக்கியங்கள் உண்டு. இவ்விதம் தாய் நாட்டில் பல நூற்றாண்டுகள் வளர்ந்து, அரிய இலக்கியங்களை ஈன்ற ஆங்கில பாஷை வேறு சரித்திரப் போக்கையுடைய அந்நிய நாட்டில் கையாளப்படும்போது அந் நாட்டினர் சுயக் கலாபிவிருத்தி, சுய அறிவு, சுய வாக்குவன்மை முதலியவற்றைப் பாதிக்கிறது. ஆங்கிலத்தை அதன் ஒப்பற்ற இலக்கியப் பொக்கிஷத்துடன் அந்நிய நாடு ஏற்றுக்கொள்ளுவது கடல் வாழ் திமிங்கலம் சுவாசாஸயத்தை இரவல் வாங்கிக்கொள்வதை நிகர்க்கும்; அந் நாடு முன்னேற்றமடைய முடியாது. தங்கள் மூதாதையர் பாஷையே தாய் பாஷையாகக் கொண்ட ஜாதியாரின் கதி இவ்வாறானால் அந்நிய மொழியைப் போதனா பாஷையாகக் கொள்ளும் நாட்டின் கதி அதோகதி தான். பாஷையானது, குடை, சட்டை முதலியவற்றைப்போல் கடன் வாங்கக்கூடிய வஸ்துவல்ல; அஃது நம் தோலைப்போன்றது. ஒரு பொய்க்குதிரை பந்தயக் குதிரையின் தோலைப் போர்த்துக்கொள்ளுவதினால் பந்தயத்தில் தோற்றுப் போவதுடன் ஒரு வண்டியைக்கூட இழுக்கச் சக்தியற்றதாயிருக்குமெனச் சொல்லத் தேவையில்லை. இப்போது ஜப்பானியக் கலைஞர்களிற் சிலர் ஐரோப்பியக் கலையைக் காப்பியடிப்பதின் பயனை யறியவில்லையா? சில சமயம் காப்பியடிப்பதினால் உண்டாகும் கலை கவர்ச்சியுடையதாயிருக்கலாம். எனினும் இம்மாதிரிக் கலை அழகாகத் தோன்றினும் பலனற்ற செயற்கை மலரையொக்கும்.

உயர்ந்த கல்வியளித்து மக்கள் மனதைக் கவர்ந்து, அவர்களின் சக்தியை யெழுப்பி, நாட்டின் கலைக்கு ஆக்கமளிக்கக்கூடிய கல்வி நிலயங்கள் சகல பெரிய தேசங்களிலும உண்டு. இவ்விதம் தங்கள் நாட்டின் பொதுப் பீடத்தில் யாக நெருப்பைக் கொளுத்தி, அதன் ஒளி பிற நாடுகளிலும் பரவும்படி செய்கிறார்கள்.

கிரீஸ் தேசத்தில் ஏதென்ஸ் நகரமும், இத்தாலிய தேசத்தில் ரோமாபுரியும், கலைவாணி வாழும் இடங்களாக முற்காலத்திலிருந்தன. இப்போது பிரான்சில் பாரீஸ் நகரம் கலைக்கு உறைவிடமா

யிலங்குகிறது. காசி முற்காலத்தும், தற்காலத்தும் சமஸ்கிருத கலைக்கு உறைவிடம். ஆனால் சமஸ்கிருதம் மாத்திரம் படிப்பதினால் தற்கால இந்தியக் கலை யாவற்றையும் கற்றுவிட்டதாகாது. ஐரோப்பியக் கல்வி நெருப்புப் பெட்டியைப்போல சிறிது உபயோகமாயிருக்குமே யல்லாமல், காலை வெளிச்சத்தைப்போல அழகு ததும்பியதாகவும், உபயோகமுள்ளதாகவும், ஆச்சரியம் நிறைந்ததாகவும் இருக்க முடியாது.

ஒரு கலை அந்நிய நாட்டில் உதித்த காரணத்தால், அதன்மேல் எனக்கு அருவருப்புக் கிடையாது. அந்நிய நாட்டுக் கலை நம்மை வந்து மோதுவதினாலேயே நம் புத்தி வலுவடைகிறதென நான் கருதுகிறேன். ஐரோப்பிய பண்டைக் கலைக்கும் மேனாட்டினரின் சுபாவத்திற்கும் கிறிஸ்தவக் கலை முற்றும் முறணானதென்பது யாவரும் அறிந்த விஷயம். இவ்விதம் ஐரோப்பாவில் வித்தியாசமான இரு கலைகள் மோதிக்கொண்டிருப்பதினால்தான் மேனாடு நாகரீகத்தில் முன்னேறி வருகிறது. கீழ் நாட்டுக் கலையையொட்டிய கிறிஸ்தவ கலையே மேனாட்டுத் தாய் பாஷைகளைத் தட்டியெழுப்பிப் புத்துயிர் அளித்தது. இந்தியாவிலும் அவ்வாறே நடந்துகொண்டிருக்கிறது. ஐரோப்பிய கலை தன் முழு சக்தியுடன் நம்மை வந்து மோதிக்கொண்டிருக்கிறது.

தற்கால விஞ்ஞான சாஸ்திரம் ஐரோப்பா உலகிற்கு அளித்திருக்கும் பெரும் நன்கொடை நாம் உபயோகமற்றவர்களாய் போகாதிருக்க வேண்டுமானால், விஞ்ஞான சாஸ்திரத்தை அவளிடமிருந்து நன்றியறிதலுடன் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்குத் தாமதித்தால் தற்காலத்தில் அடைய வேண்டிய பயனை அடையத் தவறிவிடுவோம்.

•

நம் தேச மக்களின் முழுக் கவனத்தையும் கவர்ந்திருக்கும் அந்நிய நாட்டுக் கல்வியின் செயற்கை முறையையே நான் எதிர்க்கிறேன். இதனால் உண்மைகளைப் பிணித்து புதிய நினைப்புகளை உண்டாக்கும் சந்தர்ப்பத்தை யிழக்க வேண்டியிருக்கிறது. இதற்காகவே சுதேசக் கலைகளைப் புறக்கணிக்கக் கூடாதென நான் வற்புறுத்துகிறேன். நம் கல்வியைப் போற்று வளர்த்தால்தான் அயல் நாட்டுக் கலைகளில் வேண்டுவன ஏற்று வேண்டாதவற்றை விட்டுவிட சக்தி பெறுவோம். மேலும் அஃது பாரமாயில்லாமல் உணவாயிருக்கும். அதன் புறத்தே நின்று புஸ்தகக் கல்வி மாத்திரம் பெறாமல் அதில் தேர்ச்சி யடைவோம்.

இந்தியக் கலையாகிய நதிக்கு வேதம், புராணம், புத்தகக் கலை, சைன கலை ஆகிய நான்கு கலை நதிகள் வந்து சேருகின்றன. இஃது இந்திய மக்களின் ஆழ்ந்த அறிவினின்று உற்பத்தியா யிருக்கிறது. ஆனால் ஆற்றில் பல உபநதிகள் வந்து சேருவதுண்டு. திபேத்தில் உற்பத்தியாகும் பிரமபுத்திரா இந்தியாவில் உற்பத்தியாகும் கங்கைக்கு உபநதி. இந்தியக் கலையும் வேறு கலைகளைப் பெற்று பெருகி யிருக்கிறது. மகமதியர் இந்தியாவிற்கு வந்தபோது தங்கள் கலைகளையும், மத சமத்துவத்தையும் கூடக் கொண்டுவந்து இந்தியக் கலைக்கு ஆக்கம் அளித்தனர். சங்கீதம், சிற்ப சாஸ்திரம், சித்திரம் ஆகிய நம் கலை வளர்ச்சிக்கு மகமதியரும் மேலான சேவை செய்திருக்கிறார்கள். நடுக்கால மகான்களின் ஜீவியச் சரிதங்களையும், அவர்களின் நூல்களையும், அக் காலத்தி லெழுந்த மத இயக்கங்களையும் படித்தவர்களுக்குத்தான் மகமதிய அரசாக்ஷிக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோ மென்பது தெரியும்.

எனவே எமது இந்திய சர்வகலாசாலையில் வேதம், புராணம், புத்தகக் கலை, சைன கலை, இஸ்லாமிய கலை, சீக்கியக் கலை, ஜொராஷ்ரக் கலை ஆகிய யாவற்றையும் கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். சைனா, ஜப்பான், திபத் ஆகிய தேசங்களின் கலைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் முற் காலத்தில் பரத கண்டம் மற்ற தேசங்களோடு தொடர்பின்றி யிருக்கவில்லை. ஆசியாக் கண்டத்தி லுள்ள பிரதேசங்களோடு எவ்விதம் இந்தியா சம்பந்தம் வைத்திருந்தது என்பதை அறிய வேண்டுமானால் மேற் கூறிய கலைகள் யாவையும் படித்தாக வேண்டும். அத்துடன் சாந்தனிகேதத்தில் மேனாட்டின் மேலான கலைகளும் கற்பிக்கப்படுகின்றன.

நவீன நாகரீகமுடைய நம்மில் சிலர் பண்டைக் காலத்திலிருந்தே நமக்குச் சுய கலையின்றி கடன் வாங்கியே வந்திருக்கிறோமென நம்புகின்றனர். அவர்கள் கூற்று முன்னேக்கிச் செல்லும் படைக்குப் பின்னாலிருந்து உணவு கொடுக்கக் கூடுமென்பதை ஒப்புக்கொள்ள மறுப்பதாகும். திடீரென மனிதன் பண்டைக் காலக் களஞ்சியத்திலிருந்து சிந்தனை விதைகளை பெற்ற வுடனேயே, உலகம் முற் காலங்களில் புத்துயிரும் புது வாழ்வும் பெற்றனவென்னும சரித்திர வுண்மையை அப்படிப்பட்டவர்களுக்கு ஞாபகப்படுத்துவது அவசியம்.

பண்டை காலப் பயனை யிழந்த துரதிஷ்ட மக்கள் தற்காலத்தில் ஒரு பயனையும் அனுபவிக்க முடியாது. அவர்கள் சாகுபடி செய்ய விதையின்றி உணவுக்கும் பிச்சை யெடுக்க வேண்டும். மூதாதையர் நமக்கு ஒன்றும் விட்டுச் செல்லவில்லை எனக் கருத

வேண்டியதில்லை நம் முன்னோரின் பொக்கிஷங்களைத் திறந்து அவைகளி லுள்ளவற்றை நம் வாழ்விற்குப் பயன் படுத்த வேண்டிய காலம் வந்திருக்கிறது. அதனுதவியால் நம் பிற்கால வாழ்வை சுயமாக அமைப்போமாக! சதா காலமும் பிறருடைய கந்தைகளைப் பொருக்கி உபயோகித்து ஜீவிப்பது இழிவல்லவா?

இதுவரை புத்தி வளர்ச்சி யளிக்கும் கல்வியைப் பற்றியே கூறி வந்திருக்கிறேன். ஏனெனில் மேனாட்டிலுங்கூட அக் கல்வியே பெரிதும் கவனம் பெற்று வருகிறது. தன்னை உள்ளவாறு உணர்விப்பதே தனிப் பெரும் வாழ்வு என்பதை மேனாட்டுச் சர்வகலாசாலைகள் இன்னும் சரியாக அறிந்துகொள்ளவில்லை. வெறும் வார்த்தைகளால் மட்டும் மனிதன் தன்னைப் பற்றி முற்றும் உணர்த்துவது சாத்தியமன்று. அதற்கு கோடுகள், வர்ணங்கள் சப்தங்கள், செய்கைகள் ஆகிய பாஷைகள் அவசியம். இப் பாஷைகளையும் நன்கு உணர்ந்து விட்டால்தான் நம்மைப் பற்றித் தெளிவாக அறிவிக்கவும், பண்டைக் காலத்தில் பல தேசங்களிலும் தங்களுள் இயற்கையை உணர்த்தி முயன்ற மக்களைப் பற்றி அறிந்து கொள்ளவும முடியும். கல்வியின் பயன் விஷயங்களை யறிந்து கொள்ளுவது மாத்திரமன்று; மனிதனைப் பற்றித் தெரிந்துகொள்ளுவதும், பிறருக்கு நம்மை அறிமுகப்படுத்துவதுமே அதன் முக்கிய பிரயோஜனம். கலைகளை மாத்திரம் கற்பதில் திருப்தியடையாது கலையை விளக்க முக்கிய சாதனமாயிருக்கும் நம் இயற்கையை (Personality) பற்றி ஒரு சிறிதாவது தெரிந்துகொள்ள வேண்டும். தன் சிருஷ்டி சக்தியால் ஆக்கப்பட்ட கலை யுலகமே மனிதனின் உண்மையான பரந்த உலகம். நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற கலைகளைப் பற்றி ஒன்றும் தெரியாமல் இருப்பது அவர்கள் விட்டுச் சென்ற பொக்கிஷங்களை உபயோகிக்கத் தெரியாமலிருப்பதாகும். அதைப் புறக்கணிப்பது வாக்கைக் கடந்த விஷயங்களை மனிதனுக்கு அறிவிக்கும் உள்ளொளியை அசட்டை செய்தது போலாகும். விஞ்ஞான சாஸ்திர ஐரோப்பாவும் இலக்கிய ஐரோப்பாவுமே நமக்குத் தெரியும். எனவே தற்கால கலாஞானம் பரிசோதனைச் சாலையிலும், இலக்கணத்திலும் அடங்கி யிருப்பதாகக் கருதுகிறோம். மனிதனின் அழகை விரும்பும் தன்மையைப் புறக்கணித்து அதில் களைகளை முளைக்க விட்டு விடுகிறோம். நமது சமாசாரப் பத்திரிகைகளில் விஷயங்கள் அதிகம்; நமது கூட்டங்களில் சப்தமதிகம். அவைகளில் ஆங்கில ஆசிரியர்களிடமிருந்து பெற்ற விஷயங்களைப் பற்றி பன்னிப் பன்னி எழுதுகிறோம்; பேசுகிறோம். நமது வருத்தங்களைப் பற்றி கூக்குரலிட்டு கண்ணீர் வடித்து நம்மைச் சுற்றி

யுள்ள ஆகாயத்தை நீராவியால் நிரப்புகிறோம். ஆனால் வசந்த காலப் புஷ்பங்களைப் போல நமது ஆன்மாவிலிருந்து உதித்த நமது அழகிய கலைகள் எங்கே?

தற்காலக் கல்வியின் இக் குறைவால் நாம் படித்தும் ஊமைகளாக இழி நிலையிலிருக்கிறோம். கலைவாணியின் விழாவில் கலந்து பல வர்ணக் காக்ஷிகளைக் கண்டும், பாடல்களைக் கேட்டும், இன்புறாது வெளிப்புறத்தில் ஜாதிப் பிரஷ்டர்களாயிருந்து வருகிறோம். கடின வேலையுடன் ஜெயிலக் கல்வி பெற்று வருகிறோம். ஆனந்த வாழ்க்கையிலிருந்து சக்தி பிறக்கிறதென்பதையும், அதிலிருந்து சித்திரம், சிற்பம், வாக்கு வன்மை முதலிய உதிக்கின்றன வென்பதையும் மறந்து விட்டோம். ஒரு மர வியாபாரி மரங்களுக்கு புஷ்பங்கள், இலைகள் முதலியன அவசியமில்லை யென நினைக்கலாம், அவ்விதம் நினைத்து அவன் அவைகளை நீக்கி விடின் அம் மரங்கள் பட்டுப் போய் நஷ்டமடைவான்.

முகலாய காலத்தில் சங்கீதமும், இதர கலைகளும் அரசர்களிடம் ஆதரவு பெற்று வளர்ந்தன. ஏனெனில் அவர்கள் இங்கு உத்தியோகத்தை மாத்திரம் கருதி வசிக்கவில்லை. கலைகள் பூரண வாழ்வினின்றே உதிக்கக் கூடியவை. ஆனால் நமது ஆங்கில உபாத்தியாயர்களோ பறவைகள் போன்று வந்து போகக்கூடியவர்கள். அவர்கள் பாடி நம்மை மகிழ்விக்காமல் ஏதோ சத்தம் போடுகிறார்கள். அந்நிய தேசவாசிகளான அவர்களின் மனம் நம் நாட்டிலில்லை.

கலைகளைச் சுருக்கி வாழ்வைப் பாதிக்கும்படி விடக்கூடாது. நான் ஸ்தாபித்திருக்கும் இந்தியச் சர்வகலாசாலையில் சங்கீதமும் இதர கலைகளும் பெயரளவில் மாத்திரமன்றி கௌரவ இடங்கள் பெற்றிருக்கின்றன. பல்வித சங்கீதக் கலைகளும் பல காலத்திலும், மாகாணங்களிலும், பலதிற சமூகங்களிலும் சிதறிக் கிடக்கும் இந்தியக் கலைகளும் பிற நாட்டுக் கலைகளும் கொஞ்சங் கொஞ்சமாகச் சேகரிக்கப்பட்டு கற்பிக்கப்படுகின்றன.

கல்வியானது ஜனசமூக வாழ்க்கையோடிசைந்ததாயிருக்க வேண்டுமென முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். பொருளாதாரமே சமூக வாழ்விற்கு அடிப்படையானது: ஏனெனில் பொருளாதாரத் தேவைகள் சுலபமாய் நிறைவேற்றத் கூடியனவாகவும், இன்றியமையாதனவாகவும் இருக்கின்றன. உண்மையை உள்ளபடி போதிக்க வேண்டுமானால் கல்வி நிலயங்கள் பொருளாதார வாழ்வோடு நெருங்கிய சம்பந்தமுடையனவாயிருக்க வேண்டும். அறிவின் ஒற்றுமையையும் நம் ஆத்மீக சமூக முயற்சிகளின் ஒற்று

மையையும் உணரச் செய்வது கல்வியின் மேலான நோக்கம். சமூக வாழ்வின் ஆரம்ப காலத்தில் எல்லோருக்கும் வாழ உரிமை யுண்டென்பதை உணர்ந்திருந்ததினால்தான், மக்கள் பொருளாதார ஒத்துழைப்பு யிருந்திராவிடில் உலகம் நாகரீகத்தில் முன்னேறி யிருக்க முடியாது. மக்களிடை ஒத்துழைப்பு யிருக்க வேண்டிய அவசியத்தையும், சகலருடைய பொருளாதார தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அவசியத்தையும் மறுபடியும் உணர்ந்தாலன்றி தற்கால நாகரீகம் சிதறுண்டு போகும். எமது சர்வகலாசாலை இதைக் கருத்திலிருத்தி பொருளாதார ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. போதிப்பதன்றி செயலில் காட்டுவதும் நினைப்பதன்றி சிருஷ்டிப்பதும் சர்வகலாசாலையின் வேலையெனக் காட்டுவதே எங்கள் இடைவிடா முயற்சி.

தபோவனங்கள் என்னும் வனப் பள்ளிகளே இந்தியாவுக்குரிய சர்வகலாசாலைகள். அவைகள் மக்கள் வாழ்வினின்றும் பிரிந்து நிற்கவில்லை. ஆசிரியர்களும், பையன்களும், பழங்கள், விறகுகள் முதலியன சேகரித்தும், மாடுகள் மேய்த்தும், தங்கள் உழைப்பால் ஜீவித்து வந்தனர். ஆசிரியர்கள் செய்த ஆத்மீகப் போதனை அவர்கள் நடத்திய ஆத்மீக வாழ்வினின்றே எழுந்தது. எமது கலாநிலையம் அறிவு விருத்தியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் ஒருங்கே கவனிக்கும் நோக்கத்தை யுடைத்து. எமது சர்வகலாசாலையைச் சுற்றியுள்ள கிராமங்களோடு ஒத்துழைத்தும், பயிர் தொழில் புரிந்தும், கால்நடைகள் வளர்த்தும், துணி நெய்தும், எண்ணை வித்துக்களினின்றும் எண்ணை எடுத்தும் வருகிறது. விஞ்ஞான சாஸ்திரத்தின் உதவி கொண்டு நல்ல சாமான்களை உபயோகித்து, உயர்ந்த வழிகளைக் கையாண்டு வாழ்விற் கவசியமான பொருள்கள் யாவும் கொஞ்சங் கொஞ்சமாக அங்கு செய்யப்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள், மாணவர்கள், கிராமவாசிகள் ஆகியோரின் ஒத்துழைப்பால் நடத்தப்படும் வெற்றியில் சர்வகலாசாலையின் உயிர் இருக்கிறது. இவ்விதம் மாணவர்களுக்கு பேராசையை அடிப்படையாகக் கொள்ளாத தொழிற் கல்வி யளிக்கப்படுகிறது.

இந்த விஷயத்தை முடிக்கு முன் ஒரு முக்கியமான கேள்விக்குப் பதிலளிக்க வேண்டி யிருக்கிறது. நமது இந்தியக் கலாநிலயத்தின் மத லக்ஷியமென்ன? முக்தியே இந்தியாவின் மத லக்ஷியமாகும். ஜீவாத்மாவை உலக பந்தங்களினின்றும் விடுவித்து ஆனந்தமயமான பரமாத்மாவோடு உறவாடுவதே முக்தி. இந்த ஆத்மீக மதம் தினசரி அரை மணி நேரம் பாடமாக வைத்து கற்பிக்கும் தத்துவம் அன்று. நமது சூழ்வின் சம்பந்தத்திலும், கடவுள் உணர்ச்சியிலும், வாழ்வில் சில சந்தர்ப்பங்களில் ஆண்டவன் சக்தியை உணர்தலிலும், அவ்வாத்மீக வுண்மை பிரதிபலித்தல் வேண்

டும். அவ்வித மத லக்ஷியத்தை மாணவர்கள் அடைய வேண்டுமானால் இயற்கையோடியைந்து வாழவும், வாழ்வின் ரகசியத்தை உணர்ந்து சராசர வஸ்துக்களுக்கு ஊழியஞ் செய்யும் மனோபாவத்தை வளர்க்கவும் கூடிய சந்தர்ப்பங்களை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

இத்துடன் எமது சர்வகலாசாலை அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள், தொழிலாளிகள் ஆகியோரின் தொழில்களைக் கற்றும், அவர்களை விருந்துக்கு அழைத்தும், பொது வாழ்வின் க்ஷேமத்திற்கு ஒத்துழைக்கத் தூண்டியும் வருகிறது. நாங்கள் இவ்வாறு செய்வது ஒழுக்க நீதிகளால் தூண்டப்பட்டாவது உயர்ந்தோர் தாழ்ந்தோருக்குக் காட்டும் மனோபாவத்தினாலாவது அன்று. ஆனால் மனிதன் மனிதன் மேல் காட்டும் அனுதாபத்தாலும் சுயநலமற்ற அன்பாலுமே யாகும். இப்படிப்பட்ட இடத்தில் மனித சமூகமானது அழகிய சங்கீதம் கொடுக்கும் அநேக நரம்புகளுள்ள வீணை என மாணவர்கள் கற்க ஏதுவுண்டு. இந்த ஒற்றுமையை உணருகிறவர்கள் பிற்காலத்தில் மானிடர் யாவரும் ஒரே சமூகமாக வாழ்வதின் பொருட்டு வரும் அழைப்பிற்கிணங்கி கஷ்டத்தின் இருளில்—தியாக பாதையில் புண்ணிய யாத்திரை செய்யத் தைரியமடையவர்களாவர்

இப்படிப்பட்ட இடத்தில் வாழ்வு ஆடம்பரமற்றதாகவும் பரிசுத்தமானதாகவும் ஆகிவிடுகிறது. எளிய வாழ்வு தற்காலத்திற்கு பொருத்தமற்றதெனக் கூற முடியாது. அநேக நரம்புகளையுடைய சங்கீதக் கருவியை இயக்குவதற்கு அதை மீட்டும் கருவி எளிதானதா யிருப்பது அவசியம். நமது பிற்கால சிக்கலான வாழ்விற்கு உறுதுணையாக யிருக்க வேண்டின் நமது பால்யப் பருவத்தில் பரிசுத்தமான—பூரணமான ஆத்மீக லக்ஷியம் கற்பிக்கப்படல் வேண்டும்.

வேறு விதமாகக் கூற வேண்டுமானால் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒத்துழைத்து சதா ஆக்கல் வேலை நடத்தி அவர்களின் ஆன்மா வளர்ச்சி யடைய கல்விச்சாலையும் வளர்ந்து, தங்களைத் தானே போஷித்து சுதந்திரத்துடனிருந்து புது வாழ்வின் ஒளி வெகு தூரத்திற்கும் வெகு காலத்திற்கும் வீசி, அநேக கிரஹங்களையுடைய ஒரு சூரிய மண்டலமாகத் திகழவேண்டு மென்பதே எங்கள் லக்ஷியம். புத்தி விருத்தியும் பொருளாதார முன்னேற்றமும் அடைந்து சமூகக் கடமைகளை நிறைவேற்றி, ஆத்மீக விடுதலையடைந்து, பூரணத் தன்மையை யடைய ஆசிக்கும் மனிதனுக்குப் புத்துயிர் அழிப்பதே இக் கிழக்கித்திய சர்வகலாசாலையின் நோக்கம்.

அனுசூயா.

ஓர் சிறு கதை.

"ஆனந்தா"

மாலைப் பொழுது. 'மனோகர விலாஸ்' என்னும் அழகிய வீடு மனோகரமாகவே விளங்குகிறது. அதன் தாழ்வாரத்தில் ஓர் பாலகன்—தாய் தந்தையரால் நன்கு வளர்க்கப்பட்ட ஓர் அரும்பு, தன் தாத்தாவின் பெரிய சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம், பெரிய கவிஞர் ஆழ்ந்து சிந்திப்பதைப் போல் எதிரே யிருக்கும் வெட்ட வெளியை நோக்கிக்கொண் டிருக்கிறான். இளங் காற்று அவனுடைய பட்டுப் போன்ற சிகையையும், தாய் கர்வத்தோடு அணிவித்திருக்கும் அங்கியையும் அசைந்தாடும்படிச் செய்கிறது. அவன் முகத்தில் சிறிது புன்சிரிப்பு தோன்றும்; புதிதாக அரும்பியுள்ள முத்துப் போன்ற இளம் பற்கள் காட்சி யளிக்கும்; உள்ளே மெல்லிய உதடுகள் அவைகளை மறைத்து விடும். திடீரென அமைதியின்மை தோன்றும். எதையோ பிடிக்க முயலுவதைப் போல் கையையும் காலையும் ஆட்டுவான். அதில் தோல்வியடைந்து விடுவானோ என்னவோ உதட்டைப் பிதுக்கி, முகத்தைச் சுளித்து அழத் தொடங்குவான். இப்படியாகக் கொஞ்ச நேரம் கழிந்தது.

குழந்தைகளைச் சிரிக்கச் செய்வதெது? திடீரென அழச் செய்வதெது? யார் கண்டார்கள்? அவைகள் மர்மம் நிறைந்த ஜீவன்களாகவே இருக்கின்றன.

இக் குழந்தையைத் தனியே கிடத்திச் சென்றவள் யார்? இதோ வந்துவிட்டாள்! அவசர அவசரமாய் ஓர் இள மங்கை வந்து தோழ் மீதிருந்து நெகிழும் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு "என் கண்ணு! என் கண்ணு!! உன்னை ரொம்ப நேரம் கிடத்தி விட்டேனோ?" என்று அன்பொழுகக் கூறி, வாரி எடுத்து, முகத்தில் முத்திரை யிடுவதைப் போல் முத்தத்துக்கு மேல் முத்தம் இட்டான்.

எத்தனை முத்தங்களைத்தான் பொறுப்பது? குழந்தை அழத் தொடங்கியது. "இல்லை! இல்லை! என் கண்ணு இல்லை!" என்று மார்போடணைத்துக் கொஞ்சிக் கொண்டு உட் சென்றாள்.

இவை யாவையும் ஒரு ஜீவன் பார்த்துக் கொண்டே இருந்தது. அந்த ஜீவன் ஒரு இளம் விதவை—பெயர் அனுசூயா—நன்கு மலர்ந்த ஓர் புஷ்பம். கணவன் இறந்த ஞாபகம் அனுசூயாவுக்குக் கொஞ்சங் கொஞ்சம் உண்டு. ஆனால் அந்த மரணத்தை உணரத் தக்க பருவத்தில் அவள் அப்போது இல்லை. அனுசூயாவின் அண்ணனாகிய மாணிக்கவேலுவின் சீர்திருத்த வேட்கையாலேயே அவள் தலையில் கூந்தல் விட்டுவைக்கப்பட் டிருந்தது.

சாய்வு நாற்காலியில் கிடத்தப்பட்டிருந்தது மாணிக்கவேலுவின் குழந்தையே. அதை எடுத்துச் சென்றவள் அக் குழந்தையின் தாயே.

அனுசூயா இயற்கை வனப்பு வாய்ந்தவளா யிருந்தும் அவள் அழகு குன்றி காணப்பட்டது. கதவில் சாய்ந்தவண்ணம் நின்று கொண்டிருந்த அனுசூயா அக் குழந்தையை அதன் தாய் முத்தமிடும் போது ஏன் அப்படி பெருமூச்செறிந்தாள்? அவள் உள்ளத்தை யார் அறிய முடியும்? ஓசையின்றி ஓடும் நீர் ஆழமானதா யிருக்கும்.

சிறு பிள்ளையைப்போல் முன்தானையைப் பற்களில் வைத்துக் கடித்துக்கொண்டு அனுசூயா தன்னுடைய அறைக்குட் சென்றாள். கதவைத் தாளிட்டுவிட்டு படுக்கையில் உட்காரப் போனாள். யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. திரும்பி கதவண்டை வந்தாள். என்ன நினைத்தாளோ? என்னவோ, கதவைத் திறக்காமலே உலகத்தையே வெறுக்கும் பார்வையோடு படுக்கைக்குத் திரும்பினாள். 'தொப்' என குப்புற விழுந்தாள். முகத்தைத் தலையணையில் அழுத்திய வண்ணம் கிடந்தாள். அப்படியே வெகு நேரம் கழிந்ததை அவள் உணரவில்லை.

'அனுசூயா' என்ற பலத்த குரல் அவளை திடுக்கிடச்செய்தது. தன்னுடைய அண்ணனின் குரல் என்பதை உணர்ந்தாள். அவசரமாய்க் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

மாணிக்கவேலு அப்போதுதான் ஆபீஸிலிருந்து வந்து காபி அருந்திக்கொண்டிருந்தான். அனுசூயாவைக் கண்டதும் "ஏன் இன்னும் காபி சாப்பிடவில்லை?—முகம் ஒரு மாதிரியாய் இருக்கிறதே!" என்றான்.

"ஒன்றுமில்லை அண்ணா! கொஞ்சம் தலை வலியெடுத்தது அவ்வளவுதான்" என்றாள் அனுசூயா.

'மருந்து பூசுகிறதுதானே!' என்றான் மாணிக்கவேலு.

'இல்லை! இப்போது இல்லை! அனேகமாய் நின்றுவிட்டது' என்றாள் அனுசூயா.

அனுசூயா காபி அருந்திய பின் மாணிக்கவேலுவின் வாழ்க்கைத் துணைவி ரஞ்சிதம், கை நிறைய கம கமவென மணக்கும் மல்லிகைப் பூவைக் கொண்டு வந்து அனுசூயாவைச் சூட்டிவிடச் சொன்னாள்.

அப்படியே அனுசூயா, ரஞ்சிதத்தின் கூந்தலை தன் கையால் அழகுபடச் செய்த பின் இரண்டு மலர்களை எடுத்து முகர்ந்தாள். அவள் வதனம் மலர்ந்தது.

ரஞ்சிதம், அனுசூயாவை நோக்கி 'இன்று தங்களுக்கும் நான் சூட்டிவிடப் போகிறேன்' என்றாள்.

அனுசூயா:—ஆ! எனக்கா? ஒருபோதும் இல்லை. முண்டைக்குப் பூவா? ஒருபோதும் இல்லை. நான் தரிக்க என்ன உரிமையிருக்கிறது? எனக்கு எதற்கு?

ரஞ்சிதம்:—ஏன் தரித்தால் என்ன? நான் தரித்துவிடத்தான் போகிறேன். மாமி என்ன செய்துவிட முடியும்?

அனுசூயா:—ஏதாவது யாராவது செய்து விடுவதற்காகவல்ல. நான் தரித்துத்தான் யாருக்குக் காட்டப் போகிறேன்?.............. என்றதும் பெருமூச்செறிந்தாள்.

அனுசூயா எவ்வளவோ மறுத்தும் ரஞ்சிதம் கொஞ்சம் பூக்களை விடாப்பிடியாய் சூட்டியே விட்டாள்.

'கமகம'வென மணக்கும் பூக்களைக் கண்டு மகிழாத மனமும் உண்டோ?

சிறிது நேரத்தில் அனுசூயாவின் தாய் அங்கு தோன்றினாள். கூந்தலில் உள்ள மல்லிகையைக் கண்டதும்.

"இது யாரம்மா சூட்டியது? வேண்டாம் அம்மா! வேண்டாம்! உன் தலையில் கூந்தலை விட்டு வைத்ததற்காக நான் அடைந்த மானக் கேடு போதும். கொஞ்சமா அதனால் என் கௌரவம் சீரழிந்தது? கண்டவள் எல்லாம் என்னைப் பிய்த்துப் போட்டாளே! அதற்கு மேல் பூ சூடிக்கொண்டால் என்ன சொல்லுவார்கள், வேண்டாம் அனுசூயா!" என்று சொல்லிக்கொண்டே கூந்தலிலிருந்த பூக்களை அவிழ்த்தெடுத்தாள். அனுசூயா, தலை கவிழ்ந்தவண்ணம் கட்டை விரலால் தரையைச் சுரண்டிக்கொண்டு நின்றாள். பூக்களை எடுத்

தான பின் கிழவியின் கை அனுசூயாவின் சிரசைத் தடவிக் கொடுத்தது. அனுசூயா தலை நிமிர்ந்து பார்த்தாள். தன் தாயின் கண்களில் நீர் ததும்பி யிருப்பதைக் கண்டாள்.

"அனுசூயா! என்ன செய்வேன்? ஒரே ஒரு பெண்ணைப் பெற்றும் சந்தோஷமாய் வாழுவதைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே!" என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள் கிழவி.

இச் சமயம் மாணிக்கவேலு அங்கே தோன்றினான். கடுகடுத்த முகத்துடன் "கொடு அந்தப் பூவை அனுசூயா கையில்!" என்று அழுத்தமாகத் தாயை நோக்கிக் கூறினான்.

தாய்:—மாணிக்கம்! சொல்லுவதைக் கேள்! வேண்டாம்; இது நமக்கு அடுக்காது; இல்லாத பழக்கத்தை உண்டாக்காதே. பாவம்! மகா பாவம்! விதவை பூ சூடிக்கொள்ளக் கூடாது. மொட்டை யடிக்காமல் விட்டுவிடச் சொன்னாய். அப்படியே உன் வம்புக்காகச் செய்தோம். இப்போது புதுப் புதுக் காரியங்களை யெல்லாம் செய்யச் சொல்லுகிறாய். வேண்டாம்; சொல்லுவதைக் கேள். ஊரெல்லாம் வம்பு பேசும்" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

மாணிக்கவேலுவுக்கு வந்த கோபத்தில் கிழவியின் குரல் வளையை நெறுக்கியே இருப்பான். மாத்ரு பக்தி அவன் கோபாக்னியில் நீர்வார்த்தது. அவன் பற்கள் 'நெறு நெறு' வென்றன. கையிலிருந்த கண்ணாடியை 'படீர்' என தரையில் வீசி எறிந்தான். சுக்கு நூறாக அது உடைந்து சிதைந்தது.

"அந்தோ! இந்தப் பழக்கம்! இந்தக் கொடிய பழக்கம்!" என்று கர்ஜித்தான்.

அனுசூயா இருந்த பக்கம் நோக்கினான். அவள் அறையின் கதவு மெல்ல மூடப்படுவதைக் கண்டான். வேகமாக வெளியே புறப்பட்டான்.

* * * * *

"டன் டன் டன்" என இரவு மணி பத்து அடித்தது, அனுசூயா தன் அறையில் ஆடாது அசையாது படுக்கையில் கிடக்கிறாள். அவள் தூங்குகிறாளோ! அதுதான் இல்லை. அவள் கண்கள் திறந்த வண்ணமே இருக்கின்றன. எதையோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கிறாள். என்ன சிந்தனையோ?

இளமைப் பருவத்தின் இரவுகளை யார் அறிய முடியும்?............

அந்த ராஜாராம் மோஹன் ராய்! பாவி! மகா பாவி! ஏன் அவர் உடன்கட்டை ஏறுவதைச் சட்ட மூலம் தடுக்கச் செய்தார்? கொஞ்ச நேரத்தில் இறந்த புருஷனோடு எரிந்து சாம்பலாய்ப் போவது மேல். அது அவ்வளவு கொடியதல்ல. புருஷன் இறந்த பின், மறு விவாஹம் செய்யாமல் ஆயுள் முழுதும் மனம் உள்ளுக்குள்ளேயே புகைந்துகொண்டிருக்கச் செய்வது கொடிது! கொடிது! மகா கொடிது! அதைக் காட்டிலும் கொடிது வேறொன்றுமில்லை. ஆயுள் முழுதும் இப்படி அவஸ்தைப் படுவதைக் காட்டிலும் அரை மணியில் வெந்து சாம்பலாய் விட்டால் தொல்லை தீர்ந்து விடுமன்றோ? பாவம்! அந்த ராஜாராம் மோஹன் ராயும். லார்ட் வில்லியம் பெண்டிங்கும் இப்படி நேருமென்று எதிர் பார்த்திருக்க மாட்டார்கள்.

காலம் நிற்குமா? மணி பதினொன்று அடித்தது, பன்னிரெண்டடித்தது, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கும் அடித்தது, ஐந்தும் வந்தது, அதுவும் கழிந்து ஆறு மணியும் அடித்தாய்விட்டது. பொழுது புலரத் தொடங்கிவிட்டது. கீழ்த் திசையில் வெளிச்சம் தோன்றியது. கோழிகள் கூவின. சிறிது நேரத்தில் கீழ்த் திசையெங்கும் ரோஜாக்கள் பூத்திருப்பதைப் போல் வானம் சிவந்தது.

முதலில் எழுந்திருப்பது அனுசூயாவின் தாயே. அதன்படியே அன்றும் எழுந்தாள். வெளியே வந்தாள். அனுசூயாவின் அறைக் கதவு திறந்து கிடப்பதைக் கண்டாள். திடுக்கிட்டுப் பின்னடைந்தாள். என்ன காரணம்? வழக்கத்துக்கு விரோதமாக இன்னேரத்திலேயே திறந்து கிடப்பதேன்?

உள்ளே போய்ப் பார்த்தாள் அனுசூயாவைக் காணோம். படுக்கையில் பெட்டி யொன்று திறந்தபடியே வைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்த நகைகளும், ஆடைகளும் காணோம். ஓரிரண்டு ஆடைகள் அலங்கோலமாய்க் கிடந்தன. அன்றிரவு அனுசூயா தரித்திருந்த ஆடையும் படுக்கையிலேயே கிடந்தது. இதென்ன மர்மம்? அனுசூயா எங்கே?

கிழவியின் கூச்சலால் வீட்டிலுள்ளோர் அனைவரும் விழித்துக்கொண்டார்கள். ஒவ்வொருவரும் அனுசூயாவைத் தேடினர். ஒவ்வொரு அறையாகத் தேடினர். தோட்டத்தைப் போய்ப் பார்த்தனர்; வெளியே விசாரித்தனர்; துப்புத் துலக்க முடியவே இல்லை அதிகம் கூறுவானேன்? அன்று மாலைவரை தேடியும் அனுசூயாவைக் காணவில்லை.

ஊர் ஊராய் ஆள் அனுப்பியும் ஒரு பயனுமில்லை.

அடுத்த நாள்—அதாவது அனுசூயா மறைந்த இரண்டாம் நாள் தினசரிப் பத்திரிகைகளில் கீழ் காணும் திடுக்கிடச் செய்யும் செய்தி பிரசுரமாயிற்று.

இளம் விதவையின் தற்கொலை.

“அனுசூயா வென்னும் பெயருடைய இளம் விதவை திடீரென முந்திய நாள் இரவு மறைந்து விட்டாள். எங்கெங்கு தேடியும் காணப்படவில்லை. இன்று காலை வீட்டுக்குப் பின் புறமுள்ள பாழுங் கிணற்றில் அவள் பிரேதம் மிதந்துகொண்டிருந்தது. தன்னுடைய விலை யுயர்ந்த ஆடைகளையும், ஆபரணங்களை அவள் தரித்துக்கொண்டிருந்தாள்.

ஆ! இத்தகையோர் முடிவு இப்படித்தான் இருக்குமோ? அந்தோ! இந்தக் கொடிய பழக்கம்!—இந்தக் குரூர மதச் சட்டம்!

வீட்டிலுள்ள ஒவ்வொரு சாமானும், ஒவ்வொரு கதவும், ஒவ்வொரு சுவரும், தோட்டத்திலுள்ள ஒவ்வொரு மரத்து இலையும் ‘அனுசூயா! அனுசூயா!’ என்று அழுது புலம்புவதைப் போல் தென்பட்டன.

* * * * *

மேற்கண்ட சம்பவம் நிகழ்ந்து இன்று இரண்டு வருஷங்கள் கடந்துவிட்டன. அனுசூயா விழுந்து இறந்த கிணறு மூடப்பட்டு அதன் மேல் ஓர் அழகிய சிறு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. அருகில் உயர்ந்து வளர்ந்த வேப்ப மரமொன்று அதற்கு நிழல் தருகிறது. அக் கோயிலின் முகப்பில் ‘பிரிய அனுசூயாவின் ஞாபகார்த்தமாக’’ என்று பொறிக்கப்பட்டிருக்கிறது.

காலை ஆறு மணி. காக்கைகள் ‘கா கா’ வென கரைகின்றன. இளங் காற்று அக் கோயிலின் மீதிருந்து தொங்கும் காய்ந்துபோன பூ மாலைகளை அசைத்தாட்டிக் கொண்டிருக்கிறது.

ஒரு கிழவி தள்ளாடித் தள்ளாடி அதனண்டை வந்தாள். தன்னுடைய கையிலிருந்த புஷ்பங்களை அதன் மீது சொரிந்தாள். தலையை உயர்த்தினாள். கண்களை மூடினாள். கைகளைக் கூப்பிய வண்ணம் அப்படியே வெகு நேரம் நின்றாள்.

மாணிக்கவேலு—அனுசூயாவின் அண்ணன் அங்கே தோன்றினான்.

‘அம்மா!’ என்றான்.

‘யார் மாணிக்கமா?’ என்றாள் கிழவி.

‘ஆம்! நான் தான்! வீணே தினம் இங்கு பூக்களைக் கொண்டு வந்து பாழாக்குகிறாயே ஏன்?

(திடுக்கிட்டு) ‘மாணிக்கம்! ஏன் அப்படிக் கேட்கிறாய்? என் பிரிய அனுசூயாவுக்காக இதைக்கூடச் செய்யக் கூடாதா!’

‘ஆஹா! என்ன அன்பு! உயிரோடிருக்கும்வரை சந்தோஷமடையவில்லை. இரண்டு பூ தரிக்கக்கூடவில்லை. அவள் இறந்த பின் ஏராளமான ரூபாய் செலவு செய்து பூப்பல்லக்கு தயார் செய்தாய், இந்தக் கட்டடத்தை எழுப்பினாய். இப்போது தினம் பூ கொண்டுவந்து சொரிகிறாய். இதனால் என்ன பயன்? பிணத்துக்கு உன்னிடத்தில் மரியாதை இருக்கிறது. உயிருக்கு மதிப்பில்லை. உன்னுடைய மத நம்பிக்கை அப்படியே செய்யச் சொல்லுகிறது என்கிறாய்! ஆ! அந்தமாதிரி ஒரு மதம் சொல்லுமா? அப்படிச் சொல்லுமானால் நமது பகுத்தறிவை உபயோகிக்க வேண்டாமா? அம்மா! உன் அன்பு வீணானது என்பதை இன்னும் அறியவில்லையா?’’

இதைக் கேட்டுச் சகிக்க, மனமுடைந்து கிடக்கும் கிழவியால் எப்படி முடியும்?

‘ஓ’வென சிறு பிள்ளையைப் போல் அழத் தொடங்கினாள்.

மாணிக்கவேலு ஆறுதல் கூறிய பின் இருவரும் வீட்டுக்குப் போனார்கள்.

அனுசூயாவின் தாய் மிகவும் நோய்வாய்ப்பட்டு சமீபத்திலேயே பூரண குணமடைந்தாள். அநேக வைத்தியர்கள் வந்து வந்து பார்த்துக் கைவிட்டனர். கடைசியில் ஒரு டாக்டர் சொஸ்தப்படுத்தினார். அவருக்கு நன்றி பாராட்டுவதற்காகவே மாணிக்கவேலு விருந்து ஒன்று நடத்தத் தீர்மானித்திருந்தான். அன்று தான் விருந்து நாள்.

எல்லாரும் வந்துவிட்டார்கள். பந்துக்களெல்லாம் ஒருவர் விடாது அழைக்கப்பட்டிருந்தார்கள். டாக்டர் மட்டும் இன்னும் வரவில்லை. அவருக்காகவே எல்லாரும் காத்துக்கொண்டிருந்தார்கள். மனைவி மக்களுடன் அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

அந்த டாக்டரைப் பற்றியே பேச்சு நடந்துகொண்டிருந்தது.

ஒருவர்:—இவ்வளவு பாலியத்திலேயே இவர் (டாக்டர்) இவ்வளவு சாமர்த்தியசாலியாய் விளங்குவது அதிசயமாய்த்தான் இருக்கிறது.

மாணிக்கவேலு:—சாமர்த்தியசாலியா? அதைக் காட்டிலும் வேறு நல்ல வார்த்தை அவரைப் பாராட்டுவதற்காகச் சொல்லப்பட வேண்டும். செத்தவரைக்கூட அவர் உயிர்ப்பிக்க முடியும்.

மாணிக்கவேலுவின் தாய்:—குணத்திலும் தங்கமான மனுஷராகவே இருக்கிறார். வைத்தியர்கள் எல்லாரும் 'பணம் பணம்' என்று பிடுங்குவார்கள், இவரோ அப்படியில்லை. இதுவரையும் ஒன்றும் கேட்கவில்லை. நாங்கள் கொடுப்பதை வாங்கிக்கொள்ளுவதாகச் சொல்லிவிட்டார்.

மாணிக்கம்:—ஆம்! அதற்கென்ன சந்தேகம்? இன்று அவரால் ஒரு அற்புதம் நிகழப் போவதாகவே தெரிகிறது.

அதற்குள் 'டக் டக்' என்ற 'பூட்ஸ்' சப்தம் கேட்டது. புன்சிரிப்பு தவழும் முகத்தையுடைய நவநாகரீக இளைஞர் ஒருவர் உள்ளே வந்தார்.

அனைவரும் எழுந்து மிகவும் குதூகலமாக அவரை வரவேற்றார்கள்.

மாணிக்கவேலுவின் தாய்:—நீங்கள் நன்றாக இருக்க வேணும். நீங்கள்தான் என் உயிருக்கு எஜமான்.

டாக்டர்:—ஆ! அப்படிச் சொல்லக் கூடாது. நான் என்ன பிரமாதமான காரியம் செய்துவிட்டேன்? குருவி உட்காரவும் பனம் பழம் விழவும் சரியாயிருந்திருக்கும்.

மா. தா:—தங்கள் வீட்டுக்காரி அம்மா எங்கே? அவரையும் கூட்டிவரச் சொன்னோமே!

டாக்டர்:—இதோ வந்துவிடுவார்கள்.

எல்லாரும் ஆசனங்களில் அமர்ந்தார்கள். வீட்டு வாசலில் 'பூம் பூம்' என்று 'மோட்டார் ஹார்ன்' ஒலித்தது. சொஞ்ச நேரத்தில் நாணிக் கோணி, ஒரு சிறு குழந்தையை அழைத்துக்கொண்டு ஒரு நவ நாகரீகப் பெண் உள்ளே வந்தாள்.

ஆ! ஏன் இப்படி அனைவரும் வந்தவளை அதிசயத்தோடு நோக்குகின்றனர்!

வந்தவள் யார்?

மாணிக்கவேலுவின் தாய் பிசாசு பிடித்தவள் போல் 'அனுசூயா' என்றாள்.

வந்தவள் தலை நிமிர்ந்தது.

'அனுசூயா' என்றாள் மறுபடியும் கிழவி. எல்லாரும் மாந்திரீக சக்தியால் கட்டுண்டவர்கள் போல் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தார்கள்.

வந்தவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் ஓடியது. மாணிக்கவேலு எழுந்தான். 'அம்மா! இது உன் மகளே! உன் மகள் அனுசூயாவே! பிசாசல்ல. உண்மை உருவமே! அனுசூயா இறக்கவில்லை. இறந்ததாகக் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட பிரேதம் என்னுடைய சூழ்ச்சியால் போடப்பட்ட ஓர் அனாதைப் பெண்ணினுடையது. அனுசூயாவை உங்களிடமிருந்து விடுவித்து, கலியாணம் செய்து வைத்துவிடவே நான் அவ்வாறு செய்து அனுசூயாவை இங்கிருந்து அந்த ராத்திரியே வெளியேற்றினேன். அவள் நேரே பம்பாய்க்கு அனுப்பப்பட்டாள். அங்கே இதோ உன்னை சொஸ்தப்படுத்திய டாக்டருக்கு மனைவியானாள். இதோ! அனுசூயா கையிலிருப்பது உன் பேரனே!' என்று சொல்லி முடிப்பதற்குள் தாயும் மகளும் கட்டித் தழுவி அழத் தொடங்கினர். அக்காட்சியை வர்ணிக்க வார்த்தைகளால் முடியாது.

மறு நாள் பத்திரிகையில் கீழ் காணும் செய்தி பிரசுரமாயிருந்தது.

மாண்டவள் மீண்டாள்.

"இரண்டு வருஷங்களுக்கு முன் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட அனுசூயா நேற்று திடீரென ஒரு குழந்தையுடன் தன் தாய், பந்துக்கள் கூடியிருந்த சொந்த வீட்டில் தோன்றினாள். தன் சகோதரனால் அவள் ரகஸியமாக வெளியேற்றப்பட்டு, அவளுடைய ஆடை ஆபரணங்கள் தரிக்கப்பட்டு வேறொரு பிணம் கிணற்றில் போடப்பட்டது. அனுசூயா உடனே பம்பாய்க்கு அனுப்பப்பட்டதாகவும், அங்கே ஒரு நம்பிக்கையுள்ள ஒரு கிழவரால் போஷிக்கப்பட்டு ஒரு டாக்டருக்கு மணம் செய்விக்கப்பட்டதாகவும் தெரிகிறது. டாக்டருக்கும் அவளுக்கும் நடந்த கலியாணம் காதல் மணமென்றே சொல்லப்படுகிறது. அனுசூயாவுக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது. அது சிறு பிராயத்திலேயே அதிகச் சண்டித்தனம் செய்வதாகத் தெரிகிறது. அனுசூயாவென கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட பிணத்தின் முகம் சிறிது மாறுபட்டிருந்ததற்குக் காரணம் இப்போதுதான் விளங்குகிறது.

அனுசூயாவின் சகோதரர், மாணிக்கவேலு மிகவும் பாராட்டப்படுகிறார். அத்தகைய சகோதரர் ஒவ்வொரு விதவைக்கும் வாய்ப்பார்களா?

ஆரம்பக் கல்வி.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்

கல்வி

உலகில் மக்கட் பிறவியே மேலானதாகக் கருதப்படுகிறது. அத்தகைய மக்கள் அடைதற்பால பெரும் புருடார்த்தங்கள் அறம், பொருள், இன்பம், வீடெனும் நான்கென்பர். அந் நால்வகைப் பேறுகளை எளிதில் பெறச் சாதனமாயிருந்து உதவிபுரிவது கல்வியெனுங் கருந்தனமேயாம். கல்வியாலேயே மக்களின் அறிவு வளர்ச்சியுறுகிறது. "தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு" என்ற பொய்யில் புலவரின் பொன்மொழி இதனை வலியுறுத்தும். எனவே மக்கள் அறிவு வளம் பெற்று, இந் நிலவுலகில் இன்பங்களை இனிது ஈட்டிச் சுகமே வாழ்ந்து மேன்மை யெய்த வேண்டுமாயின் கல்வி கற்றல் இன்றியமையாததாகும். மேலுங் கல்வியே மக்களுக்குக் கண்களாகப் பாராட்டப்படுகிறது. கல்வி கற்றோரே மக்களினத்தவராகவும் எண்ணப்படுவர். இக் கருத்துக்களை "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்—கண்ணென்ப வாழு முயிர்க்கு," "விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல்—கற்றாரோ டேனையவர்" என்ற தமிழ் மறை வாசகங்கள் மறைவின்றிக் கூறுகின்றன. ஆகவே, உலகில் ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் மேன்மையை நாடித் தங்கள் ஜன சமூகத்திற்குக் கல்வியை யூட்டுவதற்கு உரிய வகைகளைக் கண்டு உழைத்து வருகின்றனர். இன்று உலகத்தில் செல்வத்திலும், நாகரீகத்திலும், பிற பண்புகளிலும் சிறந்து விளங்கும் நாடுகள் அனைத்துங் கல்விச் செல்வத்தில் மேலோங்கி வாழுதல் கண்கூடாகும். ஆனால், பழம் பெருமை வாய்ந்த நம் மிந்திய நாட்டில் இன்று நூற்றுக்குப் பதின்மர்கூட சீரிய கல்வி பெற்றவரா யில்லையெனின் நமது நிலையை யென்னென்பது! ஆகவே நமது பொதுஜனங்களும், இந்தியத் துரைத்தனத்தாரும் இந் நாட்டிற் கல்வியறிவைப் பரவச் செய்வதற்குப் பேரூக்கங் காட்டவேண்டுவ தவசியம்.

பாடசாலைகள்

முற்காலத்தில் நம் முன்னோர்களில் கல்வி நலம் வாய்ந்த பண்டிதர்கள் பலரும் தனித்தனியே பாடசாலைகளைக் கண்டு மாணவர்களுக்

குக் கல்வி கற்பித்து வந்தனர். அவற்றுள் தலைசிறந்தவை குருகுலாச்சிரமங்களாகும். சாதாரணமானவை திண்ணைப் பள்ளிக்கூடங்களென வழங்கின. பழமையான அம் முறைகள் இன்று மறைந்து போயின. இதுகாலையில் கல்வித் திட்டம் மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று ஆரம்பக் கல்வி யென்றும், மற்றொன்று மத்தியதரக் கல்வியென்றும், பிறிதொன்று உயர்தரக் கல்வியென்றுஞ் சொல்லப்படுகின்றன. எனவே, இக் கல்வியைப் போதிப்பதற்கென நாட்டில் தோன்றியுள்ள பாடசாலைகளும் முத்திறத்தனவாய் விளங்குகின்றன. இவற்றுள் மக்களுக்குச் சிறு வயதில் முதன்முதலாகக் கற்பிக்கப்படுவது ஆரம்பக் கல்வியாம். ஆகவே, மக்கள் பயிலும் கல்வி யனைத்திற்கும் அடிப்படையாக விருப்பது ஆரம்பக் கல்வியேயாகும். ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் அந் நாட்டு மக்கள் கல்வி கற்ற அறிவாளிகளாக யிருத்தல் அவசியம். மக்களனைவரும் குறைந்தபக்ஷம் ஆரம்பக் கல்வியையாவது கற்றிருக்க வேண்டும். ஆரம்பக் கல்வியென்பது ஒன்று முதல் ஐந்து அல்லது எட்டு வகுப்புகளெனவுங் கூறலாம். இவ் வகுப்புகளில் சிறுவர், சிறுமிகள் தாய்மொழியில் எழுதவும், படிக்கவும், கணக்குப் போடவும் கற்றுக்கொள்ளுவதோடு, பூகோளம், சரித்திரம், அரசியல், விஞ்ஞான சாத்திரம் முதலியவற்றில் சிறிது ஆரம்ப அறிவைப் பெறுகின்றனர். கல்வி கற்கும் நமது மக்களில் பெரும்பாலோர் இவ் வாரம்பக் கல்வியோடு நின்றுவிடுகின்றனர். மிக மிகச் சிலரே உயர்தரக் கல்வியையும், கலாசாலைப் படிப்பையுங் காண முற்படுவராவர். இன்று பிரிட்டிஷ் இந்தியாவில் ஆரம்பக் கல்வியைக் கற்போரின் எண்ணிக்கையைக் கவனிக்குமிடத்து நூற்றுக்கு 2·8 பேர் எனவே, சிறுவர்களுள் நூற்றுக்கு 4·5-ம், சிறுமிகளுள் 0·9-ம் எனத் தெரியவருகிறது. இதே சமயத்தில் அந்நிய நாடுகளில் ஆரம்பக் கல்வியைக் கற்பவரின் கணக்கை நாம் கவனிக்க வேண்டும். அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்களில் நூற்றுக்கு 19·8-ம், ஸ்காட்லாந்தில் நூற்றுக்கு 17·3-ம், இங்கிலாந்து, வேல்ஸ் என்ற இரு தேசங்களிலும் நூற்றுக்கு 16·5-ம், ஜெர்மனியில் நூற்றுக்கு 13·9-ம், ஜப்பானில் நூற்றுக்கு 13·0-ம் ஆமென்றால் நமது நாட்டின் தாழ்வான நிலை நன்கு விளங்கலாம். இத்தகைய நிலையில் நமது நாட்டுக்குப் புதிய அரசியல் சீர்திருத்தங்களும் விரைவில் வரப்போகின்றன. அவற்றுள் வாக்காளர்களாகிய பொதுஜனங்கள் தங்கள் வாக்குகளைத் தக்காரைத் தேர்ந்தெடுக்கும் முறையில் உபயோகப்படுத்த வேண்டும். இன்றேல் இப்போது ஸ்தல ஸ்தாபன போர்டுகள் பெரும்பாலானவற்றுள் நடைபெற்று வருவதுபோன்ற ஊழல்கள் மிகுந்து, நாட்டின் அமைதியையும், அரசாங்கத்தையும், ஜனங்களையும் பாதிக்கு மென்பதிற் றடையில்லை. ஆகவே, இச் சமயத்தில்

துரைத்தனத்தாரும், தேசாபிமானிகளும், பொதுமக்களும் பெரிதுங் கவனஞ் செலுத்தி, நாட்டில் கல்வியறிவை யெங்கும் பரவச்செய்ய விரைந்து வேலை செய்யவேண்டும்.

ஆரம்பப் பாடசாலைகள்

தற்போது ஆரம்பக் கல்வியை நாட்டில் பரவச் செய்வதற்காகத் தோன்றியுள்ள ஆரம்பப் பாடசாலைகள் பலவாயினும் அவைகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். ஸ்தல ஸ்தாபன சபைகளால் நடத்தப்படும் பாடசாலைகளும், மத ஸ்தாபனங்களால் (மிஷனரிகள், கோயில்கள், மடங்கள்) நடத்தப்படும் பள்ளிகளும், கிராமப் பஞ்சாயத்துக்களால் காணப்பட்டுள்ள பாடசாலைகளும், தனி நபர்கள் பொறுப்பில் (பிரைவேட் மானேஜ்மெண்டுகள்) நடத்தப்பெறும் பள்ளிக்கூடங்களுமெனக் குறிப்பிடலாம். இவையனைத்தும் வித்தியா இலாகா அதிகாரிகளால் அனுமதிக்கப்பெற்ற பாடத் திட்டங்களைக் கொண்டு சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி கற்பித்து வருகின்றன. இத்தகைய பாடசாலைகளை மேற்பார்வையிட்டு அவற்றிற்கு ஏற்ற உதவிபுரிந்து வருவதற்காக வேண்டிய உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஆரம்பப் பாடசாலைகளுக்கு உதவி புரிந்து, ஆரம்பக் கல்வியை மக்களிடை பரவச் செய்வதற்காகத் துரைத்தனத்தாரும் ஆண்டுதோறும் பணத்தைப் பிரத்தியேகப் படுத்திச் செலவிட்டு வருகின்றனர். அயல்நாடுகளில் அவ்வந் நாட்டுத் துரைத்தனத்தார் தமது வருவாயில் கல்விக்கெனச் செலவிடும் தொகையின் விகிதத்தைவிட இந் நாட்டுத் துரைத்தனத்தார் செலவிடும் விகிதம் மிக மிகக் குறைவே யென்பதை நாம் மறக்க முடியாது. எனினும், செலவிடுந் தொகைக்காயினும் எதிர்பார்த்தபடி தக்க பயன் கிடைப்பதில்லை யென்பதைப் புள்ளி விவரங்களோடு பல அறிவாளிகள் தெள்ளிக் கூறியிருக்கின்றனர். அதற்குக் காரணங்கள் பலவாம். ஆரம்பக் கல்விச் சட்டத்தை அடிக்கடி மாற்றுவதும், ஆரம்பக் கல்வி ஸ்தாபனங்கள் பலவற்றை அதிகப் பணச் செலவுகளுடன் ஏற்படுத்துவதும், ஆரம்பாசிரியர்களுக்குப் போதிய உதவியை யளிக்காமற் போவதும், இதுபோன்ற இன்னுஞ் சில குறைபாடுகளுமே காரணங்களென்னலாம். மேலும் நம் நாட்டிற் பெரும்பாலும் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்ற எண்ணமில்லாதவர்களாயிருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களைக் கட்டாயப்படுத்தினாலன்றி அவர்களுடைய குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பச் செய்ய வியலாது.

சில ஆண்டுகளுக்கு முன்வரையில் ஊர்கள்தோறும் தனி மனிதர்கள் தங்கள் பொறுப்பில் பாடசாலைகளை வைத்து நடத்தி வந்தனர். ஆரம்பத்தில் துரைத்தனத்தார் அத்தகைய பாடசாலைகளுக்குப்

பொருளுதவிபுரிந்து ஆதரிக்க முற்பட்டனர். ஆயினும் நாளடைவில் கட்டிடங்கள், பெஞ்சுகள் முதலிய படாடோபங்கள் மிகுந்த கவர்ன்மெண்ட் அல்லது போர்டு பாடசாலைகளை ஆங்காங்கே ஸ்தாபித்து, அவற்றில் சம்பளம் பெறும் ஆசிரியர்களை நியமித்துக் கல்வி கற்பிக்கச் செய்தனர். இம் முயற்சியால் ஏற்கெனவே தனிப்பட்ட ஆசிரியர்களால் நடத்தப்பட்டு வந்த பாடசாலைகள் பலவும் நாளடைவில் மூடப்படலாயின. நேர்முறையில் கிராமப் பொதுமக்களின் அபிமானத்தைப் பெற்று நடந்துவந்த பாடசாலைகள் மூடப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக போர்டு பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படலாயின. இரண்டு ஆசிரியர்கள் வேலை செய்யும் (பிரைவேட் மானேஜ்மெண்டுக் குட்பட்ட) ஒரு பாடசாலைக்கு ஒரு ஆண்டில் துரைத்தனத்தாரால் கொடுக்கப்பெறும் கிராண்ட் என்னும் உபகாரப் பொருள் எவ்வளவு அதிகப்படினும் 350 ரூபாய்க்கு மேற்படுவதில்லை. ஆனால் அதே இரண்டு ஆசிரியர்களைக் கொண்டு ஒரு போர்டு பாடசாலை நடைபெறுவதற்குக் குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவாகவேண்டும். இப்படியிருக்கையில், சமீபத்தில் துரைத்தனத்தார் செய்துவரும் முயற்சிகள் தனி நபர்கள் நடத்திவரும் சொந்தப் பாடசாலைகளை யொடுக்கிப் போர்டு பாடசாலைகளைப் பெருக்கி வருவதாக விருப்பதைப்பற்றி என்ன கூறுவது? இதுபோழ்து துரைத்தனத்தார் "ஆசிரியர்கள் எந்த வகுப்புவரையிற் படித்திருக்கிறார்கள்? அவர்கள் பெற்றுள்ள யோக்கியதா பத்திரங்களென்ன?" என்பது போன்றவற்றில் அதிகக் கவனஞ் செலுத்தி, அனுபவமும், உற்சாகமும் படைத்த ஆசிரியர்கள் பலரைப் புறக்கணிக்க முயலுகிறார்களன்றி, அவ் வாசிரியர்களிடம் படிக்கும் மாணவர்கள் எம்மட்டும் தேர்ச்சியுறுகிறார்களென்பதைக் கவனிப்பதைக் காணோம். சில வருடங்களுக்கு முன் துரைத்தனத்தார் நடத்தி வந்ததுபோல் "பிரைமரி," "லோயர் செகண்டரி" என்ற பரீக்ஷைகளைத் தனிமையில் நடத்திப் பாடசாலை மாணவர்கள் அவற்றிற்கு ஆஜராகித் தேர்ச்சியுற்று யோக்கியதா பத்திரம் பெறுமாறு ஏற்பாடு செய்தால், ஊக்கமுள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உற்சாகமூட்டியதாகும். இம் முறையில் அதிகப்படியான மாணவர்களைத் தேர்ச்சியடையச் செய்யும் பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்களுக்கு அதற்கேற்ப அதிகப்படியான கிராண்ட் அல்லது உபகாரத் தனத்தைக் கொடுத்து மேன்மேலும் ஊக்கமுண்டாக்கலாம். மேலும் ஆசிரியர் ஒருவர் அல்லது இருவர் வேலை செய்யும் பள்ளிகளில் ஐந்தாவது (பிரைமரி) வகுப்பை நடத்திப் பிள்ளைகளை யோக்கியதா பத்திரங்கள் பெறச் செய்வதற்கு அதிகாரிகள் இடங் கொடுப்பதில்லை. எனவே, அத்தகைய பாடசாலைகளில் நான்கு வகுப்புகளே நடத்தப்பட

வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறது. உற்சாகமுள்ள மாணவர்கள் தாழ்ந்த தரமான ஐந்தாவது (பிரைமரி) வகுப்புத் தேர்ச்சிப் பத்திரத்தையாவது பெறவேண்டுமென்றால் கிராமாந்தரங்களில் ஐந்தாவது வகுப்பு அங்கீகாரமான பள்ளிகளுள்ள கிராமங்களைத் தேடிச் செல்லவேண்டியிருக்கிறது. எத்தனை ஆசிரியர்கள் வேலை செய்தாலென்ன? ஆசிரியர்கள் எந்த கிரேட்டில் பயின்றிருந்தாலென்ன? அவர்களிடம் பயிலும் மாணவர்கள் ஐந்தாவது (பிரைமரி) வகுப்புக்குரிய பாடத் திட்டங்களில் தேர்ச்சியுற்றிருக்கிறார்களா வென்பதைப் பரீட்சித்து யோக்கியதா பத்திரங்கள் வழங்குவதற்கு அதிகாரிகள் ஏன் முயற்சி செய்யலாகாது? நாட்டில் கல்வியைப் பரவச்செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் செய்யும் முயற்சிகள் கல்வியையொடுக்கி, உற்சாகமும், உபயோகமுமுள்ள மக்களை உபயோகமற்றவர்களாக்கி வருவதற்குப் பயன்பட்டு வருவது வருந்தத் தக்கதாகும்.

ஆசிரியர்கள் நிலை

சொந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் நேர் முறையில் கிராமப் பிரஜைகளிடம் சப்பளத்தின் மூலமாகச் சிறிது பொருளுதவியைப் பெறுவதாலும், கிராமத்திய ஜனங்களின் அபிமானமே தமது பாடசாலைகளின் வளர்ச்சியாக விருப்பதாலும் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதில் அக்கரை காட்டி உழைக்க முற்படுகின்றனர். போர்டு பாடசாலைகளின் ஆசிரியர்கள் தங்களுக்கு நேர் முறையில் கிராம ஜனங்களிடத்தில் சம்பந்த மில்லாதபடியாலும், மேலும் அடிக்கடி அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றப்படுவதாலும், பின்னும் ஸ்தல ஸ்தாபன போர்டுகளின் சில குறைபாடுகளாலும் தம் தொழிலில் ஊக்கங்காட்டி வேலை செய்கிறார்களில்லை. மேலும் பொதுவாக ஆரம்பாசிரியர்களுக்கு மேன்மேலும் ஏற்படுத்தப்படும் நிர்ப்பந்தங்கள் பலவாக விருக்கின்றனவன்றி, அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமும், கிராண்டும் மிக மிகக் குறைவாக விருக்கின்றது. அதனால், அநேக ஆசிரியர்கள் ஊக்கங் குன்றி, உற்சாகமிழந்து நிற்கின்றனர். தேசாபிமானமும், கல்வியில் பேரூக்கமுங் கொண்டு உழைக்கும் ஆசிரியர்களுக்குத் தக்கவாறு உற்சாக மூட்டப்பட வேண்டும். அயல் நாடுகளி லிருப்பதுபோன்று ஆசிரியர்களா யிருப்போர் மேன்மேலும் இருப்பிடத்தினின்றே படித்து உயர்தரப் பரீக்ஷைகளுக்கு ஆஜராவதற்கு அவகாச மளிக்கப்படவேண்டும். ஆனால், சமீபத்தில் சென்னை துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள ஜி. ஓ. நெ. 1581 (4—9—33) உள்ள உத்திரவில் எலிமெண்டரி லோயர் கிரேட்டில் போதனா பயிற்சியில் தேர்ந்து சர்ட்டிபிக்கேட்டைப் பூர்த்தி செய்த உபாத்தியாயர்கள் தங்கள் சர்ட்டிபிக்கேட்டை ஹையர் கிரேட்டாக மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு

மாற்றிக்கொள்ளுவதற்குத் தனிமையாக ஹையர் கிரேட் பரீக்ஷைக்கு ஏற்பட்டுள்ள பாடப் புத்தகங்களை வாசித்து வருடா வருடம் மார்ச்சு மாதத்தில் நடைபெறும் ஹையர் கிரேட் போதனா முறைப் பரிக்ஷைக்கு ஆஜராகித் தேர்ச்சிபெற வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்கள். லோயர் கிரேட்டிலும், ஹையர் கிரேட்டிலும் போதனா முறைப் பயிற்சியில் தேர்ந்த உபாத்தியாயர்களுக் கிடையில் அவர்கள் கற்ற பாடங்களில் அதிக பேதங் கிடையாது. லோயர் கிரேட் ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பாடங் கிடையாது. ஹையர் கிரேட் உபாத்தியாயர்களுக்கு ஒரு சிறிது ஆங்கிலப் பாடமுண்டு. மற்றப்படிக்கு போதனா முறைப் பயிற்சியிலோ, தமிழ், கணிதம், பூகோளம், விஞ்ஞான சாஸ்திரம், சித்திரம் முதலிய பாடங்களிலோ அதிக வேற்றுமைகளோ, உயர்வு தாழ்வுகளோ கூறுவதற்கில்லை. அப்படியிருக்கையில் லோயர் கிரேட் போதனா முறையில் தேர்ச்சியடைந்த ஆசிரியர்களை மீண்டும் ஹையர் கிரேட் பரீக்ஷைக்குரிய எல்லாப் பாடப் புத்தகங்களையும் படித்துப் பரீக்ஷைக்கு ஆஜராக வேண்டுமென்பது வீண் சிரமத்திற் கிடமாகும். தேவையானால் ஆங்கிலம் போன்ற இரண்டொரு பாடங்களை மாத்திரம் படித்துப் பரிக்ஷைக்கு ஆஜராகி ஹையர் கிரேட் யோக்கியதா பத்திரம் பெறச் செய்தலே நியாயமானதாகும். மேலும் லோயர் கிரேட் ஆசிரியர்கள் அனைவரையும் ஹையர் கிரேட் பரீக்ஷையில் தேர்ச்சிபெற வேண்டுமென்று கட்டாயப்படுத்துதலுங் கூடாது. எனவே இவற்றைக் கவனித்து அதிகாரிகள் வேண்டிய திருத்தங்கள் செய்தல் நலமென்று கூறுகின்றோம். ஆரம்பாசிரியர்களும் பலர் ஒன்று கூடித் தங்களுக்கு நேருஞ் சாதக பாதகங்களை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும்.

வித்தியா இலாகா அதிகாரிகள் ஆரம்பாசிரியர்களை அலட்சியமாய்க் கருதி இகழாமல் அவர்களிடத்து அன்பு காட்டி மரியாதையுடன் அவர்களுக்கு உற்சாக மூட்டவேண்டும். பாடசாலைகளைப் பார்வையிடுங் காலத்திலும் பள்ளி மாணவர்களுக்கு முன்னிலையில் ஆசிரியர்களின் சிறு தவறுகளை எடுத்துக் காட்டி அவமானப்படுத்தும் சில அதிகாரிகளின் செய்கைகளையும் கண்டிக்கப்பட வேண்டும். ஆரம்பாசிரியர்களா யிருப்போர் போதனா முறைப் பரீக்ஷையில் தேர்ச்சியுற்று விட்டதாலேயே தமது கல்வி சம்பூர்ணமடைந்து விட்டதெனக் கருதி யிருந்துவிடாமல், மேன்மேலும் பல புத்தகங்களைப் படித்துத் தங்கள் கல்வியறிவை வளர்த்து வரவேண்டும். "ஆசிரியர்கள் எப்பொழுதும் ஒரு மாணவராக விருக்கவேண்டும்" என்று ஒரு பெரியார் கூறியிருக்கின்றார். அஃது உண்மையான வாசகமாகும். ஆசிரியர் ஒழுக்க முடையவராகவும், நற் பழக்கங்க ளுடையவராகவும், பொறுமையுடையவ்ராகவும், அன்புடையவராகவும், கல்வியில் ஊக்க

முடையவராகவும் இருத்தல் வேண்டும். ஆசிரியர் தற்கால உலக வர்த்தமானங்களை அறிந்துவர வேண்டுவதோடு, பத்திரிகைகளைப் படிக்கும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். சாரணரியக்கம், புத்தகாலய இயக்கம், ஐக்கிய நாணய இயக்கம் முதலியவற்றிலும் பங்குபெற முயலவேண்டும். உபாத்திமைச் சங்கங்களில் ஊக்கத்துடன் ஆசிரியர்கள் வேலை செய்து அதன் மூலமாய்த் தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ளக் கிளர்ச்சி செய்யவேண்டும்.

பாட புத்தகங்கள்

அநேகமாகத் தற்போது ஆரம்பப் பாடசாலைகளில் உபயோகிக்கப்படும் பாடப் புத்தகங்களைப்பற்றி மிகவுங் கவனஞ் செலுத்த வேண்டும். புற்றீசல்களைப்போல் நாட்டில் புத்தகப் பிரசுர கர்த்தர்கள் வெளிப்பட்டிருக்கின்றனர். அவர்களால் எண்ணற்ற புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. அப் புத்தகங்களும் டெக்ஸ்ட் புக் சங்கத்தாரால் எப்படியோ அங்கீகார முத்திரையைப் பெற்றுக்கொள்ளுகின்றன. ஆனால் அப் புத்தகங்களில் பலவற்றுள் பல பிழைகளும், முரண்பாடுகளும் நிரம்பியிருப்பதை ஆராய்பவர் அறியக்கூடும். வாசகப் பாடங்களாக வெளிவந்துள்ள பலவற்றுள் எழுத்துப் பிழைகளும், வாக்கியப் பிழைகளும், கருத்துப் பிழைகளும், சந்தியிலக்கண முரண்பாடுகளும் காணப்படுகின்றன. வகுப்புகளின் தகுதிக்கேற்ப விஷயங்களும், வார்த்தைகளும், வாக்கியங்களும், சந்திகளும் (புணர்ச்சி) அமைத்தெழுத வேண்டுவது வாசக பாடங்களுக்கு இன்றியமையாததாகும். இதை நன்கு கவனித்தெழுதப்பட்ட புத்தகங்கள் மிக மிகச் சிலவே. மேற்கண்ட பிழைகள் மலிந்த புத்தகங்களுக்குப் பாடப் புத்தகச் சங்கத்தார் எவ்வாறு அங்கீகாரமளித்தனரோ அறிய முடியவில்லை. எனது ஆப்த நேயர்களாகிய டை சங்க அங்கத்தினர் சிலரோடு இவ் விஷயத்தைப் பிரஸ்தாபித்தபோது அவர்கள் கூறிய காரணங்களைக் கேட்டு மிக வருந்தினேன். இத்தகைய புத்தகங்களில் ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு ஆராய்ந்து பகிரங்கமாக அதில் காணுங் குறைகளை வெளியிடுவதற்கு ஆசிரியர்கள் அஞ்சுபவரா யிருக்கின்றனர். அவ்வாறு துணிந்து ஆராய்ந்து எழுதும் ஆசிரியர்களின் கட்டுரைகளை வெளியிடுவதற்குப் பத்திரிகைகளுந் துணிவதில்லை. ஏனென்றால் பணமும், அதிகாரிகளிடத்திற் செல்வாக்கும் படைத்த புத்தகப் பிரசுரகர்த்தர்களின் மனத்தாங்கலுக்குப் பயப்படுவதே காரணமாம். மேலும் ஒரு மாணவன் ஒரு நூலாசிரியரால் முறைப்படி எழுதிய வாசகப் புத்தகங்களைப் படிப்படியாக முதல் வகுப்பிலிருந்து மேல் வகுப்பு வரையில் படித்து வந்தானாயின் வாசக நடையையும், பதங்களின் அமைப்பையும், விஷயங்களின் விவரத்தையும் முறைப்படி கற்றவனாவான். அப்படிக்

கன்றி வருடந்தோறும் வாசகப் புத்தகங்களை மாற்றியமைப்பதால் இன்னும் பல குறைபாடுகள் நேருகின்றன. தற்போது ஸ்தல ஸ்தாபன சங்கத் தலைவர்கள் புத்தக வெளியீட்டுக்காரர் பலரைத் திருப்திபடுத்தும் நோக்கங்கொண்டு, ஆண்டுதோறும் பாடப் புத்தகங்களை மாற்றி யமைப்பதோடமையாது, ஒரே ஆண்டில் முதல் வாசகப் புத்தகத்தை மற்றொரு கம்பெனியினின்றும், இரண்டாவது வாசகப் புத்தகத்தை மற்றொரு கம்பெனியினின்றும், மூன்றாவது வாசகத்தைப் பிறிதொரு கம்பெனியினின்றும், இவ்வாறே பாடப் புத்தகங்கள் பலவற்றையும் பல கம்பெனிகளினின்றும் பொறுக்கியெடுத்து அவற்றையே அவ் வாண்டில் எல்லாப் பாடசாலைகளிலும் படிப்பிக்க வேண்டுமென்று தமது பாடசாலைகள் அனைத்திற்கும் உத்திரவிடுகின்றனர். இதன் கொடுமையை என்னென்று கூறுவது? அடிக்கடி புத்தகங்களை மாற்றுவதால் குழந்தைகளின் பெற்றோர்கள் பணமுடையால் படும் அவஸ்தையும், பாடங்களைப் போதிப்பதில் ஆசிரியர்கள் படும் துன்பமும், பிள்ளைகள் பாடங்களைக் கற்பதில் அடையும் சிரமமும் பிறவும் அதிகாரிகளின் கவனத்திற்கு எட்டுவது கிடையாது. ஸ்தல ஸ்தாபன போர்டுகளின் தலைவர்கள் பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் தக்க ஆசிரியர்களின் ஆலோசனையைப் பெறாமலேயே நடந்துகொள்ளும் எதேச்சாதிகார முறை கண்டிக்கப்படவேண்டும். இத்தகைய குறைகளைப் போக்குவதற்கு வித்தியா இலாகா அதிகாரிகள் துணைபுரியவேண்டும்.

ஆசிரியர்களின் கடமை

சமீபத்தில் கொச்சி சமஸ்தான உபாத்திமார் சங்கத்தில் மைசூர் வித்தியா இலாகா தலைவர் திருவாளர் என். எஸ். சுப்பராவ் அவர்கள் செய்த பிரசங்கத்தில் "ஆரம்பக் கல்வி போதிப்பதன் நோக்கம் வெறுமனே எழுதப் படிக்கக் கற்றுக்கொடுப்பது மாத்திரமல்ல; ஜன சமூகத்திற்கும், கிராமாந்தரங்களின் தேவைகளுக்கும் ஏற்றவாறு கல்வி போதித்து; தேசிய அபிவிருத்திக்கான பல துறைகளிலும் கிராமாந்தர வாசிகள் சிரத்தை எடுக்கும்படி செய்வதும் உபாத்தியாயர்களின் கடமை" என்று வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். அதை ஆசிரியர்கள் நன்கு கவனிக்க வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி கற்று வெளியேறும் சிறுவர் சிறுமிகளுக்கு அதற்கு மேல் அறிவு வளர்ச்சிக்குரிய பல புத்தகங்களைப் படிக்க வசதி கொடுக்க வேண்டும். தற்போது நாட்டில் தேசிய உணர்ச்சி அதி தீவிரமாகப் பரவி வருகிறது. அஃது நன்மையே யாயினும் அவ்வுணர்ச்சியின் வேகத்தால் பகுத்தறிவு மழுங்கிப் போய், பழமையினிடத்து மூட பக்தியும், புதுமையினிடத்து வெறுப்பும் வளர்ந்து வருகின்றன. இதன் விளைவே தேசியக் கல்வி யெனக் கூறப்படுகி

றது. "டப்பி, டமாரம்" என்று எழுத்துக்களைக் கற்பிப்பதும், "பூனை சீறுகிறது, சிங்கம் கர்ஜிக்கிறது" என்று பாடம் படிப்பிப்பதும் தேச பக்தர்கள் என்பவர்கள் சிலரால் எள்ளி நகையாடப்படுகிறது. இதன் உண்மைகளை ஆராய்ந்து பொது மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்ததாகும். தேசியக் கல்வி என்று நாடெங்கும் பேசப்பட்டதன் காரணமாய்த் தற்போது எழுதப்படும் வாசகப் புத்தகங்களில் புராணக் கதைகள் ஏராளமாகப் புகுத்தி எழுதப்பட்டதே பயனைக் காணப்படுகிறது. இயற்கைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட வாசக புத்தகங்களையும், பின்னால் எழுதப்பட்ட புத்தகங்களையும் சற்று ஒப்பிட்டுப் பாருங்கள். ஒரு சிறுவனுக்கு பூமியின் வடிவத்தைப் பற்றியும், அதன் இயல்பைப் பற்றியும் பூகோள சாஸ்திர சம்பந்தமாய் ஒரு பாடத்தைப் போதித்த பின்னர், அடுத்தபடியாக இரணியாக்ஷன் என்ற அசுரன் பூமியைப் பாயாகச் சுற்றிப் பாதாளத்துக்கு எடுத்துச் சென்றானென்ற வாசக பாடத்தைப் படிப்பிக்கையில், அச்சிறுவன் "இரணியாக்ஷன் எதன் மீது நின்று எவ்வாறு (உருண்டையான) பூமியைப் பாயாகச் சுற்றினான்?" என்று தனக்கேற்பட்ட சந்தேகங்களைக் கேட்குமிடத்து ஆசிரியர் என்ன பதிலைக் கூறலாமென்பதைச் சற்று யோசியுங்கள். இரண்டி லொன்றைப் பொய்யென விளம்ப வேண்டும் அல்லது இரண்டும் உண்மை யெனச் சிறுவனை மிரட்டி வாயை யடக்க வேண்டும் அல்லது போனால் தயாநந்த சரஸ்வதி போன்ற பெரியார் இப் புராணக் கதைக்கு எங்கே, எவ்வாறு, பூகோள சாஸ்திரத்திற்குப் பொருத்தமாக தத்துவார்த்தங் கூறி யிருக்கிறாரென்று ஆசிரியர் தேட ஆரம்பிக்க வேண்டும். இத்தனைத் துன்பங்களுக்கும் சிறு வகுப்புகளில் இத்தகைய புராணக் கதைகளைக் கூறாது நிறுத்தி வைத்துப் பிற்காலத்தில் புராணங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு ஏன் விட்டுவைக்கலாகாது? தேசியக் கல்வி யென்பதற்கு முரண்பட பொருள் கொண்டு நடந்து வரும் நம் மக்களின் அறியாமைக்கு இரங்க வேண்டி யிருக்கிறது. ஆரம்பக் கல்வியை நாட்டில் பரப்பும் அரிய கருமத்தை மேற்கொண்டுள்ள ஆசிரியர்களின் முன்னால் மேலே கூறியது போன்ற பல தடைகளும், இன்னல்களும், படுகுழிகளும், முட் புதர்களும் செறிந்து நிற்கின்றன. இவ் விடையூறுகளை யகற்றிக்கொண்டு ஆசிரியர்கள் முன் செல்ல வேண்டி யிருக்கிறது. அப்படிச் செல்லும் ஆசிரியர்களாலேயே ஆரம்பக் கல்வி விரிவடைய வேண்டும். நமது நாட்டின் நிலைக்குக் கட்டாய ஆரம்ப இலவசக் கல்வித் திட்டம் அமுலுக்கு வரும் நாளே ஆரம்பக் கல்வியின் உயர்வுக்கு உரிய திருநாளாகும். சுபம்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்.

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

மதி—வலி.

அருட் செல்வம் பொருட் செல்வமெனச் செல்வம் இரு வகைப்படும். இவற்றுள் பொருட் செல்வம் இவ் வுலக விவகாரங்களுக்கு இன்றியமையாதது. "அருளில்லார்க் கவ்வுலக மில்லை, பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை" என்னும் பொய்யா மொழியே இதற்குச் சான்றாகும். பொருளில்லாதவர்கள் இவ் வுலகத்து இன்பங்களை யனுபவிக்க முடியாதென்பது ஏற்பட்டது. இதனால் பொருட் செல்வத்துப் பெருமையைச் சிலர் பெரிதும் பாராட்டுவர். பொருளுண்டானால் எவரையும் ஏவல் கொள்ளலாம்; எதனையும் இயற்றலாம்; எக் காரியத்தையும் சாதிக்கலாம்; உலகத்தை ஆளலாம் என்று எண்ணுவார் பலர். உண்மையில் இவ்வளவு பெருமை இதற்கு உண்டோவென ஆழ்ந்து நோக்கின் இல்லை என்பது புலப்படும். தக்க சீரியரிடத்து மாத்திரமேயல்லாமல் இழிவுபட்ட பூரியரிடத்தும் பொருட் செல்வம் இருக்கக் காண்கிறோம். இந்தக் காரணத்தால் பொருட் செல்வத்திற்கு ஏற்படும் சிறுமை ஒருவாறிருக்க, இதனாற் சாதிக்கக் கூடிய காரியங்களும் மிக அற்பம். பொருட் செல்வத்தினால் உலகை ஆள்வது பொய். பொருளைக் கவர்தற் பொருட்டு ஜனங்கள் தற்காலம் செல்வவானுக்கு வசப்பட்டாற் போல நடிக்கிறார்களே யல்லாமல், உண்மையில் வசப்பட்டவர்களல்லர்; இச் செல்வவான் ஜனங்களை ஆள்கிறதில்லை.

உயிர்களிடத்து அன்பு கொண்டு, அவைகளைக் காப்பாற்றி, அவ் வாத்தால் மேம்படுதலே அருளால் வருஞ் செல்வம். இவ் வருட் செல்வம் செல்வத்துட் செல்வமென்னும் பெருமையுடைத்து, உயிர்களைக் காப்பாற்றுதலாவது, அவைகளுக்குரிய துன்பங் களைந்து இன்பம் விளைவிப்பதே யாம். இஃது எல்லாராலும் சாதிக்கத்தக்க காரியமன்று. துன்ப மூலங்களை ஆராய்தற்கும், பரிகாரம் தேடுதற்கும் அதிசயமான புத்திக் கூர்மை வேண்டும். உயிர்களிடத்து பேரன்பினாலே ஒருவன் இத் துறையில் உழைப்பான். மதியின்

வலியால் உலக தத்துவத்தை ஆராய்ந்து, இன்ப துன்பங்களுக்கு மூல காரணங்களைத் தேடித் திரிந்து, பிராணி கோடிகளிடத்து அன்பு மிகுந்து அக் காரணங்களைத் தாம் கண்டவாறு எடுத்து உரைப்பதே அருளாளன் செய்யுங் காரியமாம். இந்த மதிவலியே உண்மையில் உலகத்தை யாள்கின்றது; ஜனங்களின் மனத்தை இயக்குகின்றது; அரசியல் முறைகளை விதிக்கின்றது; நியாயா நியாய விவகாரங்களை அமைக்கின்றது; ஜனுசாரங்களை ஒழுங்குபடுத்துகின்றது. இவ்வாறு ஜனங்களின் அபிப்பிராயங்களை மாற்றவும் கொள்கைகளைத் திருத்தி யமைக்கவும் சக்தி வாய்ந்த மதிவலியே, உலகத்தை ஆளுகிறதெனச் சொல்லவும் வேண்டுமோ. எளியவராயினும் மதிவலி மிக்கவரே மாண்புடையவர் என்பதற்குக் காட்டாக ஹெர்பர்ட் ஸ்பென்ஸரைச் சொல்லலாம்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்

இவர் இ. பி 19-ம் நூற்றுண்டில் விளங்கிய தத்துவ ஞானிகளுள் முதன்மையானவர். இவருடைய ஞான விசேஷம் மிக்க இளம் பிராயத்தே விளங்கியது. திருஞானசம்பந்த ஸ்வாமிகள், மெய்கண்ட தேவர் முதலியோர் அதி பாலியத்திலே அற்புதமான புலமையும் புத்திக் கூர்மையும் காட்டினார்கள் என்பதைச் சங்கிக்கும் நவநாகரீகர்கள், பாடசாலையே யறியாத இவருடைய இளமை மதி நுட்பத்தையும், கல்வித் திறமையும், தத்துவ ஞானத்தையும் சிறிதும் சங்கிக்காமல் ஏற்று இவரை ஏத்துகிறார்கள். ஏறக்குறைய ஐம்பது வருட காலம் தத்துவ விசாரணையி லமர்ந்தவராய் இவர் 1903-ம் வருடி டிசம்பர் மாதத்தில் மரண மெய்தினர். அப்போது இவருக்கு வயது 83. விருத்தாப்பியராயினும் இவர் நோயினால் வருந்தவில்லை; மரணத் தருவாயினும் நல்ல ஞாபக சக்தி வாய்ந்திருந்தார்; மதி சிறிதும் மயங்கவில்லை. இவர் இறந்துபோ முன் வேண்டிக்கொண்டபடி இவருடைய உடம்பு (புதைக்கப் பெருமல்) தகனஞ் செய்யப் பெற்றது. இவர் ஆக்கிய நூல்கள் பல; இவருடை பெயர் அறியாத கலைஞர் அரியர்.

இளமைப் பயிற்சி

இவர் 1820, ஏப்ரல் 27உ டெர்பி நகரத்திற் பிறந்தவர். இவருடைய பிதாவுக்கு வாத்திமைத் தொழில். இளம் பிராயத்தில் இவர் பூச்சிகளைப் பிடித்து வைத்து, அவை உருவம் மாறுவதைக் கவனித்து வந்தனர். பதின்மூன்றும் வயது வரையில் இவர் தந்தையினிடம் கற்று வந்து, பின்னர் மூன்று வருடம் சிற்றப்பனிடம் கல்வி பயின்றனர். சிற்றப்பனுகிய பாதிரியினிடம் இளைஞர் கணிதம் நன்கு கற்றனர். பெற்றப்பன் சிற்றப்பன் ஆகிய இருவரிடம் கற்றதைத் தவிர வேறு பாடசாலைகளிலாயினும் கல்லூரிகளிலாயினும் ஸ்பென்ஸர் வாசித்ததில்லை

உத்தியோகம்

பதினுறும் ஆண்டில் இவர் நிலவளவை சம்பந்தமானதொரு விஷயத்தை "சிவில் எஞ்சினீயர்" (Civil Engineer) என்னும் பத்திரிகையில் நிரூபித்தனர். அடுத்த வருடத்தில் "ஸர். சார்ல்ஸ் போக்ஸ்" (Sir Charles Fox) என்பவருடன் இவர் லண்டன் பர்மிங்காம் ரெயிலில் வேலை பார்த்து வந்தனர். அதே அலுவலில் இவருக்கு அதிக ஊதியம் கிடைக்கக்கூடியதா யிருந்தும் 21-ம் பிராயத்தில் இவர் அவ் வேலையை யொழித்து, வீடு நோக்கிச் சென்றனர்.

ஆராய்ச்சி

தம் ஊரில் இவர் கணிதத்தையும், மற்றும் சில்லரைப் படிப்புகளையும் பயின்று வந்தனர். ஒன்றில் மட்டும் தலை கொடுத்து, அதனிலேயே காலத்தைப் போக்குதல் நலமன்றென்று நினைத்து இவர் பல வழிகளிலும் உழைத்து வந்தனர். ஆனால் எந்த விஷயமாக உழைத்தபோதிலும், "கழையாடிக்குக் கண் காசின் மேல்" என்றபடி, உயிர்த் தோற்றங்களைப் பற்றிச் சாத்திர முறையாக ஆராய்ச்சி செய்ததிலே இவர் கண்ணு யிருந்தார். சொரூபங்கள் வரைவதில் இவருக்கு எப்பொழுதும் ஆனந்தம் உண்டு. இவர் புற் பூண்டுகளைச் சேர்த்து வைத்துப் பெருங் காட்சி யொன்று அமைத்தனர். புது மாதிரியாக அச்சு வார்க்கும் கருவி யொன்று கண்டுபிடித்தனர். இரண்டாண்டு இவர் இப்படிக் காலங் கழித்தனர்

வியாசங்கள் வரைதல்

பின்னர், லண்டன்மா நகரத்திற்குச் சென்று இவர் பத்திரிகைகளுக்கு எழுதிப் பொருள் பெற முயன்றனர். போதுமான திரவியம் கிடைக்கவில்லை. இவர் வரைந்து அனுப்பிய விஷயங்களை ஏற்றுப் பதிப்பித்த பத்திரிகைகள் "ஸிவில் எஞ்னீயர்," லோபிஸ்ட்," "பிலோஸிபிகல் மகாஸீன்," "நான்-கன்பார் மிஸ்டு," என்பனவே. இவர் தலை நகருக்கு வருமுன்னர் "ஆட்சி முறை" என்னும் விஷயமாகப் பத்திரிகைகளுக்கு அநேக கடிதங்கள் வரைந்திருக்கின்றனர். அவற்றை ஒருங்கே சேர்த்துப் புத்தகமாகப் பதிப்பித்தனர். கடின

மான கருத்துக்கள் அமைந்த புத்தகமாதலால் அது புத்தகச் சந்தையில் விரைந்து விலையாகவில்லை. 1848-ம் ஆண்டில் இவர் மறுபடி எழுத ஆரம்பித்தனர். "எகானமிஸ்டு" என்ற பத்திரிகைக்கு இவர் தவறாமல் எழுதி வந்ததன்றி மற்றும் அநேக பத்திரிகைகளுக்கு அற்புதமான வியாசங்களை வரைந்து அனுப்பினார். இவற்றைச் சிலர் கவனித்தனர். இவர் பெயர் பிரகாசிக்கத் தொடங்கியது.

தத்துவக் கோட்பாடு

ஏனெனில், அரசு முறையையும், குடி முறையையும் பற்றிய குழப்பம் ஐரோப்பாக் கண்டத்தில் அத் தருணம் உண்டாயிருந்தது. ஆட்சி முறை இன்னதென்று அறிய விரும்பினர் பலர். இவருக்கு ஒரு கருத்து மட்டும் மனத்தில் தடித்தது. அவயங்களுள்ள ஜந்துக்கள் ஒன்றினின்றொன்று உற்பத்தியாயிருத்தல் வேண்டும். திடீரென்று ஒன்று உண்டானதில்லை. உயிரானது படிப்படியாக பலவகைப் பிராணிகளில் தோன்றிக் கடையில் மனித சொரூபம் அடைகின்றது. இக் கருத்து இவருக்கு நாளுக்கு நாள் முதிர்ந்தது. இவருக்கு நாற்பதாம் வயதும் எட்டியது. அப்போது இவர் தம்முடைய தத்துவக் கோட்பாட்டை ஒழுங்குபடுத்தினர். அதன் சுருக்கம் வருமாறு:—

"உலகெலாம் பிரகிருதியும் சலனமும் (Matter and motion) ஓயாமல் மாறி மாறிச் சேர்கின்றன. இப் புதிய சேர்க்கையினாலும் பிரிவினாலும் உண்டானவையே நாம் பார்த்து உணர்ந்து அறியும் பொருள்கள்; பிரகிருதி சேர்தலால் உற்பத்தி. அச் சேர்க்கையாகும் பொழுது சலனம் குறைகின்றது. சலனம் அதிகரித்தல் பொருள்களுடைய அழிவின் குறி ஒன்றோடொன்று சேராதிருந்த வஸ்து இறுகுவதை உற்பத்தியாகும் ஜந்துவின் தேக முழுவதிலும், ஒவ்வொரு பாகத்திலும் காணலாம். வானம், பூமி, மனம், குடி, வழக்கம், சட்டம் ஆகிய இவை யனைத்தும் உண்டான விதம் இதுவே"

அரசியல் முறை

இவருடைய கொள்கையின்படி அரசியலின் உற்பத்தி இவ்விதம் என்பதைச் சிறிது விளக்குவாம். முதலில் மனிதர் தனியர். அஃதாவது, தனித்தனியே வயிறு வளர்த்துக் காலங் கழித்துக் கொண்டிருந்தனர்; ஒருவரையொருவர் வகுத்தார். பிறவற்றால் துன்பம் நேரிடும் பொழுது காட்டுத்தனம் மிகுந்த புராதான மனிதர் ஒன்று சேர்தலால் மிக்க நன்மை யுண்டாகுமென்று கண்டனர். பிறர் மீது படையெடுத்தலிலும் சேர்க்கைப் பலம் மிகுதி என்று

தெரிந்தனர். இப்படி மனிதர் கூட்டங்களாகப் பிரியும் போது ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒவ்வொரு தலைவன் ஏற்பட்டான். திடகாத்திரமும் இயற்கை யறிவின் கூர்மையும் உள்ளவனே தலைவனாயினன்; சத்துரு இருக்கும் வரையில் உடல் வலி சிறக்கும். பின்னர், கூட்டத்து ஒழுங்கு ஏற்படும்போது மதி சிறக்கும். இவ்வண்ணமாக நாகரீக விருத்திக்குத் தக்கபடி மதியுள்ளான் மன்னனாயினன். பின்பு, அரச பரம்பரை ஏற்பட்டது. அறிவு வளர வளர ஒவ்வொருவனும் தன்னைத் தானே ஆளச் சக்தி பெறுவான். அப்பொழுது அரசன் என்பது ஏற்படும்; ஆங்காங்கு சுவாதிகாரம் உண்டாகும்.

நியாய மூலம்

மானிட அனுபவத் தொகையே மதத்திற்கும், சன்மார்க்கத்திற்கும் மூலம். நியாயம் அநியாயம் என்பன உண்டானதும் இவ்விதமே. அனுபவத்தில், உயிர் வாழ்வதற்கு அனுகூலமானது நியாயம், சன்மார்க்கம்; பிரதிகூலமானது அநியாயம், கெட்ட ஒழுக்கம்.

டார்வினது கொள்கை

டார்வின் என்றவர் தம்முடைய கொள்கையை வெளிப்படுத்து முன்னரே ஸ்பென்ஸர் தம் கொள்கையை வரையறுத்து வைத்தனர். அவயவ உயிர் (Organic Life) உண்டானது படிப்படியாக என்று மட்டும் டார்வின் காண்பித்தனர். ஸ்பென்ஸரோ, மனோதத்துவங்களும் மதச் சட்ட திட்டங்களும் உண்டான விதம் அங்ஙனமே என்று விளக்குகிறார்.

அமெரிக்கா யாத்திரை

1882-ம் ஆண்டில் இவர் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களுக்கு யாத்திரைப் போயினர். ஆண்டுள்ள விநோத சாத்திரப் பயிற்சியே இவர் அவண் போகும்படி தூண்டியது. இவர் ஞானியென்று முதலில் கண்டவர் அமெரிக்கரே. அன்னாரே இவருடைய உள நூலையும் (Psychology), ஜன சமூக சாத்திரத்தையும் (Social Statics) பாராட்டினர். இவர் அமெரிக்காவுக்குப் போயிருந்த காலத்தில் இவரைக் கண்டு பேசாத மனிதர் இலர். பள்ளிப் பிள்ளைகள் அங்கங்கே தெருக்களில் கூடி இவரைப் பார்த்தனர். அமெரிக்கருக்கு இவர் சொல்லிய புத்தி வாதம் கவனிக்கத் தக்கது. "விரைவில் செல்கின்றீர், அவகாசம் கொண்மின்."

பொருட் பேறு

இவருடைய புத்தகங்களால் இவருக்கு லாபமில்லை 1850-ம் ஆண்டில் "ஜன சமூக சாஸ்திரம்" என்னும் நூல் வெளியாயிற்று.

750 பிரதிகளை பதிப்பிக்கப்பட்டன. இவை செலவாவதற்குப் பதினான்கு வருடங்கள் சென்றன. 1855-ம் ஆண்டில் "உள நூல் மூலங்கள்" என்னும் நூல் வெளிவந்தது. 750 பிரதிகளை பதிப்பிக்கப்பட்டன. பன்னிரண்டு ஆண்டுகளில் இவை செலவாயின. இவருடைய புத்தகங்களின் முதற் பதிப்புக்களெல்லாம் கையைக் கடித்தன. இருபத்து நான்கு வருடங்கள் சென்ற பின் இவருடைய நூல்களின் வரும்படி அவற்றின் செலவைக் காத்தது. "முயற்சி மெய் வருந்தக் கூலி தரும்" என்ற முதுமொழி இவருக்குப் பொருந்தாமற் போயிற்று. கீர்த்தியே கூலியாகுமாயின், இவருக்குக் கிடைத்த கூலிக்குக் கணக்கில்லை.

நண்பர்கள்

இவருடைய நண்பர்கள் பலர். பிரெஞ்சு வித்துவான்களையும் இந்திய வித்துவான்களையுமே இவர் மதித்தனர். இவர் அடிக்கடி "ஹாபிபிளாங்க்" என்பவரைப் புகழ்ந்தனர். இங்கிலாந்தில் இவருக்கு அத்தியந்த சிநேகராவர். பின் காலத்தில் "ஜார்ஜ் எலியற்று" என்ற பெயரால் விளங்கிய "மேரியான் இவான்ஸ்" என்ற மாதே.

இவரது நூல்கள்

இவர் ஆக்கிய நூல்களாவன:—

1.	Proper Sphere of Government	1842.
2.	Social Statics	1850.
3.	Principles of Psychology	1855.
4.	Essays	1858–1863.
5.	Education	1861.
6.	First Principles	1862.
7.	Principles of Biology	1864.
8.	Study of Sociology	1869.
9.	Spontaneous Generation	1870.
10.	Recent Discussions in Science Philosophy and Morals	1871.
11.	Descriptive Sociology	1873.
12.	Sins of Trade and Commerce	1875.
13.	Ceremonial Institutions Data of Ethics	1879.

ஆராய்ச்சி மேடை.

"தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்."

இஃது மஹாத்மா காந்தி யடிகளார் எழுதிய ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும் இன்று இந்திய அரசியல் மேடையில் ஒப்பற்றத் தலைவராக விளங்கும் மஹாத்மாஜியின் அரசியற் போரின் உண்மைத் தத்துவங்களையும், முறைகளையும் உள்ளவாறு அறிந்து கொள்ள வேண்டியது இந்திய மக்களின் இன்றியமையாத கடனாகும். தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்களால் இந்திய மக்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களைப் பொறுப்பதற்குக் காந்தி யடிகளாரோடு கூடி இந்திய மக்கள் அந் நாட்டில் எவ்வாறு சத்தியாக்கிரகப் போரைத் தோற்றுவித்து, நடத்தி வெற்றி யுற்றார்களென்பதை அடிகளார் தெளிவாக இந் நூலில் எழுதி யிருக்கிறார்கள். மகாத்மாஜியின் நூல்கள் பல தமிழ் மொழியிற் மொழிபெயர்க்கப்பட் டிருக்கின்றனவாயினும் இந் நூல் இதுகாறுந் தமிழில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. அக் குறையைத் தீர்க்கும் முகத்தால் நம் அன்பர்களாகிய திருவாளர்கள் T. S. அவனசிலிங்கம், B A., B L., N. M. R. சுப்பராயன் ஆகிய இருவருங் கூடி இதனை எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இதைப் படித்துப் பார்க்கையில் மொழிபெயர்ப்பென்பது தெரியாமல் முதல் நூலெனவே வாசகர்களை மகிழ்விக்கும் பான்மையி லமைந்திருக்கிறது. மொழிபெயர்ப் பாசிரியர்கள் தமிழகத்திற்கு இந் நூலின் முகத்தாற் செய்த தொண்டு பெரிதும் போற்றத் தக்கதாகும். தென்னாப்பிரிக்கா சரித்திரத்துடன் ஆரம்பமாகி, இந்தியர்கள் சத்தியாக்கிரகப் போரை நடத்தி, முதல் வெற்றியாக டிரான்ஸ்வால் துரைத்தனத்தாருடன் செய்து கொண்ட முதல் ஒப்பந்தத்துடன் இருபத்தோ ரதிகாரங்களோடு இம் முதல் பாகம் முடிவடைந் திருக்கிறது. நல்ல கடிதத்தில் கிரவுண் $\frac{1}{8}$ அளவில் பிழையற அச்சிடப்பட்டு 270 பக்கங்களுக்கு மேற்கொண்டு விளங்குகிறது. மகாத்மாவின் உருவத்துடன் தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரக இயக்கத்திற்குச் சம்பந்தப்பட்ட பல தலைவர்களின் படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இந் நூலை இத்துணைச் சிறந்த முறையில் நிறைந்த கவனத்துடன் அச்சுவாக்கை மேற்றிப் பிரசுரித்த நமது நேயரும "காந்தி" பத்திரிகையின் ஆசிரியருமாகிய திருவாளர் தெ. ச. சொக்கலிங்கம் அவர்களின் உதவியும் தமிழர் மறக்கற்பாலதன்று.

இதன் மொழிபெயர்ப்பாளர்களும், பிரசுரகர்த்தருமாகிய நண்பர்கள் இதன் பிற் பகுதியையும் விரைவில் வெளியிடுவதோடு, மேன்மேலும் இது போன்ற மற்றும் பல அரிய நூல்களைத் தமிழ் மக்களுக்குக் கொடுத்துதவ முந்துவார்களென நம்புகிறோம். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இந் நூலைப் படிக்க வேண்டுவது இக் கால நிலைக்கு மிக மிக அவசியமென வற்புறுத்த வேண்டுவது எமது கடமையாகும். இதன் விலை ரூபாய் ஒன்று. விரும்புவோர் சென்னை "காந்தி" பத்திரிகாலயத்திற்கு எழுதுவார்களாக.

N. V.

"மணிக்கொடி"

ஒரு வாரப் பத்திரிகை.

கிடைக்குமிடம்:— 35, செம்புதாஸ் வீதி, சென்னை.

சந்தா உள் நாடு ரூ. 3—8—0; அயல் நாடு ரூ. 5—0—0.

"மணிக்கொடி" என்ற இத் தமிழ் வாரப் பத்திரிகையின் 15-வது மணிவரையில் வெளிவந்திருக்கிறது. ஸ்ரீமான்கள் K. ஸ்ரீநிவாசன் அவர்கள், T. S. சொக்கலிங்கம் அவர்கள், வ. ராமசாமி அய்யங்காரவர்கள் ஆகிய இவர்களால் இப் பத்திரிகை பதிப்பிக்கப் படுகிற தென்றால் இம் "மணிக்கொடி"யைப் பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. இவர்களைத் தமிழகம் நன்கறியும். நல்ல வாரப் பத்திரிகைகள் அருகி வரும் இக் காலத்தில், தமிழ் மக்களுக்குத் தேசாபிமானத்தையும் பாஷாபிமானத்தையும் தமிழ் மக்களுக்கு ஊட்ட வெளி வரும் இம் "மணிக்கொடி"யைப் பெரிதும் போற்றுகிறோம்.

புதிய முறையில் நவ நவமான விஷயங்கள் நவீன சுவைகளுடன் இதில் காணப்படுகின்றன. அனாவசியமாக ஒரு வரியேனும் காணப் படவில்லை. 'சுதந்திரப் பண்ணை' என்ற தலைப்பில் அரிய விஷயங்கள் பிரகாசிக்கின்றன. வ. ரா. வினது உயரிய பேனா முனையிலிருந்து வெளிவரும் எழுத்துக்கள் இப் பத்திரிகையை அலங்கரிக்கின்றன. ஊர் வீண் வம்புகள், குதர்க்கங்கள், வீணான செய்திகள் முதலியவைகளுக்கு இதில் இடமே கிடையாது. எளிய நடை; ஆரம்ப முதல் கடைசிவரை சங்கதிகள்; குறைந்த சந்தா. இப் பத்திரிகையை ஆதரித்து வளர்க்க வேண்டியது தமிழர்கள் தம் கடமையாகும்.

சுவாமி.

ஆசிரியக் குறிப்புகள்.

ஆசிரியரின் அறிக்கை 1

"பாரதி"யில் வெளிவந்த அநேக உயரிய வியாசங்களைத் தொகுத்துச் சிலர் பாடப் புஸ்தகங்களாக வெளியிட்டிருக்கிறார்கள். எமது அனுமதியைப் பெறாது இவர்கள் இப்படிச் செய்தது முற்றிலும் தவறு. எமது "பாரதி"யில் வெளிவந்த எவர் எழுதிய கட்டுரைகளாயிருப்பினும், எமது உத்திரவைப் பெற்றே மறுபடியும் எவரும் பிரசுரிக்கவேண்டும். வியாசம் எழுதியவருக்குமட்டும் எழுதி அனுமதி பெற்றால் செல்லாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். பிரசுரர்களான எமது அனுமதியின்றி எவரும் "பாரதி"யின் கட்டுரைகளைப் புஸ்தக ரூபமாகப் பிரசுரிக்கக் கூடாதென்று அறிவித்துக்கொள்ளுகிறோம்.

பட்டினங்களிலிருக்கும் சிலர் "பாரதி"யில் பிரசுரிக்கப்பட்ட நல்ல கட்டுரைகளைத் திரட்டித் தங்கள் பெயரால் வெளியிட்டுப் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்க, இப் பத்திரிகை கிராமங்களிலிருந்து வெளிவரினும், கிராம ஜனங்கள் இதன் அருமையை அறியாது இதைத் தக்கபடி ஆதரியாதிருப்பது வருந்தத் தக்கதேயாம்.

பரோடாவில் ஹிந்தி

பரோடா சமஸ்தானத்தில் கோர்ட்டு நடபடிக்கைகளெல்லாம் இனிமேல் ஹிந்தி பாஷையிலேயே இருக்க வேண்டுமென அச் சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறார்கள். கல்வி இலாக்காவிலும் பள்ளிக் கூடங்களிலும் ஹிந்தி கட்டாயப் படிப்பாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அச் சர்க்காரில் உத்தியோகம் பெற விரும்புபவர்கள் ஹிந்தியில் தேர்ச்சி அடைந்திருப்பதாக நற்சாட்சிப் பத்திரம் காட்டவேண்டும். இம் மாதிரியிருந்தால், ஹிந்தி வெகு விரைவில் பரவிவிடும்.

லமூரியாவைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி

இந்தியா, ஆப்பிரிக்கா, மலேயா முதலிய நாடுகளுடன் லமூரியா அல்லது கண்டவனம் என்ற பூ பாகம் இணைந்திருந்ததாகக் கூறுகிறார்கள். பிற்காலத்தில் இது கடலில் மூழ்கிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. கடல் கொண்ட இந்த லமூரியாவைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இறங்கிய சர். ஜான் மர்ரே காலம் சென்றுவிட்டார். அவர் உயிலால் வைத்துவிட்டுப்போன நிதியைக்கொண்டு அந்த ஆராய்ச்சிக்

காக லெப்டினண்ட் கர்னல் ஸெமூர் ஸீவெல் என்பவரின் தலைமையின்கீழ் ஒரு கோஷ்டி புறப்பட்டிருக்கிறது. மேன்மை தங்கிய எகிப்து மன்னரவர்கள் ஒரு கப்பலை இவர்களுக்குக் கொடுத்து உதவியிருக்கிறார். இவர்களுடைய ஆராய்ச்சியில் வெற்றி கிடைப்பதாக! பண்டை இந்தியாவின் பெருமை வெளிவருவதாக!

பத்திரிகைகளுக்கு அடக்குமுறை

எந் நாட்டில் பத்திரிகைகளுக்கு உரிமை இல்லையோ அந் நாடு வாயற்று ஊமையாய்க் கிடக்கிறதென்று சொல்லலாம். நமது இந்தியாவில் அநேக பத்திரிகைகள் சர்க்காரால் அடக்கப்படுகின்றன. திடீர் திடீரென்று பத்திரிகைகளை அடக்கி ஒடுக்கும் சர்க்காரை நாம் கண்டிக்கிறோம். நாட்டுக்கு நலம் செய்யும் அஞ்சா நெஞ்சு படைத்த பத்திரிகைகள் உயிரற்றுப் போவதைக் கண்டு நாம் மிகவும் வருந்துகிறோம். பத்திரிகைச் சுதந்திரமும் பேச்சுச் சுதந்திரமும் இன்றி, ஒரு நாடு அபிவிருத்தி அடையவே முடியாது.

ருஷியாவின் 5 வருடத் திட்டம்

ருஷியாவின் அபிவிருத்திக்காக 5 வருடத் திட்டமிட்டு வேலை செய்து, அதில் ருஷியர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஒழுங்கான சாஸ்திரீய முறையில் வட துருவத்தைக் கண்டுபிடித்தவர்கள் ருஷியர்களே. சோவியத் பனி உடைக்கும் கப்பல்கள் வடகிழக்கு வழியாய் வெண்கடலிலிருந்து பஸிபிக் மகாசமுத்திரத்திற்குச் சென்று வட துருவத்திற்கு வழியை உண்டாக்கி யிருக்கின்றன. இந்த 5 வருடத் திட்டத்தை 3½ வருடங்களுக்குள்ளேயே முடித்துவிட்டது. வட துருவத்திற்கு இப்பொழுது வியாபாரக் கப்பல்கள் போய் வந்துகொண்டிருக்கின்றன. 158,500 டன் மரமும், உரோமமும் அங்கிருந்து 1930-ம் வருஷத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. துருவ தேசங்கள் தாண்ட முடியாத பனி மலைகளால் மற்ற நாகரீகமடைந்த தேசங்களோடு அடைபட்டிருந்தது போல்ஷ்விக்காரரின் அபார முயற்சியால் வெளிவந்திருக்கின்றன. இன்னும் எத்தனையோ புதுமைகளைக் கண்டுபிடிக்கப் போகின்றார்கள் ருஷியர்கள்.

ஆசிரியரின் அறிக்கை 2

எம்மால் எழுதப்பெற்ற வியாசத்திற்கு இடமில்லை. அடுத்து வரும் பத்திரிகையில் டிசம்பர் மாதத்தில் கூடிய மகாநாடுகளைப்பற்றியும் வெளிவரும். ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரது விஷயங்களுடன் அவரது உருவப்படமும் வரும்.

பொறுப்பாசிரியர் நா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரஸில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

600 008

T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 9,00,000 பங்குகளின்பேரில் 27,00,000 ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப்பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்தும் கம்பெனி மெம்பர்களிடம் கன்செயின்மெண்டில் சரக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக் கனுப்பிவைத்தும் பாம்பை, கல்கத்தா, கராச்சி, டில்லி, கான்பூர், அம்ரிட்ஸார், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்துவருவதோடு சக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆதரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்துவரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும் நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும், இக்கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்க புகழையுமடையும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்),
கோம்பை மதுரை ஜில்லா.

நமது புதிய பிரசுரங்கள்

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்
நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

"தமிழ் நாடு" ஆசிரியர்
டாக்டர் P. வரதராஜலு நாயுடு அவர்களின்
முகவுரையுடன் கூடியது.

தோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்
ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற
சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.
விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆப்டோன்
படங்களுடன் கூடிய
ஆர்ட் & கிளேஸ் பதிப்பு விலை ரூ. ***1—4—0.***
தபால் செலவு வேறு

ராட்டூர்- *-வீரன்-* துர்க்கா தாஸ்

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்)
வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்
எழுதியது.

அவைது நாடகங்களுக்குள்ளெல்லாம்
<u>இத் துர்க்கா தாஸே முதன்மையானது.</u>

ஆரம்ப முதல் இறுதி வரை

அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! **அலங்கார பாஷை!!**
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!
கிரௌன் ⅛ சைஸ்

380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. **1—4—0.**
தபால் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம். உத்தமபாளையம்.